Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு
வார மலர்

மலர் 11 | சௌமிய மார்கழி 15 | ஷவ்வால் 20 | (30-12-69) | செவ்வாய்க்கிழமை | இதழ் 320




# யாழ். நவீன மார்க்கட் வேலை ஸ்தம்பிக்குமா?

## அரசாங்க உதவி கிடைக்குமென மேயர் நம்பிக்கை

(நமது அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 70ம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் சுமார் 8 மணிநேர விவாதத்தின்பின்னர் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு ஏகமனதாக நிறைவேறியது. நவீனமார்க்கட்கட்டுவதற்கு 69ம் ஆண்டு அரசாங்கம் கடனாக தரவேண்டிய சுமார் 6 லட்சம் ரூபாவினால் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பற்றாக்குறை சரிக்கட்டப்பட்டு உபரி வரவு செலவுத் திட்டமாக நிறைவேறியது. அரசாங்கம் நவீன மார்க்கட்டுக்கு கடனாக 69ம் 70ம் ஆண்டுகளுக்கு 12 லட்சம்தர வேண்டியிருப்பதாகவும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

மேயர் திரு. எஸ். நாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம், பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பமாகி நடளிரவு 12 மணிக்கு முடிவடைந்தது.

அரசாங்கம் நவீன மார்க்கட் கட்டுவதற்கு தரவேண்டிய கடனை இன்னும் தராததால், மார்க்கட் கட்டட வேலைகளை நிறுத்தி, உள்ளூராட்சி மந்திரிக்கு தந்தி அனுப்பும்படி திரு. ஏ ரி. துரையப்பா கேட்டுக்கொண்டார்.

அரசாங்கம் மார்க்கட் கட்டுவதற்கு தரவேண்டிய கடனைத் தராதுவிட்டால் நவீன மார்க்கட் வேலைகள் நின்றுவிடுமென்றும், கடன்கிடைக்கும் என்ற நம்பிக்கையிருப்பதாகவும்மேயர்தெரிவித்தார்

வரவுசெலவுத்திட்டத்தை ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைக்கவேண்டுமென்றும், அதற்கிடையில், வட்டார வேலைகள்பற்றி நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டுமென்றும் திரு. கே எஸ். நடராசா கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தை ஒத்திவைப்பது மாநகரசபை கட்டளைச் சட்டங்களுக்குமாறாக இருப்பதால் அ சாத்தியமாகாதென்று மேயர் தெரிவித்தார்

மேயர் நாகராசா கூறியதாவது: இந்த வருடத்தில் யாழ்ப்பாணப்பகுதியில் பல முன்னேற்றங்கள் நடைபெற்றுள்ளது. நவீன சந்தைக்கு இவ்வருடத்தில் ஒப்பந்தம் எழுதப்பட்டது. சிறுவர் பூங்காவொன்றும் நிறுவப்பட்டுள்ளது. ஒழுங்கை, ரோட்டு, வடிகால் திருத்தங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்றகாலத்திலும் பார்க்க இவ்வருடம் அபிவிருத்திகளுக்காக கூடிய பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. தண்ணீர் வசதியில்லாத இடங்களுக்கு தண்ணீர் வழங்குவதற்கும் இவ்வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது

### உபகாரச் சம்பளம் பெற்று படித்தவர்

## ரஷ்ய பஸ் விபத்தில் சாவகச்சேரி இளைஞர் பலி

(மட்டுவில் நிருபர்)

ஆறுவருட ரஷ்யா அரசாங்கப் படிப்பை முடித்துக்கொண்டு இங்கு திரும்ப இருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த இருபத்தாறு வயது இளைஞரான பி. பொன்னம்பலம் ரஷ்யாவிலேயே பஸ் விபத்தொன்றில் மாண்டார். இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி பழைய மாணவராவர்.

ஜனவரி 6-ந் திகதி இவர் இலங்கை திரும்புவதாக இருந்தது. ஆனால் அதற்குள் காலன் அவரைக் கவர்ந்துவிட்டான். இவர் பயணஞ்செய்த பஸ் விபத்தில் சிக்கிய, எல்லோருமே மாண்டுபோனார்கள்.

இவரது சடலம் விசேஷ விமானமூலம் இலங்கை கொண்டுவந்து சேர்ப்பிக்கப்பட்டது இறுதிக் கிரியைகள் சாவகச்சேரியில் நேற்று நடந்தன,

### மட்டக்களப்பில் பெருவெள்ளம்

## மீட்பு வேலைகளுக்கு உடன் உதவி அளிக்குக

### மட்டக்களப்பு மாவட்ட அதிபர் அவசர வேண்டுகோள்

மட்டக்களப்பு, திங்,

தொடர்ந்து நாடெங்கும் பரவலாகப் பெய்துவரும் மழை மட்டக்களப்புமாவட்டத்தில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது, ஏறாவூர், கோறளைப்பற்று ஆகிய இடங்களில் சுமார்பதினைந்து ஆயிரம் வீடுகள் நாசமாகிவிட்டதால் மக்கள் பெருத்த அவதிக்குள்ளாகியுள்ளனர், அம்பாறை, இககினியாகல உட்பட மற்றும் இடங்களில் சுமார் 5000 வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் இவ்வீடுகளில் குடியிருந்தவர்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, அம்பாறை, பொலன்நறுவ ஆகிய இடங்களுக்குபோக்குவரத்து செய்யமுடியாதபடி வீதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன,

மட்டக்களப்பிலிருந்து காத்தான்குடி வரையுமே பஸ்சேவை நடைபெற்று வருவதாகவும் வீதிகளில் வெள்ளம் தேங்கிநிற்பதால் கல்முனை, பொத்துவில், அம்பாறை, இககினியாகல முதலான இடங்களுக்கு பஸ் சேவை நடாத்த முடியாமலுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு ஏங்கிக் கிடக்கும் மக்களுக்கு உடனடியாக நிவாரணஉதவி அளிக்கும்படியும் மீட்பு வேலைகளுக்கான படகுகள், வாகனங்கள், உத்தியோகத்தர்களை அளித்து உதவும்படியும் மட்டக்களப்பு மாவட்ட அதிபர் திரு தேவநேசன் நேசையா சம்பந்தப்பட்ட

(16-ம் பக்கம் பார்க்க)

### குளங்கள் நிரம்பின

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக வடக்கிலும் கிழக்கிலும்உள்ள பலகுளங்களில் நீர் நிரம்பி வழிகின்றது. இரணைமடுவும் நிரம்பி வழிகிறது. எந்தக்குளமும் உடைபெடுக்கவில்லையென நீர்ப்பாசன இலாகாவினர் தெரிவித்தனர்.

## "சபை உறுப்பினர்களே தலைவரை தெரியவேண்டும்"

### ஜெயசூரியா கமிஷன் முன் யாழ். நகர மேயர் சாட்சியம்

(நமது அலுவலக நிருபர்)

"சபை உறுப்பினர்கள்தான் மேயரையோ அன்றி உள்ளூராட்சி மன்ற தலைவர்களையோ தெரிவு செய்ய வேண்டும்" என்று யாழ். மேயர் திரு. எஸ். நாகராசா உள்ளூராட்சி விசாரணைக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

திரு வி. சி ஜெயசூரியா தலைமையிலான கமிஷன் யாழ். மாநகர மண்டபத்தில் நேற்றுக்காலை விசாரணை நடாத்தியது.

இக்கமிஷனில் டாக்டர் அமரசிங்கா திரு. எஸ். சில்வா ஆகியோர் அங்கம் வகித்தனர்,

மேயர் மேலும் சாட்சியமளிக்கையில் வரியிறுப்பாளர்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களே மேயரைத் தெரிவு செய்யவேண்டும். பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்த பின்னர் தமது கடமைகளைச் செய்யமுடியாது

யாழ். வரியிறுப்பாளர் சங்கம், வி. பொன்னம்பலம், ரி. எஸ். துரைராசா மற்றும்பலர் சாட்சியமளித்தனர்.

## ஜாதிக சம்பத கவீப் முடிவுகள்

கொழும்பு, திங்கள்

இன்று மாலை இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத சுவீப் டிக்கட்டுகளின் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
12 K 000124 ரூ 1,50,000

இரண்டாம் பரிசு
14 V 001663 ரூ 1,25,000

மூன்றாம் பரிசு
18 Q 000272 ரூ 1,00,000

தலா ரூ 200 பரிசுபெறும் டிக்கட்டுகள்,

| | |
|---|---|
| 06 G000617 | 10 C 001233 |
| 06 H 00783 | 03 N001189 |
| 17G000995 | 21F001281 |
| 22H001997 | 01S000158 |
| 07D001624 | 01W001410 |
| 21F001897 | 09 T00176 |
| 19B001425 | 14Q001340 |

மிகுதி நாளை வெளிவரும்

### அபின் கடத்தல் விசாரணை

## கைதான மூவருக்கும் ரூ. 10,000 அபராதம்

யாழ்ப்பாணம், செவ்.

அபின் கடத்தியதாக சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்ட மூவருக்கு யாழ்ப்பாணம் சுங்கஇலாகா உதவி கலெக்டர் திரு. எஸ். என். ஜே. செனரத்ன 10,000 ரூபா அபராதம் விதித்தார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்டதாக கூறப்படும் ஆறுலட்சம்ரூபா பெறுமதியுள்ள அபினை இராணுவவீரர்கள் காரைநகர் கடற்கரைக்கு அருகில்கைப்பற்றினர்.

இச்சம்பவத்தையொட்டி கைதான மூவரையும் கைப்பற்றப்பட்ட அபினையும், வள்ளத்தையும், இராணுவத்தினர் சுங்க இலாகாவிடம் ஒப்படைத்தனர்.

சுங்கஇலாகா உதவிகலெக்டர் நடத்திய விசாரணையில் 643 றாத்தல் அபின் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. விசாரணையின்போது சுங்க இலாகாவைச் சேர்ந்த எம். கே, அனுவரத்தின உதவியாக இருந்தார்.

காரைநகர் கடற்கரைக்கு 3 மைல் தொலைவில் படகு ஒன்று வேகமாகச் செல்வதைக்கண்ட, இராணுவத்தினர் படகுவரும் திசையை நோக்கிச்சென்று படகில் சென்றவர்களை கைது செய்தனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# பல்கலைக் கழகம் வெறும்கண்துடைப்பா?

தமிழ்ப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுமா?

பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்காகத்தானே தேசிய உயர்கல்விச் சபையிடம் கல்வி அமைச்சர் கருத்தைக் கோர, உயர் கல்விச்சபை பொதுமக்களிடமிருந்து கருத்துக்கோரியிருக்கிறது. இன்னும் ஏன் இந்த சந்தேகம் என்று சிலர் கேட்கலாம்.

கருத்துக்கோரியிருப்பது தான் சந்தேகத்தை அதிகரித்திருக்கிறது.

எந்தப் பிரச்னைக்கும் பொதுமக்களின் கருத்தைக் கேட்காத கல்வி அமைச்சரும் அரசாங்கமும் இந்தப் பல்கலைக்கழக விஷயத்தில் மட்டும் பொதுமக்களின் கருத்தைக் கேட்க முன்வந்தது ஏன்?

தமிழ்ப் பிள்ளைகளின் போதனுமொழி தாய்மொழியான தமிழாகவே இருக்க வேண்டுமென்று தமிழ்ப் பெற்றோரும் தமிழ்ப் பிரதிநிதிகளும் கேட்டுவந்தும் அதற்கு இதுவரை சம்மதமளிக்கவில்லை, கல்வி அமைச்சர். போதனுமொழி விஷயத்தில் பொதுமக்களின் கருத்தைக் கேட்கவேண்டுமென்று அவர் யோசிக்கவில்லை. வேறு எந்தப் பிரச்னையிலுமே கல்வி அமைச்சரோ அரசாங்கமோ பொதுமக்களின் கருத்தை அறிய முன்வந்ததில்லை. மாவட்ட சபைகள் விஷயத்திலாவது தமிழ்மக்களின் கருத்தை அறிந்திருக்கலாம். மாவட்ட சபைகள் வேண்டுமென்று தமிழரசுக் கட்சியினரும் வேண்டாமென்று தமிழ்க் காங்கிரஸாரும் கூறிவந்தனர். இதேபோல்தான் வடக்கில்தான் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று தமிழ்க்காங்கிரஸாரும் வடக்கிலும் கிழக்கிலும் அமைக்கவேண்டுமென்று தமிழரசாரும் கோரி வந்தனர். பல்கலைக்கழக விஷயத்தில் மட்டும் மக்களின் கருத்தைக் கோரமுன் வந்ததன் நோக்கம் என்ன?

வடக்கில்தான் பல்கலைக் கழகம் அமைக்கப்படவேண்டுமெனச் சிலர் கூறுகின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் அமைக்கவேண்டுமென வேறு சிலர் கோருகின்றனர். கிழக்கில் திருக்கோணமலையில்தான் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென மற்றும் சிலரும் மட்டக்களப்பில்தான் அமைக்க வேண்டுமென இன்னொரு சாராரும் கோருகின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் கோரிக்கைகளுக்கு ஆதாரமாக சான்றுகள் காட்டுகின்றனர். தேசிய உயர் கல்விச் சபையினரைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு முடிவுக்கு வருவதாக இருந்தால் அது பெரிய தலையிடியாகத்தான் இருக்கும்.

நினைத்தவுடனே திடீர் திடீரென தென்னிலங்கையில் பல்கலைக்கழகங்களை உருவாக்கியவர்கள் வடக்கிலோ, கிழக்கிலோ ஒருபல்கலைக்கழகம் அமைப்பதற்கு இவ்வளவு ஆலோசனையும் தயக்கமும் ஏன்?

அவசரக்கோலத்தில் அள்ளித் தெளித்தமாதிரி வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களை உருவாக்கினர். முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல இந்தப் பல்கலைக் கழகங்களின் விளைவைநேரில் அனுபவித்தவர்கள் அப்பாவிகளான றேயல் கமிஷன் அங்கத்தவர்கள்தான். அந்தக்கமிஷனை நியமித்த அரசாங்கம் அதனிடமே தமிழ்ப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமான விஷயத்தையும் விடாமல் தேசியஉயர்கல்விச் சபையிடம் கருத்தறிய முற்பட்டது சந்தேகத்தைவலுப்படுத்துவதாக இருக்கிறது.

தமிழ்ப் பகுதியில் வடக்கு மாகாணத்திலென்றாலும்சரி, கிழக்குமாகாணத்திலென்றாலும்சரி அல்லது இரண்டு மாகாணங்களிலும் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு தேசிய உயர் கல்விச்சபை சிபார்சு செய்து அதைக் கல்வி அமைச்சரும் வற்புறுத்தி அரசாங்கமும் ஒப்புக்கொண்டு பல்கலைக் கழகம் அமைக்க முடிவு செய்துவிட்டது என்றுவைத்துக்கொள்வோம்.

எப்படிப்பட்ட பல்கலைக் கழகம் கிடைக்கும்? பேராதனைப்பல்கலைக்கழகம் அமைப்பதற்கு சுமார் 7 கோடி ரூபாய் செலவானதாம். இந்த அளவுக்கு தமிழ்ப் பகுதியில் அமைக்க அரசாங்கம் உத்தேசிக்கும் (தீர்மானித்தால் என்பது வேறு) பல்கலைக்கழகத்துக்கு செலவிட முன்வருமா?

கற்றோரும், பெற்றோரும், மற்றோரும் தங்கள்முயற்சியினால் வடபகுதியில் பல பாடசாலைகளையும் உயர்ந்த தரத்துக்குக் கொண்டுவந்ததுடன் விஞ்ஞானகூடங்களையும் அமைத்து இப்பகுதிப் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கு வழி வகுத்துக்கொடுத்தது, கல்வியமைச்சருக்குப் பொறுக்காமல் செய்த காரியங்கள் கொஞ்சமல்ல. அப்படிப்பட்டவர் தமிழ்ப்பகுதியில் பூரண வசதியுள்ள பல்கலைக்கழகம் அமைப்பதற்கு முன்வருவாரா? ஏழு கோடி ரூபா செலவுசெய்து பேராதனையில் கட்டப்பட்ட பல்கலைக் கழகத்துக்கு ஈடாக இல்லாவிட்டாலும் எத்தனை லட்சத்தை இங்கு பல்கலைக் கழகம் அமைக்க அரசாங்கம் செலவிடப்போகிறது?

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிக்கலை அடிக்கடி வற்புறுத்தி வந்தும், நீடாம் கமிஷனும் மற்றும் கமிஷன்களும் சிபார்சு செய்தும் கூட யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க இதுவரை முன்வராதவர்கள் இனித்தானா தமிழ்மக்களின் கோரிக்கையை அப்படியே

16-ம் பக்கம் பார்க்க

## உலக மேடை

# 'சிண்டிகேட்', 'இண்டிகேட்' மகாநாடுகள்

திரு. நிஜலிங்கப்பா தலைமையிலுள்ள 'சிண்டிகேட்' காங்கிரசின்மகாநாடு குஜராத் மாநிலத்தின் தலைநகரான ஆமதாபாத்துக்கு அருகே நடந்து முடிந்த சில தினங்களுக்குள் திருமதி இந்திராகாந்தியின் தலைமையிலான 'இண்டிகேட்' காங்கிரஸின் மகாநாடு மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் நடைபெற்றிருக்கிறது.

குஜராத் என்றும் மகாராஷ்டிரம் என்றும் இரண்டு ராஜ்யங்கள் உருவாவதற்கு முன்னர் பம்பாய் ராஜ்யம் என்ற ஒன்றுதானிருந்தது. பம்பாய்ராஜ்யத்தின் முதன் மந்திரியாக திரு. மொரார்ஜி தேசாய் இருந்தபோது அவரது மந்திரிசபையில் ஓர் அமைச்சராக இருந்தவர் திரு. வை. பி. சவான். குஜராத், மகாராஷ்டிரக் கிளர்ச்சி வலுத்து வன்முறைச் சம்பவங்கள் தலையெடுத்தபோது மொரார்ஜி சிறிதும் விட்டுக் கொடுக்க மறுத்து பொலிஸ் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினார். துப்பாக்கிப் பிரயோகத்தில் பல உயிர்கள் பலியாகின. மகாராஷ்டிரர்களை வேண்டுமென்றே கொன்றுகுவிப்பதாக மொரார்ஜிமீது மகாராஷ்டிரர் குற்றம்சாட்டினர். மந்திரி சபையிலும் நெருக்கடி ஏற்பட்டது. மொரார்ஜியின் உயிருக்கே ஆபத்துநேரலாம் என்ற அச்சம் தோன்றியது. நிலைமையைச் சமாளிக்க மொரார்ஜியை பம்பாயிலிருந்து புதுடில்லிக்கு அழைத்து மத்திய மந்திரிசபையில் ஓர் அமைச்சராக்கினார் பண்டித ஜவஹர்லால்நேரு. இது பழைய கதை.

குஜராத்தில் மொரார்ஜிக்குள்ளசெல்வாக்கைஎடுத்துக்காட்டவும் இந்தியாவின் பிரதமராகப் பதவிவகிக்க மொரார்ஜிதான் தகுதியுடையவர் என்பதைக்காட்டவும் 'சிண்டிகேட்' காங்கிரஸார் குஜராத்தில் மகாநாடு நடத்தினர். மகாராஷ்டிரம் பிரதமர் திருமதி இந்திரா தலைமையிலுள்ள காங்கிரசையே ஆதரிக்கிறதென்பதையும் திரு. சவான் எந்தப்பக்கம் நிற்கிறாரோ அந்தப் பக்கத்தையே மகாராஷ்டிரர்கள் ஆதரிக்கிறார்களென்பதையும் எடுத்துக்காட்டவும் இந்திராவுக்குப் பின் நாட்டை வழிநடத்த மொரார்ஜீயையும், காமராஜரையும்விட சவான்தான் தகுதியுடையவர் என்பதைக் காட்டவும்மகாராஷ்டிர தலைநகரில் இந்திரா தலைமையிலான 'இண்டிகேட்' காங்கிரஸார் மகாநாடு நடத்தியிருக்கின்றனர்.

காங்கிரஸிலிருந்து பிரதமர் திருமதி இந்திரா காந்தியை வெளியேற்றியது சரியான செயல் என்று நிஜலிங்கப்பா தலைமையிலான 'சிண்டிகேட்' காங்கிரஸ்மகாநாடு தனது பழைய தீர்மானத்தை உறுதிப்படுத்தியது. பம்பாயில் கூடிய இந்திராவின் 'இண்டிகேட்' காங்கிரஸ் மகாநாடும், திரு. நிஜலிங்கப்பாவை காங்கிரஸிலிருந்து விலக்கிய புதுடில்லி கமிட்டிக் கூட்டத் தீர்மானத்தை அங்கீகரித்திருக்கிறது.

இரண்டு காங்கிரஸ்காரர்களும் ஒருவர் மீது ஒருவர் வசைபாடியிருக்கின்றனர். வெளிப்பிரச்னைகளை விட்டுவிட்டனர்.

நிஜலிங்கப்பா காங்கிரஸில் பழைய காங்கிரஸ்தலைவர்களில் ஒருவரான ஆச்சார்யா கிருபளானிபோய்ச் சேர்ந்திருக்கிறார். அவர் ஒரு சோஷலிஸவாதி. பிரஜா சோஷலீஸ்ட்கட்சித் தலைவராயிருந்து பண்டித நேருவினால் திட்டக்கமிஷனுக்குள் கொண்டுவரப்பட்டு பின்னர்

எஸ். எம். ஜி.

காங்கிரஸ் மந்திரிசபைக்குள் புகுந்து இந்திராவினால் மந்திரிசபையிலிருந்து கைவிடப்பட்ட சோஷலிஸவாதியான அசோக்மேத்தாவும் நிஜலிங்கப்பா குழுவில் சேர்ந்திருக்கின்றார். தீவிர சோஷலிஸ்டுகளான முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனனும் முன்னாள் உள்துறை அமைச்சரான குல்ஸாரிலால் நந்தாவும் இந்திராவுடன் சேர்ந்திருக்கின்றனர்.

இந்தியக் காங்கிரஸ் பிரிந்தேவிட்டது. இனி அது இணையும் என்ற நிலை இப்போதைக்கு இல்லை. இரண்டும் காங்கிரஸ் என்ற பெயரை விடவில்லை.

காங்கிரஸில் தீவிரவாதிகள்; மிதவாதிகள் என்று இருபிரிவு எப்போதுமேஇருந்துவந்திருக்கிறது. ஆனால் இப்போதுதான் இரண்டும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது. நிஜலிங்கப்பா காங்கிரஸ் எப்படியும் இந்திராவைப் பதவியிலிருந்து அகற்றத் தீவிரமாக முயற்சி செய்யும் என்று எதிர்பார்க்கலாம். ஆனாலும் இப்போதுள்ள நிலையில் இது சாத்தியமில்லை.

காங்கிரஸின் பிளவு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்னும் இருபதாண்டுகளுக்குமேல் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிபீடத்திலிருப்பதற்கு வாய்ப்பளித்திருக்கிறது.

# டால்மியாபுரமும் கல்லக்குடியும்

## டால்மியாவும் கருணாநிதியும்

டால்மியா என்ற வடநாட்டு முதலாளி தமிழ்நாட்டிய ஓர்இடத்தில் தொடங்கிய சிமெந்து ஆலையிலிருந்து சிமெந்தை வெளியே கொண்டுசெல்லவும் ஆலைக்குத் தேவையான மூலப் பொருள்களைக் கொண்டுவரவும் அமைத்த ரயில் நிலையத்துக்கு டால்மியாபுரம் ரயில்நிலையம் என்றும், சிமெந்துஆலை அமைந்த இடத்துக்கு டால்மியாபுரம் என்றும் பெயர்வைத்தார். இந்தப்பெயரை நீக்கி அந்த இடத்தின் பழங்காலப்பெயரான 'கல்லக்குடி' என்று பெயர் வைக்கப்படவேண்டுமெனக்கோரி காங்கிரஸ் ஆட்சிபீடத்திலிருந்தபோது திரு. மு. கருணாநிதி தலைமையில் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்திய திராவிட முன்னேற்றக் கழகம். தடியடிபட்டவர்கள்பலர். கருணாநிதியும் மற்றும் பலரும் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். டால்மியாபுரம் என்றபெயர்மீது 'கல்லக்குடி' என்று எழுதப்பட்ட கடதாசியை ஒட்டினார்கள். பொலிசார் கிழித்தெறிந்தனர். இன்றுவரை 'டால்மியாபுரம்' என்ற பெயரே இருந்து வருகிறது. திரு. கருணாநிதி டால்மியாபுரத்தை மறக்கவில்லை. மத்திய அரசுடன் தொடர்புகொண்டார். 'கல்லக்குடி' என்று பெயர்மாற்றுவதற்கு மத்திய அரசு சம்மதித்து விட்டது தி.மு கஅரசாங்கத்தின் மற்றொரு வெற்றி இது; தமிழ்நாடு காங்கிரசுக்கு மற்றொரு வீழ்ச்சி.

மற்றொரு வடநாட்டு முதலாளியான டாட்டா சமீபத்தில் முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசிய பொழுது தமிழ் நாட்டில் முதலீடு செய்து புதிய தொழில்களை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரக்கன்துறை என்பது மீன்பிடித் துறையே

**காங்கேசன்துறையின் அநாதிப்பெயர் குரக்கன்துறையல்ல என்றும், இங்கு மீன் பிடிக்கப்பட்ட ஆறு துறைகளிலொன்றே குரக்கன்துறையென்றும் கூறுகின்றார் இக்கட்டுரை ஆசிரியர்.**

**க. ஏரம்பமூர்த்தி**

காங்கேசன் துறையின் அநாதியான பெயர் குரக்கன்துறையெனவும் காங்கேசன்துறையில் உள்ள ஓர்வீர பத்திரர் ஆலயம் இதற்குச் சான்றுபகரும் எனவும் 8-12-69 'ஈழநாடு' இதழில் திரு. வ. குமாரசுவாமி அவர்கள் புராணங்களும் வரலாறுகளும் கூறும் தகவல்கள் என ஆரம்பித்த போதும் குரக்கன்துறைபற்றிக் கூறும் ஒரு நூலின் பெயரையாவது கூருமல்விட்டது ஏனோ?

குரக்கன், சாமை முதலிய தானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட பெரும்துறைமுகம் ஒன்று யாழ்ப்பாண அரசர் காலத்திலோ அன்றி அதற்கு முன்னரோ வட பகுதியில் இருந்திருக்குமாயின் வரலாறு கூறவந்த ஆசிரியர்களில் ஒருவராவது கூறியிருப்பார். பிறநாட்டவர்கள் வியாபாரம்செய்த துறை மாதோட்டம் என வரலாறுகள் கூறுகின்றனவேயன்றிக்குரக்கன்துறை எனக்கூறவில்லை.

**கதிர்காமர் வழிபட்ட கண்ணுதற்கடவுள்**

தோம்பு என்னும் சாசனம் தோன்றுமுன் காங்கேசன் துறைக் கரைப்பகுதியில் வாழ்ந்தவர்கள் இன்று கிழக்குப்பகுதியாரென அழைக்கப்படும் குருகுலமக்களும் தெலுங்குநாட்டுப் போர்வீரர் பரம்பரையில் உதித்த வடமர் என்பவர்களுமாம், குருகுலத்தவர்கள் படைவீரர்களாகவும் கப்பலோட்டிகளாகவும் இருந்தனர். தமிழரசர் காலத்துக்குப் பின் கதியின்றி இவர்களுட்சிலர்மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டனர். இவர்களிற்சிலர் ஓடைக்கரையில் வயல்தோட்டம் முதலியன செய்தனர். இன்று வயல்கள் செய்த இடங்கள்மறைந்துவிட்டன. காணி இடாப்புகளின் மூலம் இவற்றை அறியக்கூடியதாக இருக்கின்றன. வடமர் முதல்வனும் நரசிங்கம் என்பவர் வடுகனும் வைரவப்பெருமானைப் பூசித்து வந்தான். இன்றும் வடமரும் கிழக்குப்பகுதிக்குரு குலமக்களும் ஓடைக்கரையிலுள்ள வைரவப்பெருமானைத் தமது குலதெய்வமாகப் பூசித்து வருகின்றனர்.

தோம்பு தோன்றிய காலமாகிய 17-ம் நூற்ருண்டில் எழுவர், பூகர், புழையர் என்னும் மூன்று குருகுலத்தவர்கள் தெல்லிப்பழையிலிருந்து வந்து காங்கேசன் துறையிற் குடியேறினர். இவர்கள் குடியேறியபகுதி மேற்குப்பகுதி. இப்பகுதி இன்றும் தெல்லிப்பழையார் திக்கு என அழைக்கப்படுகின்றது. இம்மூவர் வாழ்ந்த காணிகள் எழுவர் வளவு, பூதர் வளவு, புழையர் வளவு எனக்காணிச் சாசனங்களிற் குறிக்கப்பட்டுள்ளன. காணிச்சாசனங்களில் "தெல்லிப்பழைக்கரை" என இருப்பதின் விளக்கம் அறியாதார் தெல்லிப்பழையோடு தொடர்புள்ள கிராமம் காங்கேசன் துறை எனக்கருதுகின்றனர். "தெல்லிப்பழைக்கரை" என்பது "தெல்லிப்பழைக் கரையார்" என்பதையே குறிக்கின்றது. இன்று இத் தெல்லிப்பழையார் திக்கில் வசிப்பவர்கள் அனைவரும் கிழக்குப்பகுதியில் வசிப்பவர்களிற் சிலரும் எழுவர், பூகர், புழையர் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகும். இம்மூவர் பரம்பரையில் வந்தவர்கள் வர்த்தகம் முதலிய தொழில்களையே செய்து வந்தனர். இவர்களுட்சிலர் சிவபூசைசெய்தன்றி உணவு கொள்ளாச் சித்தாந்த சைவர்களாகவும் இருந்தனர். காட்டைப்பார் என அழைக்கப்படுபவர்களிற் பெரும்பாலார் இன்னும் சுத்த சித்தாந்த சைவர்களாகவே இருக்கின்றனர். மிடியினால் வாடிய சில குடும்பத்தினர் சிறிது காலம் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுப்பின் அத்தொழிலைக் கைவிட்டனர்.

எழுவரின் மகன் கதிர்காமர். இவர் வீரபத்திரக் கடவுளைப்பூசித்து வந்தவர். புத்தமதத்தினரும் பூசித்த புனிதனும் கயாத்துறைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் எழுவர் வளவின் கிழக்கு எல்லையில் ஓர் அரசமரம் இருந்தது. இன்றும் இருக்கின்றது. இந்த அரசமரநீழலிற் கதிர்காமர் கண்ணுதற் கடவுளை வழிபட்டுவந்தார். காங்கேசன் துறைப் பட்டினசபையின் தலைவராகப் பலகாலம் கடமையாற்றி இன்று ஓய்வு பெற்றவராகிய திரு. சு கிருபாமூர்த்தியின் தந்தையின் தந்தையாம் திரு. சின்னத்தம்பி என்பவர் எழுவர் வளவுக்குக் கிழக்கேகிழக்குப் பகுதியாருக்குச் சொந்தமாய் இருந்த மலத்திவளவு என்னும் காணியை விலைக்குப்பெற்று தமது தந்தையின் தந்தையாம் கதிர்காமரால் வழிபடப்பட்டவீரபத்திரப் பெருமானுக்கு ஆலயம் அமைத்தார். அக்காலம் தொட்டு 1968-ம் ஆண்டு வரை அவ்வாலயம் எழுவர் வளவு ஸ்ரீவீரபத்திரசுவாமி கோவில் என அழைக்கப்பட்டுவந்தது. குருகுலத்தவர்களால் பூசைசெய்யப்பட்டுவந்த இக்கோவிலின் பூசையையும் திரு. சின்னத்தம்பி அவர்கள் சங்கமர் (பண்டாரங்களிடம்) ஒப்புவித்தார்.

**கும்பாபிஷேகமலர் உதயமும் நவவரலாறும்**

ஸ்ரீ வீரபத்திரர் கோவில் 1968-ம் ஆண்டு தைமாதம் உற்சவமூர்த்தி ஸ்தாபிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சங்கமர்கள் பூசைசெய்யும் கோவில் ஆகையால் சங்கமர் குலத்தைச் சேர்ந்தவர்களும் வீரசைவர் எனத் தம்மை அழைத்துக் கொள்ளுபவர்களுமாகிய இலிங்கதாரிகளாகிய கீரிமலை சிவ திரு. ஐயம்பிள்ளைக் குருக்களும், உடும்பராய் சிவ திரு. நவரத்தினக்குருக்களும் கும்பாபிஷேகத்தை நடாத்தினர். கும்பாபிஷேக ஞாபகமலர்ஒன்றும் இவ்விரு குருக்கள்மாரின் முயற்சியால் உதயமானது. இந்நமலரில் எழுவர்வளவு ஸ்ரீவீரபத்திரசுவாமி கோவிலுக்குக் குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திர குரு சுவாமி கோவில் எனப் புதுநாமம் சூட்டப்பட்டது.

இந்த மலரிற் காணப்படும் நவ வரலாறுகள் சில:-

1. "இலங்கையே யாழ்ப்பாணம்." பக்.- 4.

2. "ஓடக்கரை குரக்கன் துறையாகிப் பின் காங்கேசன்துறையானது" பக்.-5.

3. "காங்கேயனென்ற மனிதன் வந்திறங்கிய குரக்கன்துறையே காங்கேசன் துறையெனப் பெயர்பெற்றது. பின் கந்தமலையெழுந்தருளியிருந்த கந்தக்கடவுளாகிய காங்கேயப்பெருமான் தேவிமாரிருவருடன் பல சிவஸ்தலங்களையும் தரிசித்து, வேதாரணியச் சமுத்திரக்கரையை அடைந்து' மரக்கலமேறி சமுத்திரத்தைத்தாண்டி, சிங்களதேசத்தின் வடபாகத்திலுள்ள கடற்கரையில் இறங்கினார். இதனாலே காங்கேசன்துறை என்னும் நாமம் மிகப் பிரசித்திபெற்று விளங்கியது. இங்கே வந்த முருகப்பெருமான்அவ்விடத்தில் ஓர் ஆலயத்தை அமைத்து அங்கே தங்கிப் பின்... இறுதியாக முத்துலிங்கச் சங்கமர்சமாதி மண்டபமாகிய கதிர்காமத்தில் சிந்தாமணி ஆலயத்தில் எழுந்தருளியிருந்தார்.

(பக்.- 8.)

4. குருகுல மக்கள் சங்கமர்களது சிஷ்யர். (பக்.-9)

5. கன்னடநாட்டு மக்கள் இலிங்காயதர்கள், அவர்கள் இலங்கையின் வடபாகத்திலுள்ள ஓடக்கரையென்ற குரக்கன்துறையிலிறங்கிக் கரையையடுத்த மேற்பூமிகளில் குடியேறினர். இலிங்காயத மக்கள் தாங்கள் வழிபடும் பிரதம ஜாத-பிரதம புத்திரராகிய-சைவஸ்தாபகராகிய வீரபத்திரரைக் குலதெய்வமாகவும், பிரதம குருவாகவும் குரக்கன்துறை, வீரமாணிக்கதேவன் துறை, வியாபாரிமூலை, விளிசிட்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை முதலிய இடங்களில் ஸ்தாபித்து வழிபட்டனர் என்பது கண் காணும் உண்மை. (பக்.-10)

**ஓடைக்கரை**

ஓடை என்பது குளம். குளக்கரை ஓடைக்கரை என அழைக்கப்படுகின்றது. காங்கேசன் துறையில் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் ஒரு குளம் இருக்கின்றது. இக்

[14ம் பக்கம் பார்க்க]

## இருதய நோய்

# நாமே வருவித்துக்கொள்வது, நாமே தடுக்கவும் கூடியது

பூரணமான சுகதேகி, நல்ல கட்டுமஸ்தான தேகம், ஓடியாடி சுறுசுறுப்பாக வேலை செய்பவர், எல்லோரோடும் கலகலவென்று சிரித்துக் கதைப்பவர். ஒரு நாள் திடீரென்று 'நெஞ்சை வலிக்குது' என்று படுத்தவர் தான். மறு நிமிடமே ஆள் பயணத்தை கட்டி விட்டார்!

'அருமையான சாவு! புண்ணியம் செய்த ஆத்மா! ஒரு நாளாவது படுத்தபடுக்கையாய் கிடக்கவில்லை. சோலி சுரட்டில்லாமல் போய்ச் சேர்ந்து விட்டது, இப்படி உற்ருர் உறவினர் விஷயமறியாமல் மனதைச் சாந்தி செய்து கொள்வார்கள். விஷயம் அறிந்தவர்களானல் இறந்தவருக்கு முன்னெச்சரிக்கை கொடுத்திருப்பார்கள். ஏனென்றுல் அவர்திடீரென்று சாகவில்லை சுமார் இருபது வருடங்களுக்கு முன்பின்னதாகவே அவர் நோயை வளர்த்து வந்திருக்கிருர்.

அந்த நோய் தான் 'கொரனரித் ரெபோஸிஸ்' என்ற மாரடைப்பு நோய். உலகில் மரணமாகிறவர்களில் கிட்டத்தட்ட முப்பது விகிதமானோர் இதனுல் தான் மரணமாகிருர்கள். 45க்கும் 65க்கும் உட்பட்ட ஆண்களில் ஏழில் ஒருவர் இதற்கு பலியாகிருர் மாதவிடாய் நிற்காத பெண்களை அதுதாக்கமாட்டாதென்றே கூறலாம்.

### எப்படிப்பட்டவரை தாக்குகிறது?

இக்காலத்து இருதய நோயாளிகள் [illegible] லட்சணம், பேச்சு, நடை, உடை, பாவனை முதலியவற்றை அவதானித்தே இவர் இருதய நோய்க்கு ஆளானவர் என்று கண்டு பிடித்துவிடுகிருர்கள். இவருடைய லட்சணம் இது தான்: திரண்டு உருண்ட இறுக்கமான தேகம். விறைப்பான சதைநார்கள் செதுக்கியது போன்ற உறுதியான மோவாய், நல்ல தோள் கட்டு, திரண்ட கால்கள், அகலமான கைகள் சராசரி மனிதனைவிட சற்றே உயரக் குறைவு, விரல்களைப் பொத்தி பலவித சமிக்ஞைகளுடன் பேசுவார். அடிக்கடி நேரத்தைப் பார்ப்பார் ஒரு கணமும் வீணுக்குவது அவருக்கு பிடிக்காது! நாம்

### சுப்புடு

ஒரு வசனத்தை ஆரம்பித்தால் அவரே அதை அநேகமாக முடித்து விடுவார். அவ்வளவு துடி துடிப்பு; அடுத்த நாள் என்னென்ன வேலைகளையெல்லாம் செய்து முடிக்கலாம் என்று திட்டம் போட்டுக்கொண்டிருப்பார். சதாகாலமும் தமது மூளையையும் தேகத்தையும் போட்டுப் பிசைந்து உழைத்துக் கொண்டேயிருப்பார். விசாரித்துக் கேட்டால் தமக்கு சலரோகம் அல்லது இரத்த அமுக்கம் இருக்கிறதென்பார் தமது குடும்பத்திலுள்ளவர்களுக்கும் இருதய நோய் கோளாறுகள் உண்டு என்றும் சொல்வார்.

### உணர்ச்சிகள் மீறினால்?

இப்பேர்ப்பட்டவர்கள் திடீரென உணர்ச்சி வசப்பட்டாலும் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கலாம். ஒரு நெருங்கியவரின் மரணச் செய்தியை கேள்வியுற்ருே, அல்லது எதிர்பாராத விபத்தொன்றில் சிக்கியோ, அல்லது வேறெவ்விதமான திடுக்கிடும் சம்பவத்தில் அகப்பட்டோ உணர்ச்சி மேலீடு ஏற்படக்கூடும். இருதயத்துக்கும் உணர்ச்சிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதய பூர்வமான, இதயத்துடிப்பு, இதயம் ஒடிந்து விட்டது, இதயம் மலர்ந்தது-என்று சாதாரண பேச்சிலேயே இத்தொடர்களை உபயோகிக்கிருேம், இலகுவில் உணர்ச்சி வசப்படுகிறவர்கள் இலகுவில் இருதயநோய்க்கும் ஆளாவார்கள்.

### எப்படி உண்டாகிறது?

உங்கள் வீட்டில்தீ பிடித்தவுடனே, அல்லது உங்கள் குழந்தை கிணற்றுக்குள் தவறி விழுந்துவிட்டவுடனே உங்களுக்குமேலதிகமான சக்தியையும் சுறுசுறுப்பையும் தைரியத்தையும் கொடுப்பதற்கு இயற்கை ஒரு வழிசெய்து வைத்திருக்கிறது. உங்கள் தேகத்திலுள்ள 'அட்ரெனலின்' என்ற ஒரு வஸ்து உடனே ரத்தக் குழாய்களுக்குள் சுரக்கிறது. மேற்கூறிய நெருக்கடியான சமயங்களில் உபயோகிப்பதற்காகவே இது கொடுக்கப்பட்டிருக்கிறது. உணர்ச்சி மேலிடுபவர்களுக்குஎந்த நாளுமே நெருக்கடிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இதனுல் தேவைக்கு அதிகமான 'அட்ரெனலின்' ரத்தத்தில் கலந்து கொண்டு சிறிய ரத்தக் குழாய்களை அடைத்து

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுந்துளிர்

மணிப்புறவம்

# குதிரை! குதிரை! நாட்டியக்குதிரை!!

ஆடற் பருந்தும் அருகூட்டும் பைங்கிளியும் ஒரு கூட்டில் வாழ்ந்ததும் பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்தியதும் பழைய காலம். அது ராமராசிசியம் நடைபெற்றகாலம் என்று ஆசிரியர் கூறியபோது ''ஏன் சேர், இன்றைக்கெல்லாம் மிருகக் காட்சிச் சாலையிலும் சர்க்கஸ் களரியிலும் அது மாதிரி சமாதானம் நிலவுவதைப் பார்க்கலாமே!'' என்கிறான் வகுப்பு மாணவன் ஒருவன்.

சர்க்கஸ், நாடகம், பாட்டுக்கச்சேரி, நாட்டியமேடை என்றாலே மணிப்புறவு திடீரென விண்ணில் தாவிவிடுகிறது....

நடிகர் நாராயணராவ், புலிக்குட்டிக்கு வைக்கோலும், கரடிக் குட்டிக்குப் பருத்திக்கொட்டையும்வாங்கிப்போட்ட கணக்கு விபரம் எழுதிக்காட்டும் புகழ்பெற்ற ஒரு தமிழ் சினிமாப் படத்தை சினிமாக்கலை ரசிகர்கள் என்றைக்கும் மறக்கமாட்டார்கள். இப்படத்தில் இணைக்கப்பட்ட சர்க்கஸ் காட்சி ஒன்றில்தான் நாராயணராவ் தலையைத் தடவித் தடவி ஞாபகப்படுத்திக்கொண்டே இவ்வாறு கணக்கு எழுதுகிறார். 'அல்வாவும் பாதாம்கீரும் கொண்டுவா'' என்று வாய் திறந்து கேட்கும் ஓர் அதிசயமான குதிரையையும் இப்படத்தில்வரும் சர்க்கஸ் களரியில் இரசிகர்கள் முன் கொணர்ந்து நிறுத்துகிறார்கள். அந்தக் குதிரை ஆடுகிறது, பாட்டுப் பாடுகிறது' கேட்டதற்குப் பதில் சொல்கிறது. இத்தனை புதுமையான நாட்டியக்குதிரையை நாலாயிரம்பொன் விலைபேசி ஒருவர் வாங்குகிறார். குதிரையைப்போலத்தான் அவரும் - விசித்திரமானதொரு படைப்பு, தேடினாலும் காணக்கிடைக்காத அப்படி குள்ளமான உருவம். எங்கே தேடிப்பிடித்தார்களோ. அவரைப் பார்த்தாலே சிரிப்புவரும். இந்த ஆசாமி தலையிலே குதிரையைக் கட்டியடித்துவிடுகிறார் சுந்தரிபாய். நாட்டியக்குதிரை அவர் கையில்ஒப்படைக்கப்பட்டபோதுதான் அதன் வேஷம் கலைகிறது. அவிவேக பூரணகுருவின் சீஷப்பிள்ளை வாங்கிவந்த குதிரைமுட்டையைப்போன்றதுதான் இந்த நாட்டியக் குதிரையும். மெய்யான குதிரைக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது. இரு தடியர்கள் ஒருவர் பின்னொருவராக துணிப் போர்வைக்குள்ளே நின்றுகுனிந்து வளைந்து குடங்கி மடங்கி நாட்டியக்குதிரை ஆகியிருக்கிறார்கள். நாலாயிரம் பொன் கொடுத்துக்குதிரையைவாங்கியவர் 'ஆகா அதிசயமான குதிரை; அற்புதமான குதிரை! இது என் குதிரை! என் குதிரை! என்று குதித்துக் கூத்தாடிக் கொண்டே அதனைத் தடவிக்கொடுக்க கிட்ட நெருங்கிய போது போர்வை உள்ளேநின்றஇரு தடியர்களும் தங்கள்வேஷத்தைக்கலைத்து துணிப்போர்வையைக் களைந்தெறிந்துவிட்டு பொன் கொடுத்த குள்ளனையும் அத்துடன்சர்க்கஸ் கூட்டத்தையுமேஏமாற்றிய எக்காளக் களிப்புடன் கைகொட்டி ஆர்ப்பரித்து திரையின் பின்னே ஓடி மறைந்து விடுகிறார்கள். படம் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் முகத்திலும் அசடு வழிகின்றது. இந்தப் புகழ்பெற்ற படம் ஓடிக் கொண்டிருந்த நாளில் படக் கொட்டகைகளின் முன்பாகக் கூடிய கூட்டத்தைப் பார்த்துத் திகைத்து கால் கடுக்ககாத்து நின்றும் டிக்கெட் கிடைக்காமல்முகத்தில் அசடுவழிய வீடு திரும்பியவர்கள் ஆயிரக்கணக்கானோர்!.

சர்க்கஸ் கோஷ்டி வண்டி கட்டிக்கொண்டு மூட்டை முடிச்சுகளுடனே அடுத்த ஊரில்கூடாரமடிப்பதற்காக கிளம்பிப் போய்க்கொண்டிருக்கிறது. அந்தப்பயணத்தின்போது ஒருவருக்கு குஷி பிறந்து பாடத்தொடங்குகிறார். 'பாடாதே, உன்பாட்டைக்கேட்டுப் புலிக்குட்டிதான் பயப்படும்' என்று அவர் பாட்டுக்கு எதிர்ப் பாட்டு எழுகிறது.

'ஆனால் பாடாமலே வழி நடந்து பழக்கமில்லையே எனக்குத்தான்' என்கிறார் அதே எடுப்பில் முதலில் பாடியவர் சுந்தரிபாய்விட்டு விடுவாரா என்ன?' உன் பாட்டைக்கேட்டு சகித்துக் கொள்ளும் பழக்கமில்லையே இருக்குந்தான்'' என்றுகூண்டில்அடைததுக்கிடந்தபுலிக்குட்டிகளை அவருக்குத் தொட்டுக்காட்டுகிறார்.

இத்தனை குதூகல ஆரவாரத்துடன் பழைய நாளைய சர்க்கஸ் குழுவின் வண்டிப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களுடனே நாமும் சேர்ந்துவிடலாமா?என்ன குஷியான வாழ்க்கை-என்று அதைப் பார்த்து நமது மனமும் அப்பொழுது எண்ணுகிறது. அந்தநாளைய கலை உலகமே அது ஒரு தனி உலகம்தான். சர்க்கஸ்காரர், நாடகக்காரர், நாட்டியகாரர், சங்கீதகாரர் என்று மனித சமூகத்தின் மத்தியில் இன்ப ஊற்றாகச்சுரந்த எத்தனை இனிய மனிதர்கள் இவர்கள்!

## தமிழ் வளர்த்த குபேரர்

ஜெமினி வாசனின் 'சந்திரலேகா' படம் வெளியாவதற்கு எவ்வளவோ காலமிருக்கவே அது பற்றி பத்திரிகைகள் செய்திவெளியிடத் தொடங்கிவிட்டன. உயர்தரமான ஓர் ஆங்கிலப்படத்துக்குள்ள அத்தனை கலை நுணுக்கஅம்சங்களுடன் ஒரு தமிழ்படத்தை தமிழ்நாட்டிலும் எடுக்கமுடியுமென்று சாதனையில் காட்டிய ஜெமினிவாசனுக்கு தமிழ்நாடெங்கும் ஏகோபித்த பாராட்டுக் கிடைத்தது போல 'சந்திரலேகா' படம் எல்லா ஊர்களிலும் நீண்ட காலம் ஓடிப்பெருந்தொகைப்பணத்தைச்சம்பாதித்துக்கொடுத்தது. தொட்டனைத்தே ஊறிய மணற்கேணி போல ஜெமினி வாசன் தொட்டதெல்லாம் பொன்னாகிற்று. பத்திரிகைத் தொழில் 'ஆனந்தவிகடன்' மூலமாக மற்றவர்கள்நினைத்துப்பார்க்க முடியாதபுதுமைகள் பல இயற்றிக் காண்பித்தார். நூறு, ஆயிரம், பதினாயிரம் என்று கதை இலக்கியத்துக்கு 'விகடன்' மூலமாக லட்சக்கணக்கில் வாரி வழங்கி தமிழ்வளர்த்த குபேரன் அவர். தமது ஜெமினி ஸ்டுடியோவில் அற்புதமான பலபடங்களைத் தயாரித்தளித்து இந்திய நாட்டுக் கலைஞர்களுக்கும் அகில இந்தியாவுக்குமே உலகஅரங்கில் பெரும்புகழ் தேடிக்கொடுத்தார். சலியாத உழைப்பினாலும் தளராத ஊக்கத்தினாலும் வாழ்வில் முன்னேறிய வாசன் நமது காலத்தில் தென்னாடு கண்ட மகாதீரர். வ. ரா. குறிப்பிடுவதுபோல 'எண்ணாமலே துணிந்து பெரும் வியத்தகு சாதனைகளை நிலைநாட்டி வெற்றிகண்ட இந்திய நாட்டுத் தமிழ்ப் பெருமகன்' அவர். அவரது விகடன் சிரித்தபோதுதமிழ் நாடும் சேர்ந்து சிரித்தது. அவரது துணிச்சலிலே எல்லோரும் இன்புற்று மகிழ்ந்தார்கள்.

0 0 0

## குதிரைப்பித்து

சந்திரலேகா சர்க்கஸ் மேடையில் தோன்றிய நாட்டியக்குதிரையை குதிரைப் பந்தயத்திடலில் ஓடும் குதிரையுடன் ஒப்பிட்டுப் பார்த்தீர்களானால் இரண்டுக்கும் பொருத்தமான சில அம்சங்களிருப்பதைக் காணலாம். குதிரைப்பந்தயத்திடலில் ஓடும் குதிரை கூட இது மாதிரி அற்புதமான அதிசயமானதொரு நாட்டியக்குதிரைதானே. ஜெமினி வாசன் நாடறிந்த குதிரைப் பந்தயப்பித்தர். நாட்டியக் குதிரை அவரது அநுபவப் படைப்பாகக் கூட விருக்கலாம். ஆங்கிலக்கதை ஒன்றிலே அதிசயமான ஒரு கழுதையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வாய்திறந்து கத்தியபோதெல்லாம் வாய்க்குள்ளிருந்து பொன் நாணயங்கள் உதிரும். அதனால் அதன் கதறல் நயமானசிரிப்பொலியாக எல்லோர் காதிலும் விழவே 'சிரிக்கும் கழுதை' என்று ஒரு புதுப்பெயரை அந்தக்கழுதை பெற்றது. அந்தச் சிரிக்கும் கழுதையைப் போல்தானே பந்தய மைதானத்தைச் சுற்றிஓடும் குதிரைகளும் அவற்றின் ஒவ்வொரு சுற்றோட்டத்தின் போதும் காசுகாசாக அள்ளிவீசி நொடிப்பொழுதுக்குள்ளே லட்சக்கணக்கானோரின் தலைவிதியையே மேடுபள்ளமாக்கி விடுகின்றன. இவற்றுக்குக் கூடத்தான் என்ன அழகான பெயர்கள் யுவராஜா, சக்கரவர்த்தி, சேனாபதி என்றெல்லாம்!

குதிரைப் பந்தய மோகம் உள்ளவர்களில் பலவேடிக்கையான மனிதர்கள் இருந்தார்கள்.

அமெரிக்காவில் இருந்த ஒரு குதிரைப்பித்தருக்கு சாம்பல் நிறத்தின் மேல் அபாரநம்பிக்கை. ரேசில் சாம்பல்நிறக்குதிரை ஓடினால் அதன் மீதுதான் பணம்கட்டுவார். தனக்குச் சொந்தமான குதிரைப்பந்தயத்தில் கலந்துகொள்ளும் பட்சத்தில் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் அதன் மீது போட்டுவிடுவார். கொள்ளை கொள்ளையாக அவரால் சம்பாதிக்க முடிந்தது ரேசினால் அல்ல, குதிரைப்பண்ணை மூலம். ஒருசமயம்அவரிடம் நாற்பத்தொன்பது பெட்டைக்குதிரைகள் இருந்தன ஏராளமான பந்தயங்களில் வென்ற மெகனோலியா என்ற குதிரையை அவர் நல்ல விலைக்கு விற்றார். விலை ஐயாயிரம் ஏக்கர் நிலம். வேடிக்கை என்னவென்றால் அந்த அற்புதமான குதிரை அவர் கையைவிட்டுப் போனபிறகு ஒரு பந்தயத்தில் கூட ஜெயிக்கவில்லை.

ஒரு தடவை அவரது குதிரையும் இன்னொருவர் குதிரையும் நீ முந்தி நான் முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டுவந்தன. பந்தய நிர்வாகிகள் இன்னொருவருடைய குதிரை வென்றதாக அறிவித்தார்கள், நம்மவருக்கு வந்ததே கோபம். முடிவு தவறு. என்று சொல்லி அவர் நிர்வாகிகளோடு மோதிய மோதலில் முடிவு மாற்றப்பட்டு வெற்றி இவரது குதிரைக்குத்தான் என அறிவிக்கப்பட்டது. இவர் பெயர் ஜோர்ஜ் வாஷிங்டன்-அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி.

என் பழையநாள் பள்ளித் தோழர் ஒருவருக்கு சில காலத்துக்கு முன்பாக சுவீப் சீட்டிழுப்பில் ஒரு பெருந்தொகை அதிஷ்டமடித்தது. அந்த ஒரே நாளில் அவர் வாழ்க்கையே மாறிவிட்டது. பார்த்துவந்த வேலையை உதறித்தள்ளினார். காணி வாங்கினார். அதில்கோட்டை கொத்தளம்போல பெரிய வீடு கட்டி எழுப்பினார். கார் வாங்கினார். பெரும் இடம்தேடி கல்யாணம் முடித்தார். புதுமனைப்பிரவேசம், கல்யாணம் எல்லாம் திருவிழாக் கோலாகலத்துடனே ஊரறிய நாடறிய அதிவிமரிசையாக நடைபெற்றன. ஒன்றுக்கும் நான் போகவில்லை.

சில தினங்களுக்கு முன்பாக இந்த நண்பரைச் சந்தித்தேன் பெண்டாட்டியுடனே சண்டைபோட்டுக் கொண்டு ஒரு குழந்தையுடன் தன் பெற்றோரிடமே போய்ச்சேர்ந்து விட்டாராம். நவராத்திரி விஜய தசமியன்றுதன்பெற்றோரின் குடிசைவீட்டில்நடைபெறவிருக்கும் தன் பிள்ளையின் அட்சாரப்பியாசத்துக்கு நானும் வரவேணுமென்று நிரம்பவும் வேண்டிக்கொண்டார், அவர் வேண்டுதலுக்கு உடன்பட்டு விஜயதசமியன்று அவர் என் பழைய பள்ளித் தோழராகவிருந்தபோது பெற்றோருடன் வசித்த குடிசைவீட்டுக்கு ஏகினேன், அங்கு நண்பரை என் பழையநாள் பள்ளித் தோழராகவே கண்டபோது அகங்குழைந்து அவர் சின்னப்பயலையும் வாஞ்சையுடனே அணைத்துக்கொண்டேன்...

[15-ம் பக்கம் பார்க்க]

# நாகபாம்பும்! அதன் விஷமும்

கொட்டடி பாம்புக்கடி வைத்தியர்
க. சிற்றம்பலம்

பாம்புகளில் பல இனங்கள் உண்டு. ஆனால் அவற்றில் கொடிய விஷத்தைக் கொண்ட பாம்புகள் சிலவாகவே இருக்கின்றன. எல்லாவகை பாம்புகளுக்கும் விஷமிருந்தாலும், விஷத்தின் அளவுகளில் வித்தியாசங்கள் உண்டு. மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய விஷமுடைய பாம்புகள் (1)நாகங்கள், (2)புடை-



யன்கள், (3) விரியன்கள்,(4) வழலைகள், (5) மூர்க்கன்கள் (6)மண்ணுணியன்,(7)சுருட்டைகள் முதலிய பலவகையினதாகக்காணக்கூடியதாக இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொருவகைசர்ப்பங்களிலும் பல இனங்கள்உண்டு. உதாரணமாக நாகபாம்பை எடுத்துக்கொண்டால் எட்டு வகையாக வகுக்காலம். (1) வாசுகி,(2) அநந்தன்,(3)தக்கன்,(4)சங்கபாலன்,(5)குளிகன், (6) பதுமன், (7) மகாபதுமன், (8) கார்க்கோடகன் என வகுத்துள்ளார்கள். இவற்றின் விஷமும் கொடுமையுடையதாகவே இருக்கின்றது. நாகங்கள் படம்விரித்து ஆடும். அவற்றின் படங்களில் பல விதமான குறிகள் காணப்படும். இலங்கையில் காணப்படும் நாகங்களில் அதிகமானவை மூக்குக்கண்ணாடி போன்ற உருவங்களைப் படத்தில் கொண்டனவாகவும் சங்கு சக்கரம் கொண்டனவாகவும் இருக்கின்றன. அவை படம்விரித்து ஆடும்போது பார்ப்பதற்கு அழகாகவும், தன்பகைவரையன்றி மற்ற விதத்தில் எவ்விதமான துன்பமும் இல்லாத தன்மையும் உடையதாகவும்இருப்பதை அவதானிக்கலாம். அதன் கழுத்திலுள்ள விலாஎலும்புகள் நீண்டும், சாதாரணமான நிலையில் பின்புறமாக மடக்கியும் இருக்கும். தசைகளின் இயக்கத்தால் அவற்றை இரு புறமும் விசிறி போல் விரித்து ஆடுகின்றன. இதுதான் படம் என நாம் கூறும் பகுதியாகும். இவை பெரும்பாலும் நான்கு அல்லது ஐந்து அடி நீளம் வளரும். வயல்வெளிகள், காடுகள்,புற்றுகள்,மரப்பொந்துகள், பழைய கட்டிடங்கள் கோவில்கள், பெருமரங்கள் முதலியன இவை சீவிப்பதற்குரிய இடங்களாக இருக்கின்றன. சில வேளைகளில் எலி, தவளை,கோழி போன்ற பிராணிகளை உண்பதற்காக நம் வீடுகளுக்குள்ளும் அவை வருவதுண்டு.

நாகபாம்புக்கு மேல் வாயில் முனபக்கமாகநீண்ட நஞ்சுப்பல்லும், சாதாரணமான திடற்பல்லு மூன்றும் இருக்கும். நஞ்சுப்பற்கள் சவ்வினால் மூடப்பட்டு பாதுகாப்புடையதாக இருக்கும். நஞ்சுப்பற்கள் துவாரமுடையதாகவும், வளையுடையதாகவும், கூரைமுள்ளுப்போல கொழுவிக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். பகைவரைத் தாக்கும்போது விடப்பல்லு பாவிக்கப்படும். விடப்பல்லிலுள்ள துவாரத்தின் வழியாகத் தாக்கப்பட்டஇடத்துக்குக் கொட்டப்படும். பற்கள் பகைவரைத் தாக்கும்போது விழுந்துவிட்டால் திரும்பவும் முளைக்கும் தன்மைபெறும். பாம்பாட்டிகள் நாகபாம்பின் விஷப்பல்லைப் பிடுங்கிய பின்னர்தான் அதனை ஆட்டிப் பிழைப்பதற்குக் கொண்டு வருவார்கள். பாம்புக்குப் புதியபல் முளைக்கும்தருணத்தைக் கவனிக்காதுவிட்டால் பாம்பாட்டியே அப் பாம்பால் கடிபட்டு இறப்பதும் உண்டு.

நாகபாம்புக்கு ஆண் பாம்பு சாரை என்பது பொருத்த மற்ற எண்ணமாகும். நாகங்களுக்குள் ஆண், பெண் என்ற வகுப்பு உண்டு. நாகபாம்பு முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கும்.

[15-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விதியின் கைப்பொம்மை

இருளின் மைவண்ணம் அழிந்துவிட பூதேவியின் மேனி சிலிர்த்தது கட்புலனுக்கு அதுவரை மறைந்த புறக்காட்சிகள் புலப்படத் தொடங்கின.

மனித குலத்துக்காக உயிரை ஒப்புக்கொடுத்த ஏசுபிரானைத் தாங்கிய சிலுவைபோல் பிரதான வீதியும் ஊருக்குச் செல்லும்மண்வீதியும் வெட்டிக்கொள்ளும் சந்தி கிட்டத்தட்ட இருநூறுயார் தொலைவில்தெரிந்தது.

வண்டியின் மணியைப் பிடித்து இழுத்தேன். சாரதி மணிஓசை காரணமாக வண்டியின் வேகத்தைக் குறைத்து குறிப்பிட்ட சந்தியில் நிறுத்தினான்.

அந்த இடத்தில் வேறெவரும்இறங்கவில்லை. காலையின் அமைதியைச் சாகடித்துக் கொண்டு குருவிகள் இசை மிழற்றின. அவற்றின்இசை சுருதி லயந் தப்பாது பாடுகின்ற பண்ணிசையாளனின் இராக ஆலாபனைபோல் அமைந்தது.

கீழ்வானின்அடிப்புறத்தில் சுமங்கிலிப்பெண்ணின் திலகம்போல் கதிரவன்தோற்றினான்.

என்னுடைய ஊருக்கும் இச்சந்திக்கும் இடைத்தூரம் மூன்றுமைல். மனித சந்தடியே ஆரம்பிக்காத காலைப் பொழுதில் கடற்கரையை மருவியுள்ள அந்த தடத்தில் காலடிவைத்தேன். கடலை மருவிய இடமாகையினால், வளமான செடி கொடி, மரங்கள் என்பன இந்தப்பாதை ஊடெறுத்துச் செல்லும் வெளியில் இல்லை. ஆங்காங்குசிலதாளம் புதர்கள், ஈந்துச்செடிகள், ஆவரசுகள் என்பனவே வாழ்க்கையின் நம்பிக்கை போல் தளிர்த்துச் சடைத்து நின்றன.

மூன்றுமைல் தூரம் இந்த வெளியிலே நடந்துவிட்டால் தென்னஞ் சோலைகளுக்கும் நல்ல தோட்டங்களுக்கும் நடுவே என் தாயகம் வந்துவிடும்.

மூன்றுமைல்களையும் மற்றவர்களின் தொடர்பு இன்றி நடந்தாகவேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனனபூமியை நோக்கிச் செல்கின்றேனாயினும் மனதில் அமைதியும் திருப்தியும் உலவுகின்றன வென்று சொல்ல முடியாது. உள்ளத்தை எவ்வளவுக்கு நாம் அடக்க முயன்றாலும் இலகுவில் கைகூடிவருவதில்லை. சிந்தையை அடக்கும் திறனறியேன் என்று வேதாந்திகள் கூறுவதில் எள்ளத்தனையும் தவறிருக்கமுடியுமா?

நடந்துசெல்லும் பாதை எப்படிப்பசுமையற்றுக் கிடக்கின்றதோ, அத்தகையவள மற்றதுன்ப நினைவுகளைச்சுமந்து செல்லுகின்றேன். நாம் நினைக்கின்ற அனைத்துமே நடந்துவிட்டால் நமக்குஅப்பாற்பட்ட ஒன்றின் உண்மையை மனிதன் நிச்சயம் மறந்துவிடுவான்என்ற நியதி பொய்த்துவிடும்.

வரட்சியும் பசுமையும் பூமியில் எங்கும் எப்போதும் ஒன்றேடொன்று விரவியே கிடக்கின்றதை எவ்வளவுதான் முயன்றும் மாற்றிவிட முடியாது. எண்ணங்கள் இலகுவில் நிறைவேறுமானால் தியாகம் என்ற புனிதப் பதமே அர்த்தமற்றதாகிவிடும்.

இவ்வாறு நினைவென்றகடலில் அலைமோதுகின்ற சலன அலைகளுடன்நடக்கின்றேன். தனிமையில் நினைவு தரும் பழைய சம்பவங்கள் நிழற்படமாகவிரிகின்றன நானே உருவாக்கிக்கொண்ட நாடகததில் ஒரு பாத்திரமாகிவிட்டது உள்ளம்.

இதோ இந்த வெளிக்கப்பால் கண்முன் தெரிகின்ற சோலைகளுக்கு நடுவே அழியாத சத்தியம்போல் உயர்ந்துதெரிகின்றது ஒரு கோபுரம். அதுதான்எங்கள்ஊர்ப் பிள்ளையார்கோவில். கோவிலுக்கு தெற்கே கூப்பிடு தொலைவில்அமைந்ததுதான் என் வீடு.

எங்கள் வீட்டுக்குச் சுமார் முந்நூறுயார் தொலைவில் அமைந்துள்ள வீட்டிலே தான் அந்தக்கன்னி இருக்கிறாள். இலை; அவள் இப்போது கன்னியல்ல. ஒரு குடும்பஸ்திரியவள். அந்தணர் வாழ்த்த, ஊரவர் ஆசிகூற அவள் இன்னொருவனின் கரத்தைக் கைப்பற்றியவள். அவன் சொல்லுக்கு அடிபணிந்து கடமை செய்யவேண்டிய விதி அவளுக்கு அமைந்து விட்டது உலகத்தில் நமது அனுஷ்டான ஆசாரங்கள் இருக்கும்வரை நான்அவளைநினைப்பதே பாவம்.

முகத்திலே குங்குமம். கழுத்திலே தாலி இவைகள் எல்லாம் யான் இனிமேல் அவளைப்பற்றி நினைக்கவோ, நெருங்கவோ முடியாத முட்கள். இந்த முட்களைப் பூண்டு கொண்டு இன்பம் அடைவதில் நமது நாட்டுப் பெண்களுக்குத்தான் எவ்வளவு பெருமை...!

இந்தப் பெருமையிலே எத்தகைய சிறுமைகளையும் முற்றாக மறந்து களிப்பதற்கு அவர்களால் முடியும்.

இவ்வாறு களிப்புடன் இருப்பவள்தான் சீதா.

சீதா இன்னொருவனுடைய வாழ்வுக்குச் சாந்தி தருபவள். நினைத்தாலும் பாவம் தான். ஆனால் நினைக்காமலிருக்கின்ற மனம் எனக்கிருந்தால் இந்த உலகத்தின் ஆசாபாசங்களை யான் சுமந்து கொண்டிருக்க வேண்டிடியதில்லையே....

எங்காவது ஒரு கோவிற் திண்ணையில் குந்திக் கொண்டு வேதாந்த விசாரம் செய்ய முடியும்.

வேதாந்த விசாரம் செய்யக்கூடிய பக்குவம் எனக்கில்லை. வயது இருபத்தாறு இந்த இருபத்காறு வயதுக்குரிய கட்டிளமைஎன்னிடம் குறையவில்லை. ஆயினும் உலகத்துக்காக உணர்ச்சிகளையெல்லாம் அடக்கியொடுக்கிக்கொண்டு எங்காவது சென்று காலத்தைக் கடத்திவிடக் கங்கணம் கட்டினேன்.

காரணம்......?

எனக்குரியவளாக வருவாள் என்ற கற்பனையில் மிதந்துகொண்டிருந்க எனக்கு அவள் கிடைக்காமல் போய்விட்டாள்.

இந்த நிலைக்குக் காரணமாக இருந்தவை யாவும் வெறும் உணர்ச்சிக் குமுறலுக்கு வழிகாட்டக் கூடியனவே தவிர, நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தக்கூடியன வல்ல.

என்னுடைய நிழலில் கிடந்து என்னுடன் உறவாடுவாள் என்று கருதிய அவள் இன்னொருவனுக்காகக் கழுத்தைக் கொடுக்கவேண்டிய நிகழ்ச்சி ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் நடைபெற்றது.

முந்நூறு யார் தொலைவில் உள்ள வீட்டிலிருக்கும் அவளுக்கும் எனக்கும் வாழ்க்கையில் முடிச்சுண்டாகும் என்று யான் கருதியதில் அன்றைக்குத் தவறில்லை. இதுக்கு மாறுதல் ஏற்படவேண்டுமென்பது நியதியானால் அதைத் தடுக்க நாம் யார்?

திடீரென அவள் அக்காள் காலன் கைப்பட்டு விட்டாள். அவளது அக்காவின் குழந்தையைக் காப்பாற்றத் தகுதிவாய்ந்த ஒருத்தி சீதாதான் என்ற முடிவை அவளது பெற்றோரும் உற்றோரும் எடுத்துக் கொண்டபின்னர்...

என்னுடைய அபிலாஷைகளை யான் அடக்கி ஒடுக்க வேண்டியவனானேன். ஊமையின் கனவு போல் என்னுள் உருவாகிய இந்தக்காதல் நாடகம் ஊருக்குத்தெரியாமலே இருந்துவிடட்டும் என்ற கருத்தில் இரண்டாம் பேருக்கும் தெரியாமலே அந்த ஊரை விட்டே என்னை அகன்றுபோகச் செய்துவிட்டது.

மீண்டும் இந்தப்பாதையில் நடந்து என்னுடைய வீட்டுக்குச் செல்லுகின்றேன். செல்லும் வழியில் அந்தச்சீதாவின் வீட்டையும் கடந்துதான் அப்பாற் [illegible] நினைவுகள் மீண்டும் அவள் பற்றியே படர்ந்து செல்லுகின்றன.

"...சீதா என்னால்மறக்கப்படவேண்டியவள்" இவ்வாறு சொல்லிக் கொண்டேன்.

கதிரவன்ஒளியினால்உலகத்தின் மீது எழில் படர்ந்து கொண்டிருந்தது

ஊர்மனையிலிருந்து இந்த வெளியில் பசுமைகாட்டிநிற்கும் புல்நுனிகளைக் கடித்துச் சுவைப்பதற்கு மாடுகள் வந்துகொண்டிருந்தன. அப்பாற் சில வெள்ளாடுகள் மேய்ந்து கொண்டுநின்றன.

வரண்ட அந்தபிராந்தியக் காட்சிகளிற்கூட ஒருசில இன்பம் இருக்கத்தான் செய்கின்றது...

வண்டியென்னை இறக்கிவிட்டு முக்கால்மணித்தியாலத்துக்குமேலாகி விட்டதன் காரணமாக எனது நடையினால் மூன்று மைலையும் விழுங்கி விட்டேன்.

அதோ ஊர்மனை தொடங்குவதற்குரிய இடம். அந்த முகப்பில் ஜடாமுடி தரித்த சிவபிரானைப்போல் விழுதுகள்காற்றில்ஊசலாட நிமிர்ந்து நிற்கின்றது ஆல் ஒன்று. அந்த ஆலமரத்தின் அடியில் கிராமத்திலுள்ள ஆஸ்திகன் ஒருவன் நாட்டிய சூலம்ஒன்று வைரவப்பெருமானாகிப் பக்தர்களின் அன்பைப் பெற்றிருக்கின்றது.

சூலத்துக்கு முன்னர் ஒரு உண்டியற்பெட்டி இருந்தது. என்னுள்ளத்திலூறிய பக்திப் பெருக்கின் காரணமாகச் சில்லறையை எடுத்து அதனுள் இட்டுக கொண்டு அப்பால் நடந்தேன்.

எங்கள் வீட்டுக்குச் செல்வதற்கு இன்னும் கால் மைலுக்குமேல் நடந்தாகவேண்டும்.

மெதுவாக நடந்துகொண்டிருந்தேன். விடிந்துவிட்டகன் காரணமாக ஊரிலுள்ள தோட்டங்களில் தண்ணீர் இறைப்பவர்களின் அரவம் மாத்திரம் கேட்டது. சிறிய கிராமத்தைச்சேர்ந்த அந்த ஊரவர்கள் நல்ல பிரயாசிகள். இதனால் வெட்டியாக வீதியில் சுற்றுபவர்களைக் காணமுடியாததொன்றும் வியப்பில்லை,

கிறவல் வீதியிலிருந்து எங்கள் வீட்டிற்குப் பிரிந்து செல்லும் ஒழுங்கை வழியாகத் திரும்பினேன்.

என்ன அதிசயம்?

யாரை நான் காணக்கூடாதென்று இதுவரை தூர ஒதுங்கியிருந்தேனோ அவளே என்முன்னால்வருகிறாள். அவளது ஒக்கலையில் ஒருகுழந்தை, கையில் இன்னொரு குழந்தை.

மனதிற் கவிந்துள்ள நாணத்தைப் பலவந்தமாக அடக்கியொடுக்கி விட்டு நிமிர்ந்து அவளைப் பார்க்கிறேன்...

நெற்றியில் குங்குமம் இல்லை. கழுத்தில் தாலியில்லை. வெள்ளைச் சேலையொன்றே அவளது உடலைச் சுற்றியிருந்தது. இது என்ன? உணர்வற்றஉடலைப் போல் தென்படுகிறாள்?

கிட்டத்தட்ட இருபத்திமூன்று வயதுதான் இருக்கும். அந்த வயதுக்குள்ள இவளது இளமையும் கட்டழகும் எங்கே? என்நினைவில் இன்றைக்கும் புதுமையாகிநிற்கும் அவளது உண்மை உருவம் எங்கே?

(12-ம் பக்கம் பார்க்க)

—நெல்லியான் செல்வம்—

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

குட்டிக்கதை

# குழந்தை சிரித்தது

— சசிபாரதி —

கவலைகளை நெஞ்சகத்தே தாங்கியபடி குடிசையின் முகட்டைத் தாங்கிநிற்கும் கப்புக்காலுடன் சாய்ந்து கொண்டிருந்தாள் அவள்.

பசி, கணவனைக் காணாத ஏக்கம் அழுதழுது அவள் மண்டை வலியெடுத்தது. முகம் உப்பிச்சிவந்து...

கடந்த ஒரு வாரமாக அவளைப் பஞ்சம் வாட்டியது. அரிசி, உப்பு, புளி என்று எல்லாமே சமைந்து விட்டிருந்தன. அயல்வீட்டுப் பெண்ணொருத்தி அவளுக்குச்சற்றே ஆறுதலும் உதவியுமாயிருந்தாள்.

பத்தே நாட்களில் திரும்பி விடுவதாகச் சென்ற கணவன் இன்னமும் வீடுதிரும்பவில்லை. நகரத்து வியாபாரியொருவனின் கையாளாயிருந்து, காட்டிலே விறகு மரங்களை வெட்டித்தறித்து லொறிகளில் ஏற்றியனுப்புவது அவன் வேலை.

சோனாவாரியாக மழை கொட்டி போக்குவரத்துத் தடைப்பட்டிருந்ததினால் கணவனைப்பற்றி அவள் எவ்வித தகவலும் அறிந்து கொள்ள முடியாதிருந்தது.

அன்று, அவள் மிக அதிகமாகக் கவலைப்பட்டாள். ஒரு வயது முற்றும் நிரம்பாத அவள் குழந்தைதான் அவ்வாறவள் கவலையை அதிகரிக்கக் காரணமாயிருந்தது. முலையருந்திப்பின்னும் தன் அரைவயிற்றுக்குப்பால் வேண்டியழும் போதெல்லாம் அவள்படும் வேதனை... தன் வயிற்றுப் பசியையே மறந்து... நன்றாகச் சாப்பிடாத காரணத்தினாலோ அன்றேல் ரத்தமெல்லாம் கண்ணீராய் வடிந்துவிட்ட காரணத்தினாலோ அவள் முலையிலே பால் வற்றிப் போயிருந்தது.

அன்று ஒருபாயத்தை அவள் கண்டுபிடித்திருந்தாள். தீவிரயோசனையின்பின் பிறர் ஆலோசனையுடன் அதனை அவள் கண்டுபிடித்துச்செயலாற்றினாள். பால் அருந்திய பின்னர் மீதி அரைவயிற்றையும் தேநீரால் நிரப்பிவிடுதலே அவள் கைக்கொண்ட யுக்தியாகும்.

வெளியே தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தை 'மளமள' வென வந்து தாயின் மடியிலே தொற்றிக்கொண்டு அவள் நெஞ்சுச்சட்டையைப் பிய்க்கவே, சுயநினைவுக்கு வந்த அவள் தன்மகனைத் தூக்கி மடியிற் கிடத்தி, பாலை அருந்திப்பின் எஞ்சியிருந்த் அரைவயிற்றுக்கும் தேநீரைப்பருக்கி முத்தங்களீந்து தரையில் தவழவிட்டாள். ஆனால் குழந்தையோ வயிறு நிறைந்த மகிழ்ச்சியில் மீண்டும் தன் தாயின் மடியில் ஏறிக்கொண்டு—

அவள் முன்றானையை இழுத்து...

முட்டுக்காலில் நின்றபடி அவள் தலைமயிரைப்பிராண்டியிழுத்து...

முகத்திலே அடித்து...... பிராண்டி...

அவள் கண்களில் தன் விரலினால் குற்றி...

கண்ணின் மணியிலே சின்னக் கைவிரல் நகம் பட்டதுதான்—

'பளீர்...'

'பளீர்...பளீர்...'

தன் குழந்தையென்பதையே மறந்து அதன் முதுகிலே...

அந்த அயல்வீட்டுப்பெண் தற்செயலாகவே அங்கு அச்சமயம் வந்திராவிட்டால் குழந்தை இன்னும் நிறைய அடி வாங்கியிருக்கும்.

'ஏண்டி குழந்தையை இப்படி அடிக்கிறாய்? அதற்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீறுற்று

(சென்றவாரத் தொடர்ச்சி)

கிருஷ்: ராமு அள்ள அள்ள வற்ருது ஊறிக்கொண்டே இருககும் நீரூற்றுப்போல இந்த உலகமும் மனிதர்களும், அவர்களது உறவுகளும் பாசங்களும், உன்னை நிராகரித்தாலும், வெறுத்து ஒதுக்கிஞலும், ஓயாது, அன்பையும் பாசத்தையும், கருணையையும், சதா உன் மீது சுரந்துகொண்டே இருக்கும். ஒரு நீரூற்று இந்த உலகத்தில் உண்டு. அது யாரென்று தெரியுமா உனக்கு?

ராமு: கடவுள் சாமி-

கிருஷ்: ''கடவுள்''-அவரைப் பார்க்க முடியாததிஞல்த்தான், ஒரு தாயைப் படைத்து, அந்தத் தாயில் தன்னைப் படைத்திருக்கிருன். இப்போது தெரிகிறதா அந்த நீரூற்று யாரென்று?

ராமு. ''ஓம்'' நல்லாத் தெரியுது என்ர அம்மாச்சிதான்.

கிருஷ்: வேறு யாருக்காகவோ வேண்டி, உனது தாயை விட்டுப் போகிறேன் என்று நீ எண்ணலாமா?

ராமு: மெய்தான். ஆனுல் நான் எதுக்கு பெரிய பாரமாக இருக்கிறேன் சாமி?

கிருஷ்: (சிரித்து) ''கொடிக்கு சுரக்காய் பாரமில்லையடா''. ராமு நீபதினைந்து வருஷத்துக்குப்பிறகு, பெத்தவளின் கஷ்டத்தை எண்ணி சாகப்போகிறேன் என்றுசொல்கிருயே, இவளவு கஷ்டங்களையும் உன் பொருட்டு அநுபவித்து வரும் அந்தத் தாய் இது ஒடு கஷ்டமென்று நினைத்திருந்தால், எப்பவோ உனக்கு முந்தி அவள் செத்திருக்கலாமே? எந்த நிலையிலும் நீ ஒடுத்தன் வாழ வேண்டுமென்பதற்காக, இந்த நிலையிலும் அவள் வாழ்கிருளே அதை நீ மறக்கவேகூடாது.

ராமு: (விம்மியபடி) என்ர அம்மாச்சி... அழுகிருள்).

கிருஷ் (பரிவுடன்) அழாதே ராமு, அழாதே! ராமு நாங்கள் முந்தியஜென்மத்தில்செய்த பாவத்தின் அளவுகோல்தான் இந்தக் கண்ணீர். நாங்கள் முந்திய ஜென்மத்தில் பாவிகள் இல்லையென்று இந்த ஜென்மத்தில் நிரூபிக்கவேண்டும். இந்தக் கடமை ஒன்றிற்காக எந்தவொடு மனிதனும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் வாழ்ந்துதான்தீரவேண்டும்.

ராமு: மனசு வரமாட்டேன் என்கிறதே! நான் சாகத்தான் வேணும்.

கிருஷ்: உன்ஞல் நினைத்தவுடன் சாகமுடியுமா? சாவு அவனவன் நல்வினை தீவினைப்படிதான் நிகழும். ராமு வாழ்க்கையில் நமக்கு இரண்டு வரங்கள் கிடைத்திருக்கிறது. ஒன்று முற்பிறப்பின் நிகழ்ச்சிகள் இப்பிறப்பில் நமக்குத் தெரிவதில்லை. மற்றது இனிமேல் வரப்போகிற நிகழ்ச்சிகள் முன்கூட்டியே நமக்குப் புலப்படுவதும் இல்லை. இந்த இரண்டும் நமக்குத் தெரிந்துவிட்டால் வாழ்க்கையே இராது. ஆகையால் நான் சொல்லுகிறேன், மனிதர்கள் எந்த நிலையிலும், இந்த இரண்டு வரங்களையும்அடிக்கடிநினைவுபடுத்திக்கொள்ளுகிருர்களோ, அப்போதுதான் ''மனிதன் வாழவேண்டும்'' என்னும் உண்மைத் தத்துவம் அவர்களுக்குப் புரியும்.

ராமு: உலகத்தில இதையெல்லாம் நினைச்சுப் பார்க்கிறவங்களும் உண்டா சாமி—?

கிருஷ்: மேலெழுந்தவாரியாக வாழ்க்கையை மனிதர்கள் அணுகி வடுவதாஞல், உண்மையான 'ஆத்ம சுத்தத்தை' இழந்துவிடும் இன்றைய மனிதர்கள் இதை நினைப்பதே கிடையாது இன்றைய நாகரீகமும்போலி வாழ்க்கையும், மனிதர்களை இதை நினைப்பதுக்கே நேரமில்லாமல் செய்துவிடுகிறதப்பா.

ராமு: இப்படி நினைத்து வாழ்பவர்களும் உண்டா சாமி—?

கிருஷ்: உண்டு. உனது தாய் தெய்வானை இருக்கிருளே...?

ராமு: சந்தோஷத்துடன் என்ர அம்மாச்சியா...?

கிருஷ்: ஆமாம் உலகத்தில் இப்படி எத்தனையோ பேர்கள் சீவிக்கிருர்கள். இவர்களைப் பார்க்கவேணுமென்ருல் ''ஞானக்கண்'' வேண்டும்.

ராமு: இதஞல் என்ர அம்மாச்சிக்கு என்ன பிரயோசனம்—?

கிருஷ்: விலைமதிக்கவொண்ணுத பிரயோசனம் ஒன்று உண்டு. அதுதான் ஆத்ம திருப்தியென்கிற பிரயோசனமாகும். இந்தத் திருப்தியில் உன்தாய் வாழ்வதால்தான் ''கண்ணுக்கு இமைபோல'' உன்னைப்பாதுகாக்க அவளால் முடிகிறது.

ராமு: அம்மாவுடையஆத்துமம் திருப்திப்பட்டாலும், என்னுடைய ஆத்துமம் திருப்திப்பட முடியவில்லையே சாமி. இப்படி நான் இருக்கிறதிலையும் பார்க்க சாவதுதான் நல்லது,

[அவர் வானத்தைப்பார்த்துக்கொண்டு மௌனமாக நிற்கிருர்.]

ஏன்சாமி பேசாமலிருக்கிறீர்கள்-? நான் சொல்வது பிழையா'?

கிருஷ்: நிச்சயமாக. ராமு இன்றைக்கோ, நாளைக்கோ என நிச்சயமில்லாத இந்த உடலிற்காக, உடலின்பத்திற்காக, கேவலம் நித்தியமான ஆன்மாவை மனிதர்கள் கறைபடுத்தி வருவதிஞல்தான் இப்படியான சோதனைகளெல்லாம், மனிதர்களுக்கு ஏற்பட்டு வருகிறது. ஆகவே இப்படியான எண்ணங்கள் உனக்கு வேண்டாம்.

ராமு: சாமியாரே! என்னை ஏனிப்படி கடவுள் படைச்சார்-?

கிருஷ்: ராமு — நன்ருகக் கேள். வாழ்க்கையில் எல்லாத்தாலும் எல்லோருக்கும் எல்லா விஷயங்களிலும், முழுமையாக, பரிபூரணமாக முழுமை கிடைக்குமேயாஞல் வாழ்வென்றுஒன்றே இராதப்பா. அப்படித்தான் இருந்தாலும் அந்த வாழ்வில், பற்றோ, பிடிப்போ, நம்பிக்கையோ இராது. எல்லாமே நிறைவாக இருந்தால், இப்படி நீயும் நானும் பேசவேண்டிய சந்தர்ப்பமோ, இவர்கள் இப்படிப் பார்க்கவேண்டிய சூழ்சியோ ஏற்பட்டிருக்காது. ஆகவே குறையும் நிறையும் வாழ்க்கைக்கு வேண்டியதுதான். இப்போது சொல உனது எண்ணம் என்ன-? நீ சாகத்தான் வேண்டுமா-?

(ராமு தலையைச்சொறிந்தபடி தீவிரமாக சிந்திக்கிருன்.)

ஓடியோடிஉழைத்த களைப்புத் தீருவதற்குமுன் பிள்ளை பட்டினி கிடக்கக்கூடாதே என்று துடியாய்த்துடித்து, தவியாய்த் தவித்துக் கொண்டு, ஓடோடிவரும்உன் தாய் இந்நேரம் இங்குஉன்னைக் காணுவிட்டால் -? அந்தத் தாயின் உள்ளம் எதையெதையெல்லாம் நினைத்து, எப்படியெல்லாம் வேதனைப்படும் என்று கொஞ்சம் நினைத்துப் பார் ராமு.

ராமு: உங்க புத்தியை நான் கேட்கிறேன் சாமி ... நீங்க சொல்லுவதுதான் சரி. சாமி என்னை மன்னிச்சிடுங்க. என்ர அம்மாச்சி- என்ர அம்மாச்சிதான். அம்மா எனக்காக நீ வாழ உனக்காகநான் வாழுவேன். ''ஓ''- பிள்ளையாரே பாவம் செய்யஇருந்த என்னை மன்னிச்சுப்போடு.

கிருஷ்: போய் உன்னுடைய இடத்தில் இருந்து கொள். போ - ராமு

ராமு: (கவலையுடன்) மத்தியானம் எனக்கு நெய்ச்சோறு வாங்கிக்கொண்டு வாறன் என்ற அம்மா இன்னமும் வரயில்லையே சாமி-? கோயிலுக்குபின்னேரம் ஆட்கள் வாறநேரமாய்ச்சு.

கிருஷ்: நீ மத்தியான உணவு இன்னமும் சாப்பிடவில்லையோ? ராமு கிட்டங்கியில் இன்று வேலை அதிகமோ என்னவோ. (யோசித்து, என்னவிடுந்தாலும்மத்தியானம் சாப்பாடுகொண்டு வராமல் இவளவு காலமும் இப்படி இருந்ததில்லையே-? ''ம்'' - ராமு பிற்பொழுது உனக்கு நான்தரும் ஆகாரம் என்னிடம் இருக்கிறது. கிணற்றுக்குப்போய் தண்ணீர் எடுத்துக்கொண்டு வருகிறன். இரு..

(கிருஷ்ணுஜீ போகிருர். அவன் தவழ்ந்து வந்து சத்திரத் திண்ணையில் ஏறி அமர்ந்துகொண்டு பிள்ளையாரை நோக்குகிருன். விழிகளிலிருந்து நீர் சொரிகிறது.)

ராமு: பிள்ளையாரே-என்ர பெருமானே. என்ர பிழையைப் பொறுத்திடு. உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். என்னைவிட்டு அம்மாவையும் அம்மாவை விட்டு என்னையும் கடைசிவரை பிரிச்சுப்போடாதே. அப்படி நீ கூப்பிடுகிறதாக இருந்தா எங்க இரண்டுபேரையும் சேர்த்தே கூப்பிட்டிடு. அப்பனே கூப்பிட்டிடு.

**ஜே. எம். இராசு**

(தள்ளாடியபடி தெய்வானை அங்கு வருகிருள்.)

தெய்வா: (ஜீனமான குரலில்) என்ர ராமு-

(ஆர்வத்தோடு) என்ர அம்மாச்சி-

(அருகில்வந்த தெய்வானை சரிந்து நிலத்தில் குப்புற வீழுகிருள்)

ராமு: (பதறியபடி) அம்மாச்சி... என்ர...[கீழே இறங்கி] என்ர அம்மாச்சி... ஏனணை விழுந்திட்டாய்? ஐயோ... அம்மா உனக்கு என்ன?- எணேய் அம்மாச்சி... ஐயோ நெத்தியாலே ரெத்தம் வடிகிறதே, என்ர அம்மா...

தெய்வா: [முனகியபடி] தண்ணி... தண்ணி...

[கிருஷ்ணுஜீ தண்ணீருடன் அங்கு வருகிருர்]

கிருஷ்: இதோ இருக்கிறது தெய்வானை.

(அவர் குனிந்து அவளைப் புரட்டி, தண்ணீரைப் பருக்குகிருர். அவள் சத்திரத் தூணைப் பற்றியபடி மெதுவாக எழுந்து அவரை உற்றுப் பார்க்கிருள். அவளினது நெற்றி மேட்டிலிருந்து வடியும் இரத்தம் ஆடைகளெல்லாவற்றையும் செந்நிறமாக்கிவிட்டிருந்தன. தலைமுடி கலைந்து, ஆடைகள் கிழிந்திருந்தன. கைகளில் முட்கள் கீறியதைப்போன்ற காயங்களிலிருந்து இரத்தம் பொசிந்துகொண்டிருந்தது. கிருஷ்ணுஜீ திகிலுடன் அவளையே வைத்தவிழி எடுக்காது பார்த்துக்கொண்டு நிற்கிருர்.)


தெய்வா: (ஆவேசமாக) நல்லாப் பாருங்கசாமி-நல்லாப் பாருங்க எந்த நிலையிலும் சத்தியத்தின் வழிதான் வாழவேண்டும் என்று நீங்க சொன்னீங்களே, அந்த வழியிலே கிடைச்ச சந்தோஷம் சாமி இது சந்தோஷம். சாமி; நீங்க சொல்லுங்க? உண்மையாக வாழுறதாக இருந்தால்- சத்தியமாக வாழுறதாக இருந்தால்- நேர்மை, நீதி, நியாயத்தோடுவாழுகிறதாயிருந்தால் அந்த வாழ்வின் தீர்ப்பு- இதுதான் சாமி......நல்லாப் பாருங்க இதுதான்.

கிருஷ்: (இரக்கமாக) உன்ஞல் நிற்கக்கூட முடியவில்லையே! அப்படி இரு தாயே இரு. உனக்கென்னம்மா நடந்தது-?

[10-ம் பக்கம் பார்க்க]

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் வந்த ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று.

10,000
மசி-பேர்குசன்
உரிமையாளர் பிழை
விட்டிருக்க முடியாது.



10,000 மசி – பேர்குசன், நாட்டின் ட்ராக்டர்கள் தொகையில் 75% மானவை.

10,000 மசி – பேர்குசன் ட்ராக்டர்கள், பல கோடி ரூபாய் பெறுமதியான பதில் உறுப்புக்கள், [illegible]கொண்டவை.

10,000 மசி – போகுசன் உரிமையாளரே இத் ட்ராக்டரின் வேளாண்மைப் பாவனைச் சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி – பேர்குசன். நாடெங்கிலும் இருபத்து மூன்று நிலையங்களில் சேவை வசதி கொண்டுள்ளன.

முதலாவதாக விற்கப்பட்ட மசி – பேர்குசன் இன்றும் பாவனையில் உள்ளது. எனவே ... 10,000 மசி – பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே!

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டெட்
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 93097.

424839

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டியக் கலைவானில் ஒரு புது நட்சத்திரம்



ஆண்டாளாக விநிதா!

## தென்றலிலே மிதந்து வரும் பூங்கொடியென பண் கொஞ்ச பரதமாடினர்!

அண்மையில் நடைபெற்ற செல்வி விநிதாசுலாம் பிள்ளையின் பரதநாட்டிய அரங்கேற்றம் இனிய கலை விருந்தாக இனித்தது. பதினொரு வயது நிரம்பிய செல்வி விநிதா தென்றலிலே மிதந்துவரும் பூங்கொடியென, களித்தாடும் கலாப மயிலென கலைமிஞ்ச பண் கொஞ்ச ஆடிய நடனங்களைப் பார்த்தோர் நெஞ்சங்களெல்லாம் ஆடி". வீரசிங்கம்மண்டபமேடையில் நடனமாடிய அவர், அங்கு சமுகமளித்தவரின் இதய அரங்குகளிலும் ஆடினர்!

பாரதிகலா மன்றத்தைச் சேர்ந்த திருமதி ஞானமணி செல்லையாவிடம் நாட்டியம் பயின்ற இவர் எதிர்காலத்தில் தனது குருவிற்கும் பெரும்புகழை நிச்சயம் கொடுப்பார் ஆகா! அந்தப் பிஞ்சுக்கைகளின் அசைவில் எத்தனை லாகவம், பிஞ்சு விரல்கள் பிடிக்கும் முத்திரைகளில் எத்தனை கலையழகு நெளிகின்றன பால் வடியும் முகம் காட்டும் உயிர்த்துடிப்பான பாவங்கள் தான் எத்தனை!

ஆரம்பத்தில் அலாரிப்பிலேயே அனைவரையும் கவர்ந்துவிட்ட செல்வி விநிதா வர்ணத்தில் அனுபவம் பெற்ற நடனஅரசியோ என்று நினைக்கச்செய்துவிட்டார். அதற்கு திருமதி ஞானமணி செல்லையா, திரு. தில்லைநாயகம் போல், திருமதி சாந்தி அழகரெத்தினம் ஆகியோர் சங்கராபரணத்தில் பாடிய ''கருணை செய்திட'' என்ற பாடல் எடுப்பாகவும் இனிமையாகவும் திகழ்ந்தது.

''காலைத்தூக்கி'' என்று யதுகுலகாம்போதி இராகப் பாடலைப் பாடும் போது திரு தில்லைநாயகம்போலின் குரலில் பக்திரசம் தொனித்தது. மெய்சிலிர்த்து பரவசத்தால் கண்களில் நீர்சொட்டும்படியாக விநிதாவின் நடனமும் அதற்கேற்ற அபிநய பாவங்களுடன் அமைந்தது. மேலும் அவர் ஆடிய தில்லானா பதம், ஆண்டாள் ஆகியவற்றில் அவரின் திறமைகள் பளிச்சிட்டன.

பதினொருவயதில் பாரம்பரியமிக்க பரதநாட்டியக் கலையைப் பயின்று பார்த்தோர் உள்ளங்களை மெய்மறக்கச்செய்த செல்வி விநிதா நாட்டியக்கலை வானில் முளைத்தெழுந்த ஒரு புது நட்சத்திரம்!

செல்வி விநிதாவின் பரத நாட்டியத்தைப் பார்த்தபோது அவருடன் பிறந்த இயற்கையான திறமை என்றவைரம் பளிச்சிட்டது. அதற்கு அவர் முயற்சி என்ற பட்டையைக் கால ஓட்டத்திலே தீட்டி வருவாராயின் அனுபவ முதிர்ச்சிமிக்க நாட்டியப் பேரொளியாக ஒரு காலத்தில் திகழ்வார் என்பது நிச்சயம்!

—எழில்

## இப்போதைய நாடகங்கள் நாடகங்களா?

# போலிக் கலைஞர்களை விரட்ட வேண்டும்!

**இப்போதைய நாடகங்கள் உண்மையான நாடகங்களா என்ற கேள்வியை எழுப்பி பிரச்னையை கிளறியிருக்கிறார் கலைமணி எஸ். வடிவேல்! ஆரம்பித்து வைத்திருக்கிறார் அவர். ஈழத்து நாடகக்கலைஞர்களே, தொடர்ந்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்!**

பிரச்னையை கிளறுகிறார்:
**கலைமணி எஸ். வடிவேலு**

(சென்றவாரத்தொடர்ச்சி)

இந்திய நடிகர்களும் இலங்கைநடிகர்களும் யாழ்ப்பாணத்தில் நாடகங்களை நடாத்திவந்த காலத்தில் ஒரு பொறாமைக் கும்பல் தோன்றியது. இவர்கள் உண்மையான நாடகக் கலைஞர்களை 'கூத்தாடிகள்' என்று இழிவுபடுத்தி கேலிசெய்திருந்தார்கள். அதே வேளையில் அவர்களே நாடகம் நடிக்கவும் தொடங்கினர்கள்; கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழிகளாக இவர்கள் நாடகத்தில், பாட்டில்லை நடனமில்லை. நாடகத் தமிழ் இல்லை; பலமுறை ஒத்திகை பார்த்து பெரிய விளம்பரத்துடன் நாடகம் மேடையேற்றுவார்கள். பிரவேசச்சீட்டு மடுவத்தில் விற்பதில்லை. நடிகர்கள் எல்லோரும் சேர்ந்து வீடுவீடாகச் சென்று பிரவேசச்சீட்டு விற்பார்கள். இவர்கள்தான் வீட்டுக்குவீடு பிரவேசச்சீட்டு விற்கும் கெட்டபழக்கத்தை ஏற்படுத்திவைத்தவர்கள். உண்மையான நாடக நடிகர்கள் ஒவ்வொருவரும் ஐம்பது நூறுஎன்று சம்பளம் வாங்கி நாடகங்களை நடாத்திவந்த காலத்தில் இந்தப் 'போலி' நடிகர்கள் காசில்லாமல் இலவசமாக நாடகங்களைச் செய்து கொடுக்க முன்வந்தார்கள்.

இவர்கள் நாடகக்கலையை தொழிலாகக்கொள்ளாதவர்கள் வேறு வருவாய் உள்ளவர்கள். தனவந்தர்கள் இவர்களால் உண்மையான நாடகக்கலையும்கெட்டு தொழில் நடிகர்களுடைய வருவாயும் குன்றிவிட்டது. நாடகக்கலையைத் தொழிலாகக் கொண்ட சிறந்த நடிகர்கள் இன்றும் நமது யாழ். நகரில் இருக்கின்றார்கள்; வருவாய் குன்றி மிகக் கஷ்டமான நிலையில். உண்மையான நாடகத்துக்கு இன்று 'கொட்டகைக்கூத்து' என்று ஓர் இழிவான பெயர்வைத்திருந்தார்கள். அப்போது ஓலையால் வேய்ந்த கொட்டகையில் நாடகம் நடைபெற்றது, அதை 'கொட்டகைக்கூத்து' என்றால் இப்பொழுது 'திறந்தவெளியரங்கு நாடகத்தை' 'திறந்தவெளிக் கூத்து' என்றும், நகரமண்டபத்தில் நடைபெற்றால் 'நகரமண்டபக் கூத்து' என்றும் ஏன் அழைக்கக்கூடாது? திறமையில்லாத 'போலி'கள் உண்மையான நாடகக்கலையை அழித்து ஒழித்து தாங்கள் இப்பொழுது நடிக்கும் அர்த்தமற்றசம்பாஷணைகள்தான் நாடகம் என்று உண்மை அறியாத பொதுமக்களை நம்பவைக்கும் எண்ணத்துடன் கையாளும் தந்திரமே இது. உண்மையை அறிந்தவர்கள் இருக்கும்வரை உண்மையான நாடகக்கலை ஒருபோதும் அழிந்துபோகாது. தமிழராகிய எமது கலைக்கு ஒரு கலாச்சாரமுண்டு. தமிழருக்கென ஒரு தனிப்பண்பாடு உண்டு. இவை எந்தத் தருணத்திலும் நாடகக்கலையோடு இணைந்து இருக்க

[10- ம் பக்கம் பார்க்க]



நாடக விமர்சனம்:

## தங்கைக்காக!

தங்கைக்காகவே: வாழ்ந்து அவளின் கற்பைக் காப்பதற்காகவே தன் உயிரையும் தியாகம் செய்யும் ஓர் அண்ணனின் கதைதான் 'தங்கைக்காக'. இந் நாடகத்தின் கதை சற்குணநாதனுடையது. வசனம்நா. வே. சண்முகத்தினுடையது. இயக்குனர் கு. முருகானந்தம் அப்பதினுறு சிலைகட்கும் உயிர் கொடுத்து அரங்கத்தில் உலாவவிடும் முதலாவது காட்சியேஒரு மௌனநாடகமாகநடைபெற்று மக்களின் கவனத்தை ஈர்த்து விடுகிறது.

கனேஷ் ஆக நடித்தலோகநாதனும் சாந்தாவாக நடித்த புஸ்பநாதனும் ரவியாக நடித்த விக்னேஸ்வரனும்

10-ம் பக்கம் பார்க்க

## இரு நாடகங்கள்

கரவை வள்ளுவர் மன்றத்தின் சார்பில ஏ.ரி. நிதியின் தங்கப்பதக்கம் பரிசு பெற்ற 'தங்கப்பதக்கம்' என்ற நாடகமும், வடக்கை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த கரவை வள்ளுவர் மன்றம் அளிக்கும் 'காதலும் கத்தரிக்காயும்' என்றநாடகமும் 23-12-69போயாதினத்தன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திரு. செ. இரங்கநாதன் கியூ.சி. தலைமையில் நடைபெற்றது.

நடிகை சுப்புலட்சுமி காசிநாதன், ஏ.ரி நிதி, செ. அருளானந்தம் (கரவை அருள்) வி.எஸ். மூர்த்தி, பீ. ஏ. நாதன் எஸ். எஸ். மணியம் கரவை விநாயகன், பாலா ஆகியோர் நடித்தனர்.

## கொழும்பில் நாடக விழா

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1-1-70 (புத்தாண்டு பிறக்கும்வேளையில்) திருமதி புனிதம் திருச்செல்வம் தலைமையில்நாடக விழா நடைபெறவுள்ளது டாக்டர் சரஸ்வதி முத்துவேலு வரவேற்புரை நிகழ்த்துவார். வீ, ஆ. புரட்சிமணியின் 'உன் தந்தை யார்?...... 'நாகரீகம் தந்த பரிசு" முதலிய நாடகங்கள் மேடையேறவுள்ளன நடிகை ஜெயந்தி, பி. சுகந்தமலர், எல் கலாராணி, எவ். ரோகிணி ஆகியோரின்நடனமும் இடம்பெறும்.

இக்கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் இலவசமாகவே நடைபெறவுள்ளன.

## ரஞ்சித்தின் மிருதங்க அரங்கேற்றம்

அண்மையில் மிருதங்க அரங்கேற்றம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் தர்மலிங்கம் இரஞ்சித்தின் ஆற்றலை வெகுவாகப் பாராட்ட வேண்டும்.

மிருதங்கப் பேரரசன் திரு ஏ. எஸ், இராமநாதன் அவர்களிடம் பயின்ற இவர் இப்பேது மிருதங்க வித்துவான் ரீ பாக்கியநாதன் அவர்களிடம் பயின்று வருகிறார்.

சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரிக்கு செல்வன் இரஞ்சித் மிருதங்கம் வாசித்தார். பொன் சுந்தரலிங்கம் தனக்குச் சொந்தமான கம்பீரத்துடன் பாடினார். பல கடினமான உருப்படிகளையெல்லாம்பாடினர். செல்வன் இரஞ்சித்துடன் கைதடி கணேசன் கெஞ்சிராவும், பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த சர்மா வயலினும் வாசித்தனர் செல்வன் இரஞ்சித்மிக லாவகமாகமிருதங்கம் வாசித்தார். எந்தச்சந்தர்ப்பத்திலும் இரஞ்சித் தளம்பவே இல்லை

சுருங்கச் சொன்னால்இவர் வருங்காலத்தில் ஒரு பெரிய மிருதங்க வித்துவானாக மிளிர்வது திண்ணம்.

— ஆ. தேவராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாத்திகத்திலிருந்தும் அக்கிரமத்திலிருந்தும் உலகைக் காக்கவேண்டும்

## அமரர். சேர். பொன். அருணாசலத்தாரின் அறிவுரை

இலங்கையில் கொழும்பில் கொச்சிக்கடைத் தெருவில் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரருக்கு ஓர் அருமைக் கோயிலும் எடுத்து சில பள்ளிக்கூடங்களையும் கட்டியிருக்கும் மகான் ஸ்ரீலஸ்ரீ சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அருமைத் தம்பியார் ஸ்ரீலஸ்ரீ சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தனது தமையனார் அவர்களின் குருபூசைத் தினத்தன்று, (13-12-1969) கைலாயத்திலிருந்து விண்ணுலகத் தொடர்புப்பெட்டி மூலமாக மீரிகாமம் இந்திப்பாப்ப 'ஆனந்த நிலையம்' என்னும் இடத்தில் நிகழ்த்திய விண்ணுலகத் தொடர்பின் நன்மைகளைப்பற்றிய விளக்க உரை]

பொன்னம்பலம் அருணாசலம்பேசுகிறேன். நான் என் அண்ணா அவர்களின் குருபூசைத் தினத்தன்று உரை நிகழ்த்துகிறேன். இந்த இறந்தவர்களுடன் பேசுவதைப் பரப்புவது மிகவும் முக்கியமான செயல் என்பதை நானும் வலியுறுத்தவே இவ்வுரையை நிகழத்துகிறேன்.

இன்று அவ்வுலகத்தில் சந்திரனுக்குச் செல்வதெல்லாம் இந்த இறந்தவர்கள் மண்ணுலகோருடன் தொடர்பு கொள்ளும் அற்புதத்திற்கு முயற்சிசெய்து போக முடியும். ஏனென்றால் அன்று ஐந்துமைல் சென்றவன் இன்று பலமைல்கள் செல்கிறான், செல்லவும் முடியும். அவ்வளவுதான். இதைப் பெரிய விஞ்ஞான முயற்சி என்று சொல்லமுடியாது. நான்சொன்ன கருவிகளை அவன் கண்டுபிடிப்பதுதான் விஞ்ஞான முயற்சிக்கே ஓர் உன்னத இடம் கொடுக்க முடியும்.

இன்று அவ்வுலகை நாத்திகத்திலிருந்தும் அக்கிரமங்களிலிருந்தும் விரைவில் காப்

### விண்ணகம் பேசுகிறது

முன்னால் எம்மாத்திரம்? ஆனால் சந்திரனுக்கு மனிதன் சென்றது ஒரு சாதனைதான் என்பதையும் அது மனிதனின் வெற்றிதான் என்பதையும் நான் மறுக்கவில்லை. இருந்தாலும் இதைவிட அது ஒரு பெரிய சாதனை என்று சொல்லமுடியாது என்பது என் கருத்து.

மனிதன் உண்மையான வெற்றி என்று அடைவான் என்றால், அவன் விண்ணுலகோர் பேசுவதை மண்ணுலகோர் கேட்கவும் விண்ணுலகத்தோரை மண்ணுலகோர் யாவரும் பார்ப்பதற்கும் விஞ்ஞானத்தால் கருவிகள் கண்டு பிடிக்கிறானோ அன்றுதான் உண்மையான வெற்றியை அவன் விரைவில் அடைந்தாகவேண்டும்.

சந்திரனுக்கு அவனால் எளிதில் விஞ்ஞான பாற்றியாக வேண்டும் இன்று அவ்வுலகில் திரையுலகம் மிகவும் மோசமாக இருக்கிறது. அதுவே பாதி மக்களை ஒழுக்கம் கெட்டு நடப்பதற்கு எத்தனிக்கச் செய்யும். அதைவிட மோசம் அதில்வரும் பாடல்கள். எங்கு பார்த்காலும் ரேடியோ இருப்பதால் எந்நேரமும் அதில் போடும் ஆபாசப் பாடல்களை சிறு குழந்தைகளும் கேட்டுவிட்டு கெட்டுப்போகிறது. அக்காலத்தில் திருஞான சம்பந்தப்பெருமான் மூன்று வயதிலேயே தேவாரம் பாடினார்கள். இன்றானால் தேவாரம் பாடவேண்டிய சிறு குழந்தைகள் சினிமாப்பாட்டைப் பாடிக்கொண்டிருக்கின்றன. என்ன அநியாயம்!

வளர்ந்துவிட்டவர்களைக் கூட எக்கேடும் கெட்டுப் போங்கள் என்று தள்ளிவிடலாம். ஆனால் சிறு குழந்தைகளை அப்படித் தள்ளமுடியாது. ஏனென்றால் அவர்கள் வருங்கால மனிதர்கள். வளரும் இத்தலைமுறையினரை எல்லோரும் பாடுபட்டு கட்டுப்பாட்டோடு பக்தியாக வளர்க்கவேண்டும்.

அக்காலத்தில் எங்குபார்த்தாலும் சதா தேவாரங்களைக் கேட்கலாம். இன்றோ எங்கு பார்த்தாலும் சதா சினிமாப்பாடல்களைக் கேட்கலாம். அக்காலத்தில்மாலை ஆறு மணியானால் எங்காவது கதாகாலட்சேபம்இருக்கும். அதைக்கேட்க பாதி மக்களும், கோயிலுக்குப்பாதி மக்களும் செல்வார்கள். இன்றோ மாலை ஆறு மணிக்கு சகல சினிமாத்தியேட்டர்களும் திறந்திருக்கும். அங்கு பாதி மக்கள் செல்கிறார்கள் றேடியோ முன்பு பாதிமக்கள் இருக்கிறார்கள். இன்று மனிதர்கள் எல்லோருடைய கடமைகளில் சிறு குழந்தைகள் தேவாரம் பாடவைப்பதும் ஒருகடமையாகும்.

அதோடு இன்று மக்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்வது மிகப்பெரிய தவறு. அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்வார்களானால் அவர்கள் கொலைகாரர்கள் என்றும் கருதலாம். அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டைச்செய்து ஜனத்தொகையைக் குறைப்பதாக எண்ணிக்கொண்டு இருக்கையில் அங்கு மற்றொருவருக்கு ஒரே பிரசவத்தில் நாலு குழந்தைகள் பிறக்கின்றன ஆக இவர்கள் இரு குழந்தைகளோடு நிறுத்திக்கொண்டார்களானால் அங்கு அதற்குச்சரியாகப் பிறந்துவிடுகிறது. ஆக எப்படியோ ஜனத்தொகை கூடிக்கொண்டுதான் வருகிறது. ஜனத்தொகை கூடாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசனை கேட்க யாவரும் நேரே வரவும், மீரிகாமத்திற்கு. விண்ணுலகோர் சிறந்த யோசனைகளை அன்புடன் நல்குவார்கள். நாளுக்குநாள் நாட்டில் செழிப்பைக்காண வாருங்கள், மீரிகாமத்திற்கு. மீண்டும் அழைப்பு விடுகிறேன். ஜனத்தொகையைக் குறைக்கும் வழியைக் கேட்பதற்கு மட்டுமல்ல, வேறு சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும் சமயத்தைப் பற்றிக் கேட்கவேண்டுமா? ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் இருக்கிறார்கள். அரசியலைப்பற்றிக் கேட்க வேண்டுமா? எண்ணற்ற அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் அவரவர் வீட்டிலும் அவரவருக்குப் பிடித்தமான இறந்துபோன தலைவர்களுடனும் உறவினர்களுடனும் உரையாடலாம். உங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். உண்மையை அறியலாம். மற்றவர்களுக்கும் இதை உணர்த்தலாம். இப்படி இன்னும் பலபல நன்மைகளை நம்மோடு பேசினால் அடையலாம். இறந்தவர்களுடன் பேசுவதைப் பற்றி சிலர் தவறான கருத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் மீரிகாமத்திற்குவர அழைப்பு விடுகிறேன் வந்துதெளிவடையுங்கள் என்று. ஆக, இறந்தவர்களுடன் பேசுவது அதி முக்கியம் என்று வலியுறுத்துகிறேன். அதனால்உள்ள நன்மைகள் கணக்கற்றது என்பதைத் தெரிவிக்கிறேன்,

இறந்தவர்களுடன் பேசுவதில் உள்ள மிகப்பெரிய நன்மைகளை என்னால் முடிந்தமட்டும் உங்களுக்கு விளக்கிவிட்டு என்னுடையஇந்த மிகச்சிறிய உரையை இனிது முடித்துக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

ஸ்ரீகற்பக விநாயகப்பெருமானும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரரும் எல்லோரையும் காத்து ரட்சிக்கட்டும். நாம் இறைவனை வணங்குவோமாக.

(நன்றி)

# கவிதை ஊற்று

— அறவாழி —

வெதும்பியே நெஞ்சம் வீங்க
வேதனை தணலாய்த் தீய்க்க
ததும்பிநீ ஆடுகின்றாய்
தண்ணொளி ஊற்றுப் போல
பதுங்கிநீ என்னுள் மட்டும்
பரவசமடைய வேண்டாம்
ஒதுங்கிவா எழுத்துக் குள்ளே
உணர்விலார் உளத்தில் பாய

அடிமையாம் வெயிலால் வெந்தே
அரசிழந் திழிவால் நொந்து
வெடிப்பினால் பிளவு பட்டு
வியத்தகு செழிப்பே தீய
படிப்பினால் பட்டம் பெற்றும்
பண்பிலாப் பாலை நெஞ்சில்
துடிப்பெழத் தண்மை சேரத்
தொடர்ந்து நீ பாய வேண்டும்

புன்செய்யும் நன்செய்ஆகும்
பொலிவுடன் வலிவும் சேரும்
வன்எண்ணப் புல்லுச் சாகும்
வளம்மிகக் கருத்து நெல்லாம்
பொன்கொழித் துயிர்கள் உய்யும்
போர்முறை அறவே மாயும்
நின்மனம் இரங்குமானால்
நினக்கா நான் சொல்ல வேண்டும்.

பாய்ந்திடத் துணிந்தாயானால்
பாய்ச்சலைத் தடுப்பாருண்டோ
ஒய்ந்திடாய் ஒதுங்கி நில்லாய்
ஒருமுகப்பட்டே பாய்வாய்
மாய்ந்தனர் மன்னர் பாரில்
நின்னையே மாய்க்க எண்ணி
காய்ந்தவர் தம்மைக் காக்கக்
களிநடம் புரிந்து வாராய்

ஈழமாம் கழனி தன்னில்
இன்தமிழ்ப் பயிர்தான் வாடி
மாளத்தான் விடுவாயோ நின்
மனமென்ன மரத்தா போச்சு
வாழத்தான் வைப்பாய் உன்றன்
வழிவழி மரபைப் பேணி
ஊழையும் எதிர்த்து நிற்கும்
உன்திறன் அறியார் யாரோ

ஓடி நீ பாய்ந்து வாராய்
உணர்வெனும் கவிதை ஊற்றே
பாடிநீ பண்ணிசைத்தே
பரவுவாய் உள்ளந்தோறும்
நாடிநீ சென்ற நெஞ்சம்
நலம்பெறும் உயரும் மேலும்
தேடியே நின்னை நாடும்
தீஞ்சுவைக் கவிதை ஊற்றே

# 'கடவுளைக் கண்டேன்'

## கரணவாய்க் கல்விமான் சுவாமிநாதரின் ஆவி தகவல்

ஆவியுலகத்துடன் தொடர்பு கொள்ளுவது பற்றிநான் பல புத்தகங்களிலிருந்து முன்னரே தெரிந்து வைத்திருந்தேன். ஆனாலும் இது எமது நம்பிக்கைக்கு எட்டாத ஒன்றாக இருப்பதாகவே எண்ணிக் கொண்டேன். திரு. கந்தையாபிள்ளை என்பவர் எழுதியிருந்த மேல்நாட்டு முறைகளை ஆதாரமாகக் கொண்ட ''மரணத்தின் பின்'' என்னும் புத்தகத்தைச் சில வருடங்களுக்கு முன்னர் வாசித்திருந்தேன்.

அப்புத்தகத்தில் காணப்பட்ட தகவல்கள் சம்பவம் நடந்த இடம், திகதி, ஆவிகளுடன்தொடர்புகொண்டபோது கூடவிருந்த அந்நாட்டுப் பிரமுகர்களின் விபரங்கள் ஆதாரபூர்வமாகவும், ஆவிகளுடன் பேசமுடியும் என்ற நம்பிக்கைக்கு வலுவூட்டுவனவாகவும் இருந்தன.

யில் சுகாதாரப்பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. எஸ். சண்முகம்பிள்ளை (தற்போது கல்முனை சுகாதாரப்பகுதி அதிகாரி)யும் ஆவிகளுடன் பேசும்முறையைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்த பொழுது வெற்றிகிடைத்தது. இதனை அவர் தனது ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார்.

A முதல் Z வரையிலான 26 ஆங்கில எழுத்துக்களையும் சமஅளவில் கொண்ட ஒரு சதுரத்தட்டின் மத்தியில் வைக்கப்படும் நீர்நிரம்பிய கண்ணாடிக் கிண்ணம் (கிளாஸ்)தான் மீடியமாகப் பயன்பட்டது. இக்கிளாஸ் துள்ளித்துள்ளிஓடி எழுத்துக்களைத் தொட்டுநிற்கும். இம்முறைமூலம் 1968-ம்ஆண்டு வல்லையில் நிகழ்ந்த கார்-பஸ் விபத்தில் காலமான வடமராட்சிப் பகுதி வைத்திய அதிகாரி டாக்டர் திரு. ஜீவநாயகத்துடன் அவரது

மாற்றமும் நாம் அறி
ததுஅல்ல.

ஆவியுலகத் தொடர்
நம்ப மறுப்பவர்கள் ம
தன் சந்திரனில் கா
லவத்த செய்தியை ந
மறுத்தாலும் ஆச்சரியப்
வதற்கில்லை. இங்கு '
தக முறையில் ஆவிகளுட
பேசும் முறை[illegible] செ
பார்த்தபொ[illegible]னக்
இத்தகைய [illegible]ப்
கிடைத்தது.

செல்வி வித்தகத்தின் ஆ
களுடன் பேசும்முறை எ
க்கு வெற்றியளித்துள்ள
ஆவிகளுடன் பேசுவ
உண்மைதானென்று இ
னைச் செய்துபார்த்த என
நண்பர்களும் ஒப்புக்கொ
டுள்ளனர்.

நான் 10-9[illegible]62
மான எனது பெரியதகப
னார் (மன்னாரில் உணவுக்க
டுப்பாட்டதிகாரியாகவு
யாழ். மாநகரசபையி
2-ம் வட்டார உறுப்பின
கவுமிருந்தவர்) திரு. எ

— ஜே. ஜெயக்குமார் —

வெளிநாடுகளில், இறந்தவர்களுடன் பேசும்முறை பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அங்கு ஒருவரை 'மீடிய'மாகக் கொண்டு அவர் மூலமே ஆவிகளைப்பேச வைக்கும் முறை கையாளப்பட்டுவருகின்றது. இம்முறை மூலம் முன்பின் தெரியாதவர்கள் தமது இறந்த உறவினர்களின் ஆவிகளை வரவழைத்து உரையாடியபோது அதிர்ச்சிதரும் உண்மைகள் வெளியாகினவாம். அந்த ஆவிகள் தம்முடன் பேச வந்த தமது உறவினர்களுடன் ''குடும்ப இரகசியங்களைப்'' பகிர்ந்து கொண்டனவாம்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்களில் ஒருவரும் தனது இறந்த மகளின் ஆவியுடன் பேசினாராம். இதன் மூலம் மனிதன் இறந்தபின் நடக்கும் நிகழ்ச்சிகளைவெளிநாட்டினர் ஆவிகளிடமிருந்து அறிந்து பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டனர்.

இவற்றை வாசித்ததிலிருந்து இறந்தவர்களுடன் பேசுவதில் நான் ஆர்வம் காட்டத் தொடங்கினேன். முன்னர் அல்வாய்ப்பகுதி

குடும்பத்தினர் உரையாடினர்.

இம்முறையைப் பற்றிப் பத்திரிகை நிருபர் என்ற முறையில் திரு. சண்முகம் பிள்ளை எனக்கு விபரமாகத் தெரிவித்திருந்தார். அன்றைய சூழ்நிலையில் என்னால் நம்பமுடிந்தாலும் பிறர் எள்ளி நகையாடுவார்கள் என்ற தயக்கத்தினால் இத்தகவல்களை வெளியிடாமலிருந்துவிட்டேன்.

மீரிகாமம் என்னும் இடத்தில் செல்வி வித்தகம் விநாயகவடிவு இறந்தவர்களுடன் பேசும் முறையைக் கையாண்டுவருவதை 'ஈழநாடு' துணிச்சலுடன் வெளியிட்டு வருவது என்னை மகிழ்ச்சிக் குள்ளாக்கியது. எங்கும் புதுமைகள் நிகழும்போது அவற்றிற்கு எதிர்ப்புகள் ஏற்படுவது இயல்பே. இளைஞர்களைத் திருத்த முயன்ற சோக்கிரட்டீஸுக்குக் கிடைத்த எதிர்ப்பையும், விஞ்ஞானி கலிலியோ கலிலியின் புதிய கண்டுபிடிப்பை நம்ப மறுத்த பொதுமக்கள் அவரைக் கல்லெறிந்து துரத்திய நிகழ்ச்சியும், இன்று அவர்களை வரலாறு போற்றும் கால

எஸ். பிரான்சிஸ் சேவியர்
ஆவியுடன்தொடர்புகொ
டேன். அவர் தன்னுட
பேசுவதையிட்டு மகிழ்
தெரிவித்துக்கொண்டார்.

அவர் தனது குடும்பத்
னர்பற்றியும், அவரின் த
யாராகிய எனது தந்
பற்றியும்பேசும்பலகைமூ
வைதத்தார். எங்களுக்கு
தெரியாத பல விஷயங்க
யும் சொன்னார். விசாரி
பொழுது அது உண்மை
யாக இருந்தன. ஆவி
கில் தாம் காற்று உரு
வேலயே இருப்பதாகவு
அங்கே தொழில்கள் உ
டென்றும் தான் கமிஷன
கத் தொழில் பார்ப்பத
வும் சொன்னதோடு, நா
நிருபராக இருப்பது தனக்
விருப்பம் என்றும் பாரா
டினார்,

ஆவியுருவில் பசி இரு
தாகவும், வேலைசெய்வ
ஒருகடமையென்றும், அ
குப் பிரதிபலனாக ஒன்
கிடையாதென்றும் பூமியி
தமக்காகப் படைக்கப்ப
உணவிலிருந்து அத
சுவையை நுகர்வதாயும்
ரதுஆவி பதில் தந்த
அவரது தாயின் ஆவி
அவருடன் இருக்கிற

தே

# கருணையா எழுந்த

அஞ்சாதே கயிலாய மலை
யெடு
அரக்கர்கோன் தலை
பத்
மஞ்சாடு தோள் நெரிய
அடர்த்தவனுக்
அருள் புரிந்த மைந்
கோ
இஞ்சாயல் இளந்தெங்
பழம்
இளமேதி யிரிந்தங்
கோ
செஞ்சாலிக் கதிருழக்கி
செழுங்க
வயல்படியுந் திரு
யா

அரக்கர்குலத் தலை
னும் இலங்கை வேந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரத் திருவமுது—3

# ணையங்கடலான பெருமான் ழுந்தருளிய திருக்கோவில்

த கயிலாய மலை யெடுத்த க்கர்கோன் தலைகள் பத்தும் தோள் நெரிய அடர்த்தவனுக்(கு) ள் புரிந்த மைந்தர் கோயில் ல் இளந்தெங்கின் பழம் வீழ மேதி யிரிந்தங் கோடிச் லிக் கதிருழக்கிச் செழுங்கமல ல்படியுந் திருவை யாறே,

க்கர்குலத் தலைவ லங்கை வேந்தன்

இராவணனுக்குப் பத்துத் தலைகள், இருபது கைகள், சூற்கொண்ட முகில்கள் வந்துபடிவதற்குஏற்றமலைச் சிகரங்கள்போலத் திரண்டு ஓங்கி வளர்ந்த இருபது புஜங்கள். அவனே வணங்கா முடி மன்னன். அஞ்சா நெஞ்சன், நினைத்ததை நிறைவேற்றுந் திறலுடையவன். ஆனாலும் சிறந்த சிவபக்தன். சிவபிரானைக் குறித்து அரிய தவஞ் செய்து வரப்பேறுகள் பெற்றவன். இவையெல்லாம் இருந்தும் என்ன பயன்? அகங்காரம் எனப்படும் இறுமாப்பு அவனையும் விட்டபாடில்லை. அதனால் என்ன செய்ய முனைந்தான் என்றால், யாவுமாகி, எங்கு

கொண்டுவர முற்பட்டான். இராவணப்பிள்ளை, கைலை மலையின் அடிவாரத்திலே தனது வாளால் வெட்டிய வெடிப்புக்குள் தனது தோளைக் கொடுத்து அதனைத் தூக்க முனைந்தான். அசைதல் இல்லாத மலையும் சிறிது அசைந்தது. அதனைத் திருவுளங்கொண்ட கைலாசபதி தமது திருவடியின் பெருவிரலைச் சிறிது அழுத்தியருளினார். இங்கே 'சிறிது' என்பதைக் கருத்துட் கொள்க. அதனால், மலையிடுக்கில் அகப்பட்ட பத்துத் தலைப்பூச்சி நசுங்கத்தொடங்கியது; இருபது விழிகளும் பிதுங்கின. செய்வது இன்

விளக்கம் தருபவர்:
**ஆத்மநாதன்**

மாகி நிறைந்த பரம்பொருள் சிவபிரான் என்பதை அவன் உணராமல், ஆன்மாக்களுக்கு அருள் சுரக்கும் வண்ணம் எம்பிரான் சாந்நித்தியமாக விற்றிருக்கும் செம்பொற் திருக்கோயில் கொண்ட வெள்ளியங்கிரி எனப்படும் திருக்கைலாய மலையையே தனது புயபல பராக்கிரமத்தினால் வெட்டி எடுத்துப் பெயர்த்துக் கொண்டு இலங்காபுரிக்குக்

னது என அறியாது தியங்கினான் இராவணன். அந்த நிலையில் நாரத மகாமுனிவர் அங்கு தோன்றி ''இலங்கையர்கோனே சுகமா'' என வினவினார். முனிவரைப் பார்த்த இராவணன், ''முனிவர் பெருமானே! என்னை இந்தநிலையில் கண்டபின்னுமா இப்படிக் கூறுகிறீர்கள் என்றான். நாரதரோ ''சாமகானப்பிரிய சிவ'' எனப் பாடிக்கொண்டு அப்பாற் போய்விட்டார். நாரதருக்கோ ஒரு சாபம்-தாம் அறிந்ததை எவருக்காவது சொல்லாமலிருக் கலாகாது. ஆயினும், சந்நிதி விரோதமாக ஒன்றைச் சொல்லிச் சிவாபராதத்தைத் தேடிக் கொண்டாலும் அது தமக்கே ஆபத்தாகும் அதனால் அவர் அப்படிச் சொல்லிப் போயினார்.

நாரதரது வார்த்தையைக் கேட்ட இராவணன் சிந்தித்தான்; தெளிந்தான், அதனைச் செயற்படுத்தத் துணிந்தான். உடனே தனது பத்துத் தலைகளுள் ஒன்றைத் திருகி எடுத்தான்; தனது இருபது கைகளுள் ஒன்றை இடுங்கி அதனுள் தண்டாகச் சொருகினான்; உடம்பில் உள்ள சில நரம்புகளை ஈர்ந்து அதிலே தந்திகளாகப் பூட்டினான். வீணையொன்று உருவாகி அவன் கைகளில் விளங்கியது. இலங்கை வேந்தன் சங்கீத மேதையன்றோ! அவனது உடல் நெரியுண்ட நிலையிலேயே சாமவேதகானம் வீணையின் நாதமாக ஊற்றெடுத்துப் பெருகியது. அதன் மேலும் கைலாசபதியின் தடைப்படாக்கருணை காலந்தாழ்க்கவில்லை அவனை விடுவித்து அருளியது. அப்படிக் கருணையங்கடலான பெருமான் எழுந்தருளிய திருக்கோவில்யாது? எனில்,

செழுமை வாய்ந்த குளிர்ந்த சாயலோடு கூடிய இளந்தென்னையிலிருந்து பழுத்த தேங்காய் விழுகிறது. அந்த அதிர்ச்சியினால், அயலே நின்ற எருமைக்கன்று, மிரண்டு பாய்ந்து, செழித்து விளைந்த செந்நெல்வயல்களை உழக்கிக்கொண்டு ஓடிச் செந்தாமரைகள் அலர்ந்துள்ள நீர்த்தேக்கத்திலே படிகின்றது. இத்தனையும் அமைந்த த[illegible] யாறு அதுவே [illegible]

[12ம் பக்கம் பார்க்க]

# டன்'

வல்

ம் நாம் அறியா ல.

லகத் தொடர்பை றுப்பவர்கள் மனி ந்திரனில் காலடி செய்தியை நம்ப லும் ஆச்சரியப்படு ல்லை. இங்கு 'வித் றயில் ஆவிகளுடன் முறை[illegible] செய்து பெற[illegible]னக்கும் கய [illegible]ப்பட கது.

வித்தகத்தின் ஆவி பேசும்முறை என ற்றியளித்துள்ளது. டன் பேசுவது தாமென்று இத ய்துபார்த்த எனது ளும் ஒப்புக்கொண் ர்.

0-9[illegible]62[illegible]கால னது பெரியதகப்ப ஞரில் உணவுக்கட் டதிகாரியாகவும். நகரசபையின் டார உறுப்பினரா தவர்) திரு. எம்.

என்று கேட்டபொழுது இல்லை என்றும் அவருடைய தாயின் ஆவி எமது குடும்பத்தில் எனது தங்கைகளிலொருத்தியாகவும் சொல்லி மறுபிறப்பு எடுத்துள்ளதாகவும் அவளது பெயரையும் (கலா) சொன்னார்.

எனது அம்மாவின் தாய், தந்தையின் தகப்பனுருடைய ஆவிகளுடனும் பேசினோம். எனது பேரன் முறையான 19-9-64-ல் காலமான மலாயன் பென்சனியரும் கல்விமானுமாகிய திரு. கு. சுவாமிநாதரின் ஆவியுடன் பேசியபொழுது புதிய தகவல்களைச் சொன்னார்

ஆவியுலகத்தவர்கட்கென ஒரு பாஷையுள்ளதென்றும், இறந்த ஆவிகள் அவர்கள் செய்த பாவத்திற்கேற்ப தண்டனை பெறுவதாகவும், மோட்சம், நரகம்என்பவை உண்டென்றும் பதில் தந்தார், தான் கடவுளைக்கண்டதாகவும், கடவுள் இல்லையென்று சொல்பவர்கள் மடையர் (Madaiyar) என்றும் பேசும்பலகையில் பதில் வந்தது. அவருடைய பேச்சின்நடுவில் அடிக்கடி I என்ற எழுத்துத் தொடர்ந்து காட்டுவதன் மூலம் அவர் பலமாகச் சிரிப்பதை உணர்ந்துகொண்டோம் அவர் உயிருடன் இருக்கையில் பேச்சுக்கு நடுவில் பலமாகச் சிரிப்பது வழக்கம்.)


இவருடைய ஆவியும் தாம் காற்றுருவே என்றும் பதில்தந்தது. இறந்தவர்களின் ஆவிகளுடன் பேசும்பொழுது பணிவாகவும் பக்தியாகவும் கேள்விகள் கேட்கவேண்டும். ராங்கித்தனமான கேள்விகளுக்குஒரு போதும் பதில் வரமாட்டாது. இதனால் மீடியமாக இருப்பவர்மீது குறைசொல்வது தவறானது,

எவ்வளவு பணிவாகக் கேள்வி கேட்கிறோமோ அவ்வளவு தகவல்களைப் பெற முடியும்.

ரான்சிஸ் சேவியரின் ன்தொடர்புகொண் அவர் தன்னுடன் தயிட்டு மகிழ்ச்சி துக்கொண்டார்.

தனது குடும்பத்தி யும், அவரின் தம்பி எனது தந்தை பேசும்பலகைமூலம் ார். எங்களுக்குத் த பல விஷயங்களை ன்னார். விசாரித்த அது உண்மையா ருந்தன. ஆவியுல ாம் காற்று உருவி இருப்பதாகவும், தொழில்கள் உண் தான் கமிஷனரா ழில் பார்ப்பதாக ன்னதோடு, நான் இருப்பது தனக்கு என்றும் பாராட்

நுவில் பசி இருப்ப வேலைசெய்வது மயென்றும், அதற் பலனாக ஒன்றும் தென்றும் பூமியில் ப் படைக்கப்படும் ருந்து அதன் நுகர்வதாயும்அவ பதில் த்தது. தாயின் ஆவியும் இருக்கிறதா



சந்திரப் பயணம் - 1

# அம்புலி ஆராய்ச்சியால் எவருக்கு என்ன பயன் ?

அம்புலியில் மனிதன் இறங்கி காலடிவைத்து, நடமாடி சுவடுகளைப்பதித்துவிட்டு பூமிக்குத் திரும்பிய விஷயம் இப்பொழுது பழைய சங்கதியாகிக் கொண்டிருக்கிறது. என்றாலும் அந்த உண்மையை இன்னமும் நம்புவதற்கு பலர் மறுத்து வருகிறார்கள்.

''நிலாவிலாவது மனிதன் இறங்குவதாவது'' என்று அவர்கள் அடியோடு மறுக்கிறார்கள்.

அறியாமைதான் இதற்கு முழுக்காரணம் என்று கூற முடியாது. சந்திரனில் மனிதன் இறங்கிவிட்டுபூமிக்குத் திரும்பிய சம்பவம் விஞ்ஞானரீதியான உண்மையென்பதை முற்றாக அறிந்தவர்களும்கூட தமது சமய சம்பிரதாய பழைய நம்பிக்கைகளுக்கு இது மாறான

அப்பலோ-11 பயணத்தில் நீக்ரோக்களில்அனேகர் அக்கறைகாட்டாமலேஇருந்தார்கள். 'ஈகிள்' கலம் அம்புலித்தரையில்இறங்கிவிட்ட செய்தி கிடைத்தபொழுது மவுன்ட் மொரிஸ் பார்க்கில் கலாச்சார நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கேலியும் கிண்டலும் செய்து கூச்சலிட்டார்கள்.

''பூமியில் பயன்படவேண்டியகொள்ளைப்பணம் வீணாக இந்தமுயற்சியில் செலவழிக்கப்படுகிறது. நல்ல அமெரிக்கன் எவனும் இது பற்றி மகிழ்ச்சியடையமாட்டான்' என்று நீக்ரோ தொழிலாளி ஒருவர் கூறினார்.

''இந்த சந்திரயாத்திரை ஏழைகளுக்கு எந்த விதத்திலும் உதவவில்லை, அமெரிக்கப் பிரச்னைகளுக்கு இது எந்த வகையிலும் சம்பந்தப்பட்டதல்ல'' என்று மான்

கும் பெருமளவில் உதவியுள்ளன என்பதிலும்-இனி மேலும் உதவப்போகின்றன என்பதிலும் விஞ்ஞானிகள் மத்தியில் கருத்துவேறுபாடு கிடையாது.

விண்வெளி ஆராய்ச்சி தொடங்கி ஏறத்தாழ பத்து ஆண்டுகளே கடந்துள்ளன. என்றாலும் இந்தக் குறுகிய காலத்துக்குள் விண்வெளி ஆராய்ச்சியின்மூலம் மனித குலத்துக்கு எண்ணிறந்த நற்பயன்கள் விளைந்துள்ளன என்கின்றனர் விஞ்ஞானிகள்.

காலநிலைஅறிவிற்கும்செயற்கைக்கோள்கள்மூலம்புயல் அபாயங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிகின்றது. தகவல் தொடர்பு கோள்கள்மூலம் ஒரு கண்டத்திலிருப்பவர்கள் தொலைவிலுள்ள இன்னொரு கண்டத்திலிருப்பவர்களோடு வெகு எளிதாகக் கதைக்க

**''நாலாயிரங்கோடி ஆண்டுகளுக்குமுன் இந்தப் பூவுலகம் உருவாயிற்று. 4 கோடி ஆண்டுகளின்முன்னர் பூமியில் உயிர்கள் தோன்றலாயின. 40 லட்சம் ஆண்டுகளுக்குமுன்பு மனிதன் நடமாடத்தொடங்கினான். நூறு ஆண்டுகளின் முன்னர் தொழில் நுட்ப புரட்சி தோன்றலாயிற்று'' என்கிறார் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக்கழகத் தலைவர் டாக்டர் முல்லர்.**

**இந்தப் புரட்சியே இன்று மனிதன் சந்திரனில் இறங்கிவிட்டு பத்திரமாகப் பூமிக்குத்திரும்பவும் வழிவகுத்துள்ளது.**

**மனிதன் தோன்றிய காலம்தொட்டு அவனது கற்பனைகளுக்கெல்லாம் தோற்றுவாயாய் இருந்துவந்துள்ள அம்புலியைச் சென்றடைவதற்கும் திரும்புவதற்கும் இதுவரை அமெரிக்க விஞ்ஞானிகள் மேற்கொண்ட முயற்சிகளைப்பற்றி இக்கட்டுரைத் தொடரில் சுருக்கமாகவும் அம்புலியில் மனிதனை முதன்முதல் இறக்கிய அப்பலோ 11 யாத்திரைபற்றி விரிவாகவும் எழுதப்படும். கல்லூரி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இக்கட்டுரைத்தொடர் பயன்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

செயல் என்பதால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மாத்திரம்தான் இப்படியானவர்கள் இருக்கிறார்கள் என்பதில்லை. விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளில் உன்னத நிலையை அடைந்திருக்கும் அமெரிக்காவில் - சந்திரனில் மனிதனை இறக்கிய அந்த நாட்டிலேயே இதனை ஏற்க மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள் என்றால் வியப்பாகவிருக்காதா என்ன?

அமெரிக்காவில் மெக்கீஹீ என்ற ஊரில்வாழும்திருமதி பார்பரா மரியன் ஹொப்கின்ஸ்டே என்ற 81 வயது பெண்மணிக்கு இந்த முயற்சியே அடியோடு பிடிக்கவில்லை. இது வெறும் பிரசார ஏமாற்று வித்தையென்று அவர் கருதுகிறார். அப்பலோ-11 வீரர்கள் சந்திரனில் இறங்கிய சமயம் இந்த அம்மையார் தமது டெலிவிஷன் கருவிகளை நிறுத்திவிட்டு படுத்துறங்கினாராம். ''இதை நான் நம்பவே மாட்டேன்'' என்று கூறும்அவர் சந்திரனுக்கு மனிதன் செல்ல முயற்சி செய்வது நெறிமுறைகளுக்கு முரண்பட்டசெயல் என்று கருதுகிறார்.

''மனிதன் சந்திரனுக்கு போகலாம் என்று கடவுள் விரும்பியிருந்தால் அங்கு [illegible] மாட்டாரா'' என்று கேட்கிறார் அவர்.

ஹட்டனில் வாழும் பாட் ஜோன்சன் என்பவர் கூறினார்.

அமெரிக்காவைக் கண்டு பிடிக்க கொலம்பஸ் எடுத்த முயற்சிகளுக்கு இப்படித்தான் பலர் 'வீண் முயற்சி' என்று எதிர்ப்புத் தொரிவித்தார்கள். அந்த கொலம்பஸினால் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்கா தான் உலகின் பொன் கொழிக்கும் பூமியாகவும் உலக வல்லரசுகளில் ஒன்றாகவும் இன்று திகழ்கின்றது.

முடிகின்றது. சயரோகம் போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கானபுதிய மருந்துவகை விண்வெளிப் பயணத்துக்குப்பயன்படும் எரிபொருள் மூலத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. செயற்கைக் கிரகங்களுக்கென உருவாக்கப்பட்ட எடைகுறைந்த கம்பியூட்டர் யந்திரங்கள் இப்பொழுது பலதொழில்துறைகளில் பயன்பட்டு வருகின்றன. விண்வெளியந்திரங்களுக்கான புது தீந்தைகள்

# விஞ்ஞானிகள் தரும் விளக்கம்

**விண்வெளி ஆராய்ச்சியின் பயன்கள்**

சந்திரனில்மனிதனைமுதன் முதலாக இறக்குவதின் மூலம் சோவியத்யூனியனை முந்திவிடவேண்டும் என்பதில் அமெரிக்கஅரசாங்கம் காட்டியஅக்கறைக்கும்அந்த முயற்சிக்கு அமெரிக்கசட்டமன்றங்கள் நிதி வசதிகள் அளிக்க சம்மதித்ததற்கும் அரசியல், மற்றும் ராஜதந்திரநோக்கங்கள் இருக்கலாம். ஆனால் இந்தமுயற்சிகள் மனித சமுதாயத்தின் மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்

இப்பொழுதுவீடுகளின்சுவர்களுக்கு சிறப்பான பூச்சுக்களாகப் பயன்படுகின்றன. எனவே, விண்வெளி ஆராய்ச்சிகள்மூலம் இன்னும் ஏராளமான பயன்கள்மனித சமுதாயத்துக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதுபோன்றே, சந்திரனுக்குமனிதர்களை அனுப்புவதின்மூலம் பூமியைப்பற்றிய மேலும் பல தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என்றும் சந்திரனில் ஈர்ப்புச் சக்தி பூமியைவிட மிகக்குறைவாக இருப்பதினால் மற்றக் கிரகங்களுக்கு மனிதர்களை இல

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரூற்று ..

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தெய்வா: சாமி... ''கும்பி கூழுக்கு அழுதுதாம், கொண்டை பூவுக்கு அழுதுதாம்'' எனக்கு திங்கச் சோத்துக்கு வழி இல்லே, சத்தியமும், நீதியும், நேர்மையும், ஏதுக்கு சாமி? ஏதுக்கு? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் வழியில் எடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்து, அவங்க குடும்பத்தின் பழியைத் துடைக்கணுமென்றுதான் நான் ஆசைப்பட்டேன். ஆனு என்ர மனசு இருக்கிற சுத்தம்மாதிரித்தான் அவங்க மனசும் இருக்குமென்று நினேச்சு அவங்களோடு போனேன். ஆனல்- (குரல் கம்ம அவங்கள் என்னே அடிச்சாங்க, உதைச்சாங்க சாமி அதுமட்டுமா? யாருமேயில்லாத அந்த இடத்திலே அந்தப் பெரிய மதவுக்கை என்னே குப்புறத் தள்ளி-சாமி-.

கிருஷ்: தெய்வானே- மகளே!,

ராமு: அம்மாச்சி-,

தெய்வா: கணபதி - கணபதி என்று கத்தினேன். கதறினேன் கண்டது என்ன-? காசைமாத்திரமா கொண்டு போனுங்க, சாமி... சாமி...

[நிலேதவறி தொபீரென கீழே விழுகிருள். இருவரும் திடுக்குற்றுவிடுகின்றனர்]

கிருஷ்: விக்னேஸ்வரா- ,

ராமு: அம்மா!

கிருஷ்: தெய்வானே- என்னம்மா இது? தீராத வறுமையிலும், உண்மைக்கு மாருக நடக்காத இந்த உத்தமிக்கு இவ்வளவு சோதனே ஏனப்பா?

[கைப்பையில் இருக்கும் திருநீற்றை எடுத்து அவளது நெற்றியில் தடவிக் கொள்கிருர்]

தெய்வானே எழும்பு- கணபதி காப்பான். ஓராயிரம் ஆண்டுகள் போலியாக வாழ்வதிலும் பார்க்க, ஒரு நாள்- ஒரேயொரு நாள் உண்மையாக வாழ்ந்தால் அதுவே போதும். எழும்பு-

[அவள் உணர்வற்றுக் கிடக்கிருள். அவர் அவளது கரங்களேப் பிடித்து பரீட்சிக்கிருர் மெதுவாக கைகளே விட்டுவிட்டு எழுந்து, பிள்ளேயார் கோவில் முன்போய் அமைதியாக நின்றுகொண்டு கண்களே மூடிக்கொள்கிருர்]

''என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லே; எல்லாம் உன் செயலே.'' இவளின் கதை ''முடிந்து விட்டது.''

ராமு: (கலவரத்தோடு) சாமியாரே என்ர அம்மா-?

கிருஷ்:(அவனருகில்வந்து நினேத்த உன்ஞல் அவளே விட்டுப் பிரிய முடியவில்லே. நினேக்காத அவளால் உன்னே விட்டுப் பிரிய முடிந்து விட்டதடா ராமு.

ராமு: (பயத்தோடு) நீங்க என்ன சொல்லுகிறீர்கள்-?

கிருஷ்: இதுவரை வற்ருது குறையாது. முறையாது. அன்பை, பண்பை, பாசத்தை எந்தக் கிணறு உனக்கு அள்ளியள்ளித் தந்து கொண்டு இருந்ததோ அந்தத் தாயென்ற பெருங்கிணற்றின் ஊற்றுக்கண் சத்தியமென்றே உண்மைக்காக, இன்று அடைத்துக் கொண்டுவிட்டது.

ராமு: அம்மா-!

கிருஷ்: பொய்யான வாழ்க்கையின் பிரதிநிதிகள் புனிதமான ''நீரூற்று'' கண்ணே அடைத்துவிட்டார்கள். நீரூற்று வற்றிவிட்டது. ராமு; உனது அம்மா, செத்துப்போய்விட்டாள்.

ராமு: (நிலேகுலேந்து) ஐயோ என்ர தெய்வமே அம்மா-

(பிள்ளேயார்கோவில் மணி பெரிதாக முழங்குகிறது. அவளுக்கு மேல் அவன் விழுந்து குமுறிக்கொண்டு இருக்கிருன். கிருஷ்ணஜீ அமைதியாக நின்றுகொண்டிருக்கிருர்.

மாலே நேரம்.

பகல் மடிந்து, இருள் கவிந்து கொண்டிருக்கிறது.

[முற்றும்]

## போலிக்கலேஞர்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும். தமிழ் நாடகக் கலே தமிழருடைய பண்பாட்டை அடிப்படையாக கொண்டிருக்கவேண்டும்.

தமிழ் நாடகத்தில்புதுமை என்ற பெயரில், கொச்சைத் தமிழ், நாட்டுத்தமிழ் பேசி, பேயாட்டம்போன்ற ஆபாச நடனத்தைப் புகுத்தி, மேலேத் தேசத்தவர்கள் கையாளும் நாடகபாணியை சில உத்திகளே நமது தமிழ் நாடகத்தில் புகுத்திக்காட்டுவதுதான் தமிழ் நாடகக் கலேயின் புதுமையா? இவை எல்லாம் எமதுதமிழ்நாடகக் கலேக்கு அவசியதேவையா? மேலேத் தேசத்தவர்களுடைய நாடகங்களில் உள்ள திறமையைஅவர்கள் கையாளும் உத்திகளே எமது தமிழ் நாடகத்தில் புகுத்துவதென்ருல் எமது நாடகக்கலே அவ்வளவு என்ன இழிவானதா? எமது நாடகக்கலே வளர வேண்டுமானுல் நன்ருக கர்நாடக சங்கீதமும்தமிழ்ப் புலமையும் உள்ள வாலிபர்கள் அண்ணுவி மரபினரிடம் இருந்து முறைப்படி குருகுலவாசமாக நாடகக் கலேயைக் கற்கவேண்டும்.

உண்மையான நாடகக் கலே வளர, போலிக் கலேஞர்களே விரட்ட சங்கீத ஞானமுள்ள வாலிபர்கள். யுவதிகள்முன்வரவேண்டும்.

(முற்றும்

## விஜியின் கவலே

விஜயகுமாரி தனது கணவனுல் விரட்டியடிக்கப்பட்டு தாய்வீடு வந்து தனியாக வாழ்வது குறித்து வேதனேப்பட்டாள். என்ன இருந்தாலும் கணவனுடன் சேர்ந்து வாழ்வதுதான் ஒரு பெண்ணுக்கு இன்பம். தவிர கணவனே வெறுத்தொதுக்கிஞல் அவள் காலம் முழுவதும் கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறு வழியில்லே என்பதை உணர்ந்தார். இதைத்தன் அண்ணியிடம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் அவருடைய நிஜ வாழ்க்கையில் நடைபெற்றதல்ல. மல்லியம் புரொடக்சன்ஸாரின் 'சவாலே சமாளி' என்ற படத்திலேயே இடம் பெற்றது.

## தங்கைக்காக......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கோபுவாக நடித்த சிவபாலனும் போட்டி போட்டுக் கொண்டு நடித்திருக்கிருர்கள்.

தணிகாசலமாக நடித்த வில்வராஜா, வேலேக்காரனுக நடித்தஜெயபாலகிருஷ்ணன் கந்தனுக நடித்த சிவப்பிரகாசம், ஒப்பனேயாளர் சிறீதரன் ஆகியோர்பாராட்டப்படவேண்டியவர்கள்.

கடைசி நீதிமன்றக் காட்சியை தவிர்த்திருக்கலாம். இரட்டை மேடை அமைத்திருந்ததால் காட்சிகள் இடைவெளியின்றி நடந்து கொண்டிருந்தது. ஈரச்சையும் பொருட்படுத்தாது இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இரண்டரை மணிநேரம் இருந்து பார்த்தார்கள் என்ருல் நாடகத்தின் தரத்தை ஊகித்துக் கொள்ளலாம்

சங்கானே கலேயகத்தின் ஆருவது வெளியீடான இந் நாடகம் நாடகத் துறையில் ஒரு புதிய, புதுமையான பாராட்டப்படக்கூடிய முயற்சி. -எம்

## கவிதைக் கன்னி

தனிமைத்தணல் எனேத் தகித்தபோது - எங்கோ
தளிர்க் கரத்தின் வளேயலொலி கேட்டே

இனிமைதரும் எழிலுருவம் நாடி - மனம்
ஏங்கித்தவித் தங்குமிங்கும் பார்க்க

நனியழகு நங்கை நல்லாள் வந்தே - என்றன்
நாடியை உயர்த்தி மிகநகைத்தாள்.

மேனியது புல்லரிக்க நானும் - அவள்
மேன்மையுறு எழிலுருவைத் தொட்டே

ஊனுயிர்க்(கு) உவகைதர எண்ணி-மங்கை
உடலுயிரை அணேத்திடவே சென்றேன்.

அருகில் நின்ற அணங்கவளோ ஓடி - வான
அரங்கினிலே ஆடிக்கொண்டே சிரித்தாள்.

உருகிநின்ற என்நிலேயை உணரா - அந்த
ஒண்டொடியின் குறும்பையென்ன சொல்வேன்.

முத்துநகை இடையிடையே உதிர்த்து - முகில்
மொட்டாக்கை இடையிடையே உயர்த்தி

நட்சத்திர மூக்குத்தியைக் காட்டி - கண்ணுல்
நல்வரவுகூறி எனே அழைத்தாள்.

அவளருகில் சென்றிடவே எழுந்தேன் - என்றன்
அடுந்துணே வி வழிமறித்து நின்று.

எங்குசெல்ல எழுந்தீர்கள் என்ருள் - நான்
ஏதும் சொல்ல முடியாது விழித்தேன்.


கற்பனேத்தேர் ஏறிச்சென்ற கன்னி - உள்ளக்
கவிதையாய் என்னகத்தே ஒளிர்ந்தாள்.

— கரவை கிழார்.



வழுவூர் ராமையாபிள்ளேயின் மாணவிகளான கொழும்பு ஸ்ரீகாந்தம் சகோதரிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி விரைவில் கோப்பாயில் நடைபெறவிருக்கிறது. கொழும்பில் இவர்கள் இப்போது வழுவூர் கலாலயம் நிறுவி, நடனம் சொல்லிக் கொடுத்து வருகிருர்கள்.

## ரொபர்ட் லூயி ஸ்டீவன்சன் [2]



எதிர்கால மனேவியாகப் போகிறவர் ஏற்கெனவே திருமணமானவர் எனத் தெரிந்துகொண்டார். அவர் பெயர் திருமதி ஃபேனி ஒஸ்பேர்ன். கலிபோனியாவுக்குத் திரும்பிச் சென்ற திருமதி ஒஸ்பேர்னேத் தொடர்ந்தார் ஸ்டீவன்சன். மிகவும் காய்ச்சலாகப் படுத்திருந்தபோதும், ஒவ்வொரு இரவும் நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளத்தவறவில்லேஸ்டீவன்சன்

நியூயார்க்கிலிருந்து, சான் பிரான்சிஸ்கோவுக்கு மலேத் தொடர்களினூக்கூடாக, ரயில் மூலமாக ஸ்டீவன்சன் பிரயாணம் செய்த போதும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கத் தவறவில்லே. மிக அபாயகரமான நிலேயில், ரயிலின் மேலே ஏறிக்கொண்டும், எழுதித் தள்ளத் தவறவில்லே ஸ்டீவன்சன்.

திருமதி ஒஸ்பேர்னுடன் சேர்ந்தபின்னர், மலேயேறும் முயற்சியொன்றை மேற்கொண்ட ஸ்டீவன்சன்வெகுவாக நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாஞர். இரண்டு நாட்களாக, பனிப்பிரதேசத்தில் தன்னந்தனியனுகப் படுத்திருந்த ஸ்டீவன்சனே வயது முதிர்ந்த கரடி வேட்டைக்காரன், ஒருவன் கண்டு, திருப்பியழைத்துச் சென்ருன்.

1880-ம் ஆண்டு, திருமதி ஒஸ்பேர்னே மணமுடித்த ஸ்டீவன்சன், விசித்திரமான முறையில் தனது தேனிலவைக் கழித்தார. திருமதி ஒஸ்பேர்னின் மகனுடன், சான்பிரான்சிஸ்கோவுக்கருகிலிருந்த ஒரு பழைய குடிசையில் தங்கிஞர்கள். ஒவ்வொருநாட் காலேயிலும் உடற்பயிற்சிசெய்யத் தவறவில்லே ஸ்டீவன்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவருக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மாணவமாணவிகளுக்கு 'மாணவர்மலரின்' புத்தாண்டு வாழ்த்துக்கள்! மனித குல வரலாற்றில் பல அற்புத சாதனைகளை நிலைநாட்டி அம்புலியில் மனிதன் சஞ்சரித்த இவ்வருடம் நாளையுடன் முடிவடைகிறது. நாளை மறுதினம் பிறக்கும் புதுவருடமும் பலப்பல புதிய அத்தியாயங்களை சரித்திரத்தில் இடம்பெறவைக்குமென எதிர்பார்ப்போம்.

இவ்வருடம் மாணவர் மலரில் நீங்கள் காட்டிய அக்கறைக்கு எமது பாராட்டு! புதிய புதிய அம்சங்களுடன் தொடர்ந்து 'மாணவர் மலர்' வெளிவர விஷயதானங்களை அனுப்பிவைக்கத் தவறிவிடாதீர்கள்.

—காசி—

# கானகத் தேவதை [2]

தன் அருமை மகன் கண்ணனின் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்த செல்லத்திற்கு மகன் ஓட்டமும் நடையுமாக வருவது கண்டு பதைபதைத்துப் போனாள். ஏதோ அவனுக்கு நடந்து விட்டதாகவே கருதினாள். ஓடிவந்த கண்ணனை மார் போடணைத்து 'ஏன்மகனே ஓடிவந்தாய் என்ன நடந்து விட்டது' என்று செல்லமாக உலுப்பினாள். கண்ணனின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தது. கண்ணீரின் நடுவே தழுதழுத்த குரலில் 'அம்மா அப்பா எங்கே' என்று கேட்டான். இதுவரையிலும் கண்ணனின் வாயிலிருந்து வெளிவராத சொற்கள் வெளி வந்ததைக்கண்டு செல்லம் திடுக்குற்றாள். எதை கண்ணன் அறியக்கூடாதென்று வர்கள் இல்லையெனு மளவிற்கு உன்னைக் கொண்டு சென்று காட்டினோம். சிலர் தேவதையின் கோளாறென்றனர். சிலர் நோயின் கோளாறென்றனர். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகக்கூறி வைத்தியம் புரிந்தனர். பயனில்லை. முடிவில் இவ்வூருக்குப் பலமைல் தூரத்திலிருக்கும் மாந்திரீகரிடம் சென்றோம். அவர் நீ கர்ப்பமாகப் பிறக்கும்பொழுது என்னில் தேவதையொன்று தொற்றிக்கொண்டதாகவும் அத்தேவதையின்கோளாறே நோயின் காரணமென்றும் பூச்சாண்டி காட்டினார். நாங்கள் நம்பினோம். உன் நோயை மாற்றுவதானால் பலமைல் தூரத்திற்கப்பாலுள்ள கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காட்டில் மாத்திரம் ஒரு

— க. கனகலிங்கம் —

கருதினாளோ அதே சொற்களையல்லவா கண்ணன் கேட்டுவிட்டான். செல்லம் செய்வதறியாது திகைத்தாள். கண்ணனின் நோக்கை மாற்றுவதற்கு பற்பல கதைகள் கூறினாள். ஆனால் கண்ணன் விட்டபாடில்லை. 'அம்மா அப்பா எங்கே? அப்பா எங்கே? என்று கேட்டவண்ணமேயிருந்தான். இனிமேலும் ஒழித்துப் பயனில்லையென எண்ணிய செல்லம், 'மகனே நீ அப்பாவைக் காணவே முடியாது. அவர்...'

......என்னம்மா அவர் இறந்துவிட்டாரா?

'இல்லையடா கண்ணு, அவர் இறந்து விட்டாரா அல்லது உயிருடன் தான் வாழுகின்றாரா என்பது எனக்கு இன்றுவரையும் புரியாத புதிராகவிருக்கின்றது மகனே.' செல்லம் தொடர்ந்தாள்

'அப்பொழுதுஉனக்கு ஒரு வயதுதானிருக்கும். ஒரு நாள் உனக்குக் கடும்சுரம் கண்டது. போகாத மருந்து மருந்துச்செடி இருப்பதாகவும் அச்செடியின் வேரைக் கொண்டே உன் நோயை மாற்றமுடியுமென்றும் கூறினார்.

புத்திரபாசத்தால் கட்டுண்ட உன் தந்தை அம்மாந்திரீகனின் சொற்கேட்டு பலரின் புத்திமதிகளைப் புறக்கணித்து கொடிய விலங்குகள்வாழும் காட்டை நோக்கிச் சென்றவர் சென்றவர்தான். இன்றுவரையிலும் அவரைப்பற்றிய செய்தியொன்றும் அறிந்திலேன். செல்லத்தின் கதையை ஆவல் ததும்ப உணர்ச்சியோடு கேட்டுக் கொண்டிருந்த கண்ணன் ''அம்மா அப்பாவைத்தேடி யாராவது போகவில்லையா?' என்றான். 'இல்லையடா கண்ணு. யார்தான் உன் அப்பாவைப்போல் அக்கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காட்டிற்குப் போவார்கள்.' 'ஏன்அம்மா நான் அப்பாவைத் தேடிப் போகட்டா'வென்று 'படாரென்று'' கேட்டான் தாயிடம், செல்லம் திடுக்குற்றவள் மறுகணம் வரண்ட சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு மௌனியானாள். அன்றிலிருந்தே கண்ணனின் உள்ளத்திலிருந்து உருவெடுத்த நோக்கம் அவனுக்குப் பன்னிரண்டு வயதாயிருக்கும்பொழுது விசுவரூபமெடுத்தது. அதன் பிரதிபலிப்பே அதோ கண்ணன் வருவது.

(தொடரும்)

## சென்று வருக

சாதனைகள் பல புரிந்து
சரித்திரத்தே பெயர் நாட்டி
வேதனைகள் தனை நீக்கி
வெற்றியுடன் செல்லு கின்ற
ஆயிரத்துத் தொளா யிரத்து
அறுபத் தொன் பதாமாண்டே
பாயிரத்தில் பாடி உன்னை
பாங்குடனே விடை தந்தேன்!

—வி. இன்னாசிமுத்து

## காந்தி நட்சத்திரம்

'பத்தாயிரம் ஆண்டுகளுக்குப்பின்னர் வானத்திலுள்ள பிரகாசமான நட்சத்திரமான 'டேனேப்' துருவ நட்சத்திரத்தின்இடத்தைப் பெறப்போகிறது. எனவே, இன்று முதலே அதற்குநாம் மகாத்மா காந்தியின் பெயரை ஏன் சூட்டக் கூடாது?'

எனவே, இப் பொழுது நாட்டிலுள்ள சோதிடர்கள் பஞ்சாங்கம் தயாரிப்போர் மற்றும் வெளியிடுவோரை நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால், வானத்தில் சப்த ரிஷிகள் இருப்பது போல அந்த நட்சத்திரங்களுக்கு ரிஷிகளின் பெயர்களைச்சூட்டி இருப்பதுபோல 'டேனேப்' என்று அழைக்கப்படும் தாரகையை நாம் 'காந்தி நட்சத்திரம்' என்று அழைப்போம். அதையே நாம் நமது யுகபுருஷரின் நினைவுச் சின்னமாக மதிப்போம். மகாத்மாகாந்தியின் சின்னத்தை நாம் பூமியின் மீது எழுப்பித்தான் இருக்கிறோம். ஆனால், லட்சிய புருஷர், ஆஸ்திக சிரோன்மணி, யுகபுருஷர் மகாத்மா காந்திக்கு வானச்சின்னம் ஒன்றையும் நாம் ஏன் நிர்மாணிக்கக்கூடாது? வருங்காலத்தில் துருவநட்சத்திரமாகப்போ நம் தாரகைக்கே நாம் காந்திஜியின் பெயரைச் சூட்டுவது சாலப் பொருத்தமும் ஆகும்.

சப்தரிஷிக் கூட்டத்துக்கு நாம் ரிஷிகளின்பெயர்களைக் கொடுத்திருக்கிறோமே, இந்த யுகத்தின் மகத்தான ஒரு ரிஷியின்பெயரை துருவ மண்டலத்தின் ஒரு தாரகைக்கு ஏன் வழங்கக் கூடாது.'

இவ்வாறு மலேஷிய எழுத்தாளர் ஒருவர் பஞ்சாங்கம் தயாரிப்பாளர்களை மலேஷியாவில் கேட்டுள்ளார்.

## தெரிந்து கொள்ளுங்கள்!

ஷட்-பிஷ்-என்ற ஒருவகை மீனின் தோலை காயவைத்து பக்குவப் படுத்தி கீழைத்தேச சங்கீத கருவிகள் செய்யஉபயோகிக்கின்றனர்

0 0 0

### டெலிபோனில் இருதயத்துடிப்பு

சோவியத்ஆர்மீனியாவின் தூரப் பகுதிகளிலுள்ள நோயாளிகள் அனுபவம் வாய்ந்த இருதய வைத்திய நிபுணர்களைத் தேடி நகரங்களுக்கு செல்லத் தேவையில்லை. இருதயத் துடிப்பு விபரத்தை டெலிபோன் மூலம் அனுப்பக்கூடிய கருவி ஒன்றை ஆர்மீனியன் விஞ்ஞானப் பேரவையின் கம்பியூட்டர் நிலையத்தின் வைத்தய ஆய்வு கூடம் தயாரித்துள்ளது. அக்கருவியை டெலிபோனுடன் இணைத்து விட்டதும் இருதய துடிப்பு விபரம் நேரடியாக டெலிபோன் மூலம் எர்தான் ஹிருதிய இயல் இருதய அறுவை சிகிச்சை நிறுவனத்துக்குச் செல்கிறது. வைத்திய நிபுணர் விபரத்தை ஆராய்ந்து அவசியமான கட்டளையை பிறப்பிக்கிறார்.




# மீண்டும் நினைப்போம்!

மனித வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட அம்புலி யாத்திரை எமக்குப் பழையனவாகப் போய்க்கொண்டிருக்கும் வேளையில் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவியான செல்வி புகனேகபாகு ரஞ்சிதமலர் விண்வெளிப் பயணம் பற்றி பயனுள்ள பல தகவல்களை கேள்வி—பதில் ரூபத்தில் எமக்கு இப்போது நினைவூட்டுகிறார்.

வினா: - ஜெமினி11 விண்வெளிக்கு எப்போது அனுப்பப்பட்டது?

பதில்:- 1966 செப்டம்பர் 12 ம் திகதி,

வி: ஜெமினி 11ல் பிரயாணம் செய்தவர்கள் யார்?

ப: சார்ள்ஸ் கொன்ராட், ரிச்சார்ட் கோர்டன்,

வி: விண்வெளியில் இரு கலங்கள் இணைந்து கொள்ளும் திட்டத்தை முதன் முதலில் நிறைவேற்றிய கலம் எது?

ப: ஜெமினி 11. இது 'அஜினு' என்ற துணைக் கலத்துடன் விண்வெளியில் இணைந்தது.

வி: இரு கலங்கள் இணைவதற்கான பயிற்சி இரண்டாம் தடவை எப்போது மேற்கொள்ளப்பட்டது?

ப: ஜெமினி 12 பிரயாணத்தின்போது,

வி: ஜெமினி 12 பிரயாணிகள் யார்?

ப: ஜேம்ஸ் லோவல், எட்வின் ஆல்ட்ரின்.

வி: அப்பல்லோ திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

ப: 1967ம் ஆண்டில்

வி: முதலாவது அப்பல்லோ கப்பலுக்கு என்ன நடந்தது?

ப: 1967 ஜனவரி மாதம் ஒருநாள் அப்பல்லோ முதலாவது கப்பலை 1967 பெப்ரவரி 27ந்திகதி விண்வெளிக்கு அனுப்புவதற்கான பயிற்சி தீவிரமாக நடந்து கொண்டிருந்தபோது, அப்பல்லோ கலத்தில் மின்சுற்றினுள் ஏற்பட்ட ஒருதவறு அதனுள்ளேயிருந்த தூய ஒட்சிசனைப் பற்றி எரியச் செய்து விட்டது. இதனால் அதனுள் இருந்த விண்வெளி வீரர்களான கஸ் இரிசொம், ரோஜர் சாபே, எட்வார்ட் வைட் ஆகிய மூவரும் எரிந்து சாம்பலாயினர்.

வி- மீண்டும் அப்பல்லோ பயணம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?

ப: 1968 அக்டோபர் 11-ந்திகதி.

வி: அந்தக் கப்பலுக்குப் பெயர் என்ன? அதில் பிரயாணஞ் செய்தவர்கள் யார்?

ப: 'அப்பல்லோ -7' வால்டர் ஷிரா, டொன் ஈ. கேவ், வால்டர் களிங்கம் ஆகிய மூவரும் பிரயாணம் செய்தனர்.

வி: இவர்கள் எத்தனை நாட்கள் விண்வெளியில் தங்கினர்? விண்வெளியில் செய்து முடித்த ஆராய்ச்சி என்ன?

ப: 11 நாட்கள் பிரயாணம் செய்து, சட்டர்ன் ரொக்கட்டின் இறுதிக் கட்டத்திலிருந்து கட்டளை சேவைப்பகுதியைப் பிரித்து அந்தரத்தில் மறுபக்கமாகத் திரும்பி மறுபடியும் இறுதிக் கட்டத்துடன் சேரும் பயிற்சியை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர். இப் பிரயாணத்தின் போதுதான் முதன் முதலாக விண்வெளி வீரர்கள் டெலிவிஷன் படங்களைப் பூமிக்கு அனுப்பினர்,

### டெலிவிஷனும் எலிகளும்

ரொல்- டோவ்- ஒன்- டொன்னில் உள்ள பழைய வீடொன்றில் குடியிருந்த எலிகள் டெலிவிஷன்பெட்டியொன்றைக் கண்டதும் மாயமாய் மறைந்தன.

டெலிவிஷன்பெட்டியிலுள்ள இலக்ட்ரோன் குழாயிலிருந்து பிறக்கும் எக்ஸ்ரே கதிர்கள் எலிகளை பாதிப்பதால் அவை ஓடி விடுகின்றன.

0 0 0

வொல்கா நதிக்கரையிலுள்ள குய்பிஷேவில் ஐந்தடுக்குமாடிக்கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது இது 650 கார்களை நிறுத்தக்கூடிய மோட்டார் கராஜாக உபயோகிக்கப்படும்.

மேல் அடுக்குகளை அடைய வளைந்து செல்லும் பாதை உபயோகிக்கப்படும். இது 12 டிகிரி சரிவை கொண்டதாய் இருக்கும். கீழே இறங்குவதற்கும் இதே பாதை உபயோகிக்கப்படும்.

தொகுத்தவர் 'விமலி.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ஐந்து வருடம் என்ற எல்லை வகுத்துக்கொண்ட காலம் அவற்றையெல்லாம் வழித்துத் துடைத்து விட்டதா?

நெற்றியில் குங்குமம் இல்லை. அரையிலே வெள்ளைப்புடைவை.... இவற்றிற்கான காரணங்கள் எவை?

அவள் ஒரு அமங்கலி என்பதுதானே.

என்னுடைய வாழ்வுக்குச் சாந்திதர இருந்தவள் தன்னுடைய மனச்சாந்தியையும் இழந்துவிட்டாளா? இப்படியொரு கேள்வி நெஞ்சமரத்தை உளியாக்கிக் குடையத் தொடங்கியது. மனித சமுதாயத்தில் இன்று ஆசார அனுஷ்டானங்களை விலக்குவதற்கு வாழ்வில் ஏற்படும் வறுமையும் காரணமாக இருக்குமென்பதில் காந்தி ஒரு மணமிழந்த மலர் என்பதை நிர்ணயிக்க எனது மனம் கூசிற்று...

வீட்டுக்குச் சென்றேன். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் ஊருக்கு வந்த என்னைக் கண்டதும் அம்மாவும், அப்பாவும், சகோதரர்களும் மட்டற்ற வரவேற்புத்தந்து ஏற்றனர்.

அவர்களது மகிழ்ச்சியுடன் ஒன்றுபட என்னால் முடியவில்லை. ஆனால் சம்பிரதாயபூர்வமாக அவர்களது உபசாரத்தை ஏற்றவனாக நடித்துக்கொண்டேன். ஆனால் வழியில் கண்ட சீதாவைப்பற்றிய வரலாற்றை அறியவேண்டுமென்ற ஆவல் மலை நாட்டு அட்டைபோல் உள்ளத்தை அப்படியே கவ்விப் பிடித்துக் கொண்டது.

நேரம் என்ற சேவகன் மணிக்கூண்டில் பதினொன்று என்ற எல்லையைக் காட்டினான். வீட்டிலிருந்து வெளியே வந்து எங்கள் வீட்டுக்கு அண்மையிலுள்ள பிள்ளையார்கோவில் தேர் முட்டிக்குச் சென்றேன்.

அங்கே தோரணங்கள் போன்ற கருங்காய்களுடனும் மஞ்சள் பூக்களுடனும் நின்ற அசோக மரத்துக்குக் கீழே என்னுடைய பால்ய நண்பன் விஸ்வநாதன் நின்றான். அவன் ஒருவன்மட்டுந்தான் என்னுடைய வாழ்க்கையில் ஊடுருவிப் போன அந்தரங்கத்தை ஓரளவுக்கு அறிந்தவன். அவன் சிரித்து வரவேற்றதும் வாடா என்று கூட்டிக்கொண்டு கோவிற் கேணியடியிலுள்ள அரசடிக்குச் சென்றேன்...இருவரும் மனம் விட்டுப் பேசும்போது சீதாவைப்பற்றி அவன்கூறியவை என்னுடைய ஊகத்துக்குச் சற்றும் முரணாகவில்லை. சீதாவின் கணவன் ஒரு நோயாளி. அந்த நோயாளியினால் அவளது வாழ்க்கையில் இணைந்திருக்க முடியவில்லை. கடந்தஆண்டு அவன் காலன்கைப்பட்டு விட்டான்,

எந்தக் குழந்தையைச்காப்பாற்ற தனக்கு ஒரு பெண்ணைத் தேடினானோ, அந்தப் பெண்ணும் ஒரு குழந்தைக்குதாயாவதைக் கண்டான், மூன்று ஜீவன்களுப் நிர்க்கதியாக அவன் உலகத்தில் இல்லாதவனானான்

மதிய வேளையின் காரணமாக தோட்டங்களுக்குச் சென்றவர்கள் பலர் திரும்பி வந்துகொண்டிருந்தனர். இரண்டொரு ஆட்டுக்குட்டிகள் முன்னேவர, அவற்றின் பின்னே ஒக்கலையில் ஒரு குழந்தையும் கையிலே இன்னொரு குழந்தையுமாக வருகின்றவள் சீதாவே. முகத்தில் குங்குமம் இல்லை. அரையில் வெள்ளைப்புடைவை. வறுமையும் சோகமும் கவிந்த முகம். நிமிர்ந்து பார்க்க என்னுடைய மனம் கூசியது.

நானும் விஸ்வநாதனும் வீதியின்எதிரே வருவதைக் கண்டுவிட்டாள். அவளது நெஞ்சில்ஊறிய சோகச் சுனை கண்கள் என்ற வாய்க்காலில் வடிந்துகொண்டிருந்தது.

வற்றி வரண்ட கரங்களைத் துணையாகக் கொண்டு முந்தானையைப் பிடித்து கண்ணீரை அணைகட்ட முயன்றாள்.

நான் அந்த முகத்தின் சோகநதியைக் கட்டுப்படுத்த லாயக்கற்றவன். இந்த உலகில் உண்மையும், தர்மமும் எப்போதும் நிலைபெறவேண்டுமானால், நமது விதிகளும் உரம்பெறவேண்டும் என்பது என்நம்பிக்கை.

அந்த விதியின் கைப்பாவை அவள் என்றால், விதியே அவளுக்குத் துணையாகும், நண்பனும் நானும் நடந்துஅப்பாற் சென்றோம். எங்கள் ஊர்க்கோவிற் கோபுரம் உயர்ந்துநின்று உண்மையை உபதேசித்தது.

(யாவும் கற்பனை)

## குட்டிக்கதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கென்ன தெரியும் நீயுமொரு மனுஷியா? உனக்குக் கஷ்டங்களிருந்தால் ஒன்றுமறியாத குழந்தை என்ன செய்யும். குழந்தை என்றால் கடவுளுக்குச் சமானம்' என வைதவாறே குழந்தையைத் தூக்கித் தேற்றினாள் அந்தப்பெண்

குழந்தை சிரித்தது.

.பாரனடீ அது சிரிக்கிறதை! குழந்தைகளுக்கு என்ன தெரியும்? நீ பசியிருந்தால் அதற்கென்ன? ஒன்றுமறியாத குழந்தைகள் கடவுளுக்குச் சமானமல்லவா? எனக் கூறியவாறே மீண்டும் மீண்டும் குழந்தையைக் கொஞ்சினாள் அந்த அயல்வீட்டுபபெண்.

குழந்தை மீண்டும் சிரித்தது.

# அம்புலி ஆராய்ச்சியில்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

குவாக அனுப்புவதற்கு அதனைச் சிறப்பான ஒருதளமாக உபயோகிக்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள கண்களுக்குப் புலனாகாத அணுப் பிரமாணப் பொருட்கள் முதல் விண்வெளியில் பலகோடி மைல் களுககப்பால் சுழன்று கொண்டிருக்கும் கிரகங்கள் வரை யாவற்றையும்பற்றி தெரிந்துகொள்வதின் மூலம் தன்அறிவைப் பெருக்கிக் கொள்ள முயற்சி எடுத்து வருகின்றான். அந்த முயற்சியில் இந்த சந்திர ஆராய்ச்சியும் ஒன்றாகும். இந்த ஆராய்ச்சியின்மூலம் மனித அறிவு மேலும் விசாலமடைய வழியேற்படும் என்பதில் ஐயமில்லை.

### வதனமே சந்திரபிம்பமோ

சந்திரன் என்றதும் நம்மவர்களுக்கு, அழகிய நங்கையரின் வதனங்கள்தான் நினைவுக்குவரும். நம் குழந்தைகள் 'அம்புலிமாமா' என்பார்கள். நிலவின் தண்ணொளியில் சுகம் காண்பதற்காக ஏங்கித் தவிக்கும் இளங்காதலர்களின் எண்ணிக்கை எத்தனையோ! காதலியைப் பார்த்து ''வதனமே சந்திரபிம்பமோ'' என்றுபாடிமகிழும் 'ஹரிதாஸ்'கள் தான் எத்தனை பேர்!

பூமியிலிருந்து பார்க்கும்போது இத்தனை அழகாகத் தோற்றமளிக்கும் இந்த நிலவினைத் தன்னருகில் அழைத்துக்கொள்ள முடியாதா என்று மனித மனம் யுகயுகாந்திரமாக ஏங்கித் தவித்துவந்தது. ''சந்திரனே இங்கு வருவாயே'' என்று கவிஞர்கள்கீதம் இசைத்தார்கள். ஆனால் அந்த அழகு நிலவு தன்னருகே வரமாட்டாது என்றுகண்டதும், தானே அதனருகே போவதற்கு மனிதன் முடிவு செய்தான். அதன் பயனே இன்றைய சந்திரப்பயணம்.

சந்திரன் நமது பூமியின் உபக்கிரகம். இருபத்தேழரை நாட்களுக்கொருதரம் அது பூமியை வலம் வருகின்றது. சந்திரன் எவ்வாறு தோன்றியது என்பது குறித்து விஞ்ஞானிகள் மூன்றுவிதமான கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

(1) பூமியின் ஒருபாகமாக ஒருகாலத்தில் விளங்கியசந்திரன் பின்னர் பிரிந்து தனியாக இயங்கத் தொடங்கிற்று.

(2) பூமிதோன்றிய அதே காலத்தில் சந்திரனும் தனிக் கிரகமாகத் தோன்றியது.

(3) விண்வெளியில் சந்திரன் எங்கோ ஓர் இடத்தில் தோன்றி தன்போக்கில் சுழன்றுகொண்டிருந்தபின் இறுதியில் பூமியின்ஈர்ப்புவிசைக்குள் சிக்கிக்கொண்டது.

இந்த மூன்று கருத்துக்களிலும் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பது மட்டுமின்றி நமதுபூமியின் பூர்வோத்திரம்பற்றியும் இப்போதைய ஆராய்ச்சிகளின் மூலம் தகவல்கள் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

பூமியைப்போலன்றி சந்திரனில் காற்றும், காலநிலையும்இல்லை. இதனால் ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன் அதன்தரை எப்படி இருந்ததோ அதேநிலையில் இன்னமும் மாறாமல் இருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது. (வளரும்

# கருணையங்கடலான ...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

கோயில்கொண்ட இடமாம். (8)

மேலோடி விசும்பணவி
வியன் நிலத்தை
மிக அகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனும்
அறியாத
வகை நின்றான்
மன்னுங் கோயில்
கோலோடக் கோல்வளையார்
கூத்தாடக்
குவிமுலையார்
முகத்தி னின்று
சேலோடச் சிலையாடச்
சேயிழையார்
நடமாடுந்
திருவை யாறே.

பிரமா,விஷ்ணு இருவரும் தாந்தாமே தனித்தனி பரப்பிரமம் என அகந்தை காரணமாக வாதிக்கத்தலைப் பட்டனர். வாதம் முடிவு பெறாமலே அவ்விருவரும் பல நெடுங்காலம் போரிட்டனர். அவர்களிடத்தேகருணை கொண்ட சிவபிரான் அவ்விருவர் மத்தியிலே அளப்பரிய சோதியாய்த்தோன்றினார். அச்சோதியின் முடியை காண்பேன் எனத்துணிந்த பிரமதேவன் அன்னவடிவு கொண்டு மேலே மேலே பறந்தும் சோதியின் முடியைக் காணவியலாது மீண்டான். திருமாலோ அச்சோதியின் அடியைக்காணத் துணிந்து வராகவடிவு கொண்டு பூமியை அகழ்ந்து சென்றும் காணவியலாது மீண்டார். அவ்வாறு அவ்விருவருக்கும் உண்மையை உணர்த்தி அருளிய சிவபிரான் கோவில்கொண்டு வீற்றிருக்குந்தலம் யாது? எனில்-

கோலிய வளையல்களை அணிந்த அழகிய மகளிர்கள் வீதியிலே சிலம்பவித்தை செய்வாராய், கயல்மற்றும் போன்ற விழிகள் புரளவும் வில் போன்ற புருவங்கள் வளையவும் நடனம்புரியும் திருத்தலம் திருவையாறு ஆகும். (9)

குண்டாடு குற்றுடுக்கைச்
சமணரொடு
சாக்கியருங் குணமொன்
றில்லா
மிண்டாடு மிண்டருரை
கேளாதே
யாளாமின்
மேவித் தொண்டர்
எண்டோளர் முக்கண்ணர்
எம் மீசர்
இறைவர்இனி
தமருங் கோயில்
செண்டாடு புனற்
பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந்
திருவை யாறே.

பொய்யை மெய்யென வாதிப்பவர்களும் பாயை இடுக்கியவர்களும் குணக்கேடருமாகிய சமணர், சாக்கியர் என்போர் கூறும் பொய்யுரைகளைக் கேளாமல் மெய்த்தொண்டர்களே! எட்டுப் புயங்களை யுடையவரும் சந்திரன், சூரியன், அக்கினி என்னும் மூன்று கண்களைக் கொண்டவரும் எமது இறைவருமாகிய சிவபிரானிடம் ஆட்படுவீராக. அப்பெருமான் இனிதாக எழுந்தருளியிருக்கும திருக்கோயில் யாது? எனில்-

பூங்கொத்துகளையெல்லாம் செண்டாக வாரிக் கொண்டுவரும் நீர்ப்பெருக்கோடு கூடிய காவிரியாறு செழுமை வாய்ந்த நவமணிகளைக் கொண்டுவந்து கரையிலே ஒதுக்கும் திவ்வியதலமாகிய திருவையாறுஆகும். (10)

அன்னம்மலி
பொழில்புடைசூழ்
ஐயாறெம்
பெருமானை அந்தண் காழி
மன்னியசீர் மறைநாவன்
வளர்ஞான
சம்பந்தன் மருவு பாடல்
இன்னிசையால்

(13-ம் பக்கம் பார்க்க)

''இல்லறம் அல்லது
நல்லறம் அன்று''

ஈழத் தமிழர் இன்புற்றிருக்க சீதன முறையை சீரியமுறையில் முன்னோர் வகுத்தார்.

ஆண்களும் பெண்களும் ஆனந்த தம்பதிகளாகவும் முதலைக்காத்து வட்டியில் வாழவும் சீதனப் பணத்துடன் சிக்கனமாக தயக்கமின்றி வாழ்க்கையை வகுக்கவும்

தம்பி அன் கோ

நிரந்தர சேமிப்பிற் சேருங்கள்

ரூ. 3000/-தொடக்கம் ரூ. 30000/- வரை

வருடம் 12 சதவீதம் (12% P.A.) வட்டி கொடுக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:-

(1) வட்டி ஒவ்வொரு மாதமும் முதற் போயா தினத்தில் திருநெல்வேலி ஆபீசில் கொடுக்கப்படும்.

(2) முதலை எப்பொழுதும் 3 மாத அறிவித்தலில் எடுக்கலாம்.

முழுவிபரங்கட்கு:-

தம்பி அன் கோ.,

திருநெல்வேலி
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழிலக்கியத்தில் குழந்தையுலகம்

# உணர்ச்சியும் கவர்ச்சியும் கவிதைக்கு வேண்டும்

கவிதை என்பது வெறுமனே செய்திகளைமட்டும் தருவதன்று. அது ஓர் உணர்ச்சிக் கலவையாகும். உள்ளத்துள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பதே கவிதை.

''மாம்பழம் நல்ல மாம்
பழம—அப்பா
வாங்கித் தந்த மாம்பழம்
மாம்பழம் இது காணக்
காண
வாயினிக்கிற மாம்பழம்''

என்று பாடுகையில்குழநதையின் மனதில உணமையிலேயே தனக்கு இனிப்பான

— செல்வி ஆசாரியா ஜமீல் —

கவிதையில் உணர்ச்சிகள் சித்திரிக்கப்படவேண் டும். அவ்வுணர்ச்சிகள் கவிதையைப் படிக்கும்பொழுது கட்டவிழ்த்துக்கொண்டு வர வேண்டும். குழந்தை உள்ளம் அற்புதம், அழகு, ஆனந்தம், வீரம், வியப்பு போன்ற உணர்ச்சிகளில் மிகுநத ஈடுபாடுடையது.


மாம்பழம் கிடைத்துவிட்டது போன்றதொரு ஆனந்தம் தோ றுகிறது. இத்தகைய குழந்தைகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணர்ச்சிகளைச் சித்திரிபபதிலேயே குழந்தைக் கவிஞனின் வெற்றி தங்கியுள்ளது.

### உணர்ச்சியும் ஓசையும்

உணர்ச்சி மிகுந்த நிலையில் சிறுவர்களின் மனதில் ஏற்படும் மாற்றங்கள் உடலிலும் பிரதிபலிப்பதை நாம் காணலாம். தமக்காக உணவுப் பண்டங்களும், விளையாட்டுப்பொருட்களும்காத்திருக்கின்றன என்பதை அறிந்த சிறுவர் மகிழ்ச்சிப்பெருக்கால் துள்ளுவர், ஓடுவர், ஆடுவர், பாடுவர். அவர்களது மகிழ்ச்சி அவ்வாறு உடல்மூலமும் வெளிப்படுகின்றது. அங்ஙனமே உணர்ச்சி மிக்க பாடல்கள் ஓசை நயத்தோடு வெளிப்படும்போது குழந்தைகளும் அவற்றிற்கேற்றாற் போல ஆடத்தொடங்குகின்றன.

### சொல்லாட்சி

குழந்தைப்பாட்டிலேஓசை நயம் எவ்வளவு முக்கியமோ அதே போன்று முக்கியத்துவம் வாய்ந்ததே அதில் காணப்படும் சொற்களும் என்பதை ஒரு குழந்தைக் கவிஞன் மறந்துவிடமுடியாது. குழந்தைகள்நிறைந்த அறிவைப்பெருதவர்கள். அவர்கள் அறிந்த சொற்களும் மிகக்குறைவு. ஆதலின் குழந்தைகட்குப் புரியக்கூடிய, இன்று வழக்கிலுள்ள எளிய சொற்களில் எழுத வேண்டும். அடிக்குறிப்புகள் கவிதையின் சுவையைக் கெடுத்துவிடும்என்பதை ஒவ்வொரு குழந்தைக்கவிஞனும் நினைவில் கொள்ளவேண்டியது அவசியம்.



### கருத்தாழமும் கவர்ச்சியும்

குழந்கைள் கேட்க விரும்புகின்றன; பேசவிரும்புகின்றன. அவர்கள் எதை எதையோ கேட்டு எதை எதையோ பேசி மாசுறுவதற்கு முன்பு சிறந்த கருத்து மிக்க பாடல்களால் அவர்களது செவிக்கும், கருத்திற்கும், நாவிற்குமவிருந்தளிக்க வேண்டியது குழந்தைக் கவிஞனின் கடமை மேலைநாட்டினர் ஒழுக்கத்தைக்கூறும் பாடல்களை வேருெரு பிரிவாகவும் பகுக்கின்றனர். ஆனல் குழந்தைகளைப் பொறுத்தவரை இத்தகைய பாகுபாடு பொருத்தமானதன்று. அறத்தைப்போதிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டகவிதைகளை, வெறுமனே நீதிகளையும் கொள்கைகளையும் கொண்டுள்ள பெட்டகங்கள் என்று அழைக்கலாமே தவிர உள்ளத்தைத் தொடும் கவிதைகளாக அவற்றைக் கருதமுடியாது. ஆகவே குழந்தைகட்குப் பாட்டு அமைக்கும் போது அவை நல்ல கருத்துக்களைப் போதிப்பதுடன் கேட்பவர்களுக்கு இ பத்தையும் அளிக்கக்கூடியனவாகவும் அமையவேண்டும். கவிதையில் கவர்ச்சியின்மை குழந்தைகளது நினைவாற்றலை மங்கச்செய்வதனல் கவர்ச்சியற்ற பாடல்களை அவர்களது நினைவிலிருந்துவது சிரமமான காரியமாகும்.

(தொடரும்)

---

### அணங்கு பற்றி அறிஞர்கள்



**குடும்பம் திருந்த**

ஓர் ஆடவன் திருந்தினல் அது அவனளவிலே இருக்கும். ஒருபெண்மணி திருந்துவதால் ஒரு குடும்பம் முழுவதுமே திருந்தும்.

— சரோஜினிதேவி.

0 0 0

**மனைவிகுரல் ஓங்கினல்...**

எந்த இல்லத்தில் கணவன் குரலைவிட மனைவியின் குரல் ஓங்கி ஒலிக்கிறதோ அந்த இல்லத்திற்கும் இன்பத்திற்கும் எவ்வித உறவும் இல்லை.

—'ஸாதி'

0 0 0

**பெண்ணுடன் மகிழ்ச்சியாக வாழ...**

ஓர் ஆடவனுடன் மகிழ்ச்சியாக வாழ அவனை நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும்; அவன் மேல் சிறிது அன்பு செலுத்த வேண்டும். ஒரு பெண்ணுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமானல் அவள் மீது நிறைய அன்பு செலுத்தவேண்டும். ஆனல் அவளைப்புரிந்து கொள்ள முயற்சி செய்யக் கூடாது.

-'சிட்னி ஹார்ன்'

0 0 0

**குணமுடைய பெண்**

குணமுடைய பெண் தன் கணவனுக்கு கிரீடமாகிருள். லஜ்ஜையை உண்டுபண்ணு கிறவளோ அவனுக்கு எலும்புருக்கி நோயாக இருக்கிருள்

—யேசு

---

### சமைத்துப் பாருங்கள்

## ரவாப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

ரவை - 1 இரு.
பாசிப்பருப்பு-1/4 இரு.
சீரகம் 1/2 டீஸ்பூன்
நெய் -1/4 போ.
(தேவையான அளவு)
இஞ்சி
உப்பு
மிளகு
பச்சைமிளகாய்

**செய்கை முறை:**

முதலில் பாசிப் பருப்பை சிறிது நெய் விட்டு வறுதெடுத்து அரை அவியலில் வேக வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து இரும்புச்சட்டியை அடுப்பில் வைத்து சிறிது நெய் விட்டு ரவையை அதில் போட்டு நன்ருக வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர்முந்திரிப்பருப்பு, பொடி செய்த மிளகு, சீரகம், பச்சைமிளகாய், இஞ்சி இவற்றையும் சிறிது நெய்விட்டு வதக்கி அதில் 2 கோப்பை நீர் விட்டு வேண்டியளவு உப்பையும் போட்டுக் கொதிக்க விடுங்கள். நன்ருகக் கொதித்ததும் முதலில் வறுத்தெடுத்த ரவையை அதில் கொட்டி வேகவையுங்கள. அத்துடன் வேக வைத்த பாசிப்பருப்பையும் போட்டு நன்ருகக் கிளறி விடுங்கள் தண்ணீர் வற்றி இறுகியதும் அடுப்பிலிருந்து இறக்கி சிறிது நெய் விட்டு சிறிது நேரம் மூடிவைத்துப் பின்னர் எடுத்துப்பரிமாறலாம்.

— விசாலா

---

# 'வாசற்படி மறியல்'

பழக்கவழக்கங்களும் குறித்தவகைச் சடங்குகளும் வாழ்க்கை முறையின் உள்ளார்ந்த அம்சங்கள் ஆகும். இவை வரலாற்றுப்போக்கில் உருவாகி வளர்ச்சிபெறுகின்றன.

தமிழர்கள் மத்தியில் இன்று நடைபெறும் சடங்குகள் பல இன்று நேற்று வந்தவையல்ல: மிகப்பழைய காலந்தொட்டே இருந்து வருவன. இவை காலத்தின் போக்கிற்கேற்பப் பல மாறுதல்களைப்பெற்று விளங்குகின்றன. இவைகளில் சில பல இடங்களில் மறைந்து ஒரு சிலரால் மாத்திரம் கைக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு மறைந்தும் மறையாமலும் உள்ள ஒருவகைச் சடங்குமுறைதான் 'வாசற்படிமறியலாகும்'. இந்த விநோதச் சடங்குமுறை தமிழ்நாட்டிலுள்ள நெய்தல் பகுதியில்வாழும் பரதவரிடையே இன்றும் நடைபெறுகிறது. இம்மக்கள் இன்று பெரியதாழை, புன்னைக்காயல் போன்ற கடற்கரைச் சிற்றூர்களில் வாழுகிருர்கள்.

இப்பரதவரில் ஒரு பெண்ணுக்கு விவாகமாகவேண்டுமானல் அவள் தங்கள் குடும்பத்திற்குள்ளேயே அதாவது தாய்மாமனையே விவாகம் செய்யவேண்டும். இவரையே அப்பெண்ணுக்கு முறைமாப்பிள்ளை எனச் சொல்வர். தாய்மாமனை மணம் செய்யாது வேருெருவரை மணம் செய்தால் அந்த மணமகனுக்கும் மேற்சொன்ன முறை மாப்பிள்ளைக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுவிடும். இது உண்மையாகக் கோபத்தின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல. இவ்விவாதம் ஒரு மணவினையாக நிகழ்கிறது.

வேருெருவனை மணந்த அப்பெண்ணை தேவாலயத்தில் விவாகம் முடிந்தஅன்று அவள் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். மணமகனும் தனது இருப்பிடம் சென்று விடுவான். பின்னர் மணமகன் மணமகளைக் காண அவள் வீடு செல்வான். அப்பொழுதுதான் முறை மாப்பிள்ளை வாசற்படியில் நின்று மணமகனை மறித்து:

''மெத்தநாள் காவல்
செய்து இருக்குமென்
கரகத்திற்குள்
இத்தனீர் வந்த செய்தி
இயம்புவீர் இயம்புவீரே''

எனத் தனது விவாதற்திற்கிடையில் வினவுவான். அதற்கு மணமகன்:

'நலம்பெறப்பெரியோர்கூடி
நாதனின் அருளினலே
வளம்பெறக் கைப்பிடித்த
மங்கையைத்
தேடிவந்தேன்'

எனப்பாடுவான்.

இவ்வாறு இருவர் வாக்குவாதத்தின் போதும் இடம் (14-ம் பக்கம்] பார்க்க)




தயாரிப்பு

---

### கருணையங்.....

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

இவைபத்தும்
இசையுங்கால்
ஈசனடி ஏத்து வார்கள்
தன்னிசைசோ டமருலகில்
தவநெறிசென்
றெய்துவார்
தாழா தன்றே.

அன்னப்பறவைகள் உலாவும் சோலைசூழ்ந்த திருவையாற்றுத் திருத்தலத்திலே கோயில்கொண்டு வீற்றிருந்தருளும் எம்பிரானைக் குறித்து, நிலைபெற்றசிறப்பு வாய்ந்த சீர்காழியில் அவதரித்த வேதநெறி வளரும் ஞானசம்பந்தன் பாடிய இப்பத்துப்பாசுரங்களையும் இனிய இசையுடன் இறைவனது திருச்சந்நிதியில் பாடி எம்பிரான் திருவடிகளைப் போற்றுவோர்எல்லாச்சிறப்புக்களுடனும் தவநெறி தலைப்பட்டவரார்ய் சிவபதப் பேறடைவர் என்பது சத்தியம். சத்தியம் முக்காலும் சத்தியமேயாம்.

(11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரக்கன்துறை . . .

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

குளக்கரையைச் சேர்ந்த பகுதி ஓடைக்கரை என அழைக்கப்படுகின்றது. பருத்தித்துறையிலும் இதேபோல் ஓடைக்கரை ஒன்று இருக்கிறது. ஓடைக்கரை காங்கேசன்துறையின் அநாதியான பெயராக இருந்திருக்குமாயின் ஓடைக்கரை என்ற பெயர் கயாத்துறை என்ற பெயர்வழக்கொழிந்து கழிந்ததுபோல வழக்கொழிந்து கழிந்திருக்குமேயன்றிக்காங்கேசன்துறையில் ஒரு பகுதி ஓடைக்கரையாய் இருத்தல் முடியாது.

**குரக்கன்துறை**

**ஒரு மீன்பிடித்துறை**

காங்கேசன் துறையில் வாடிவீட்டிற்கும் சடையம்மா சமாதிக்குமிடையில் 1. துறை, 2. குரக்கன்துறை 3. சின்னத்தாழையடி, 4. பெரியதாழையடி, 5. மலைக்குடா, 6. மலையடி என ஆறு மீன்பிடிப்பிரிவுகள் இருந்தன. இவற்றுட் சின்னத்தாழையடி, பெரிய தாழையடி தவிர்ந்த ஏனைய நான்கு பிரிவுகளிலும் இன்றும்மீன்பிடித்தொழில்நடைபெறுகின்றது. குரக்கன் துறையில் கிழக்குப்பகுதியைச்சேர்ந்தவர்களிற் சிலர் மீன்பிடிக்கின்றனர். இத்துறை வெளிச்சவீட்டுக்கு அருகாமையிலிருக்கின்றது. அக்காலத்திற்குரக்கன்துறை ஒன்றே தெருவுக்கு அண்மையில் இருந்தது. மீன்வரி அறவிடப்பட்ட அக்காலத்தில் ஆறு துறைகளிலும் பிடிக்கப்பட்ட மீன் குரக்கன்துறையிலேயே ஏலம் போடப்பட்டது. பண்டமாற்று நடைபெற்ற அக்காலத்தில் வேளாண்மரபினர் குரக்கனைக்கொடுத்து மீனை வாங்கினர். அதனால் அத்துறை குரக்கன்துறை என அழைக்கப்பட்டது என்பதே மூதாதையர் கூற்று இதில் உண்மை தொனிக்கிறதேயன்றி குரக்கன் ஏற்றிய பெருந்துறை குரக்கன் துறை என்னும் கூற்று ஆதாரமற்றது.

**குரக்கன்துறையும்**

**இலிங்கதாரிகளும்**

கன்னடராகிய இலிங்கதாரிகள் காங்கேசன்துறையில்வந்துஇறங்கிய வரலாறு வரலாற்றுநூல்களிற்காணப்படுகின்றன. கி. பி 14-ம் நூற்றுண்டிலே யாழ்ப்பாணத்தை அரசுசெய்த வீரோதய சிங்கை ஆரியன் காலத்தில் இலிங்கதாரிகளாகிய கன்னட மல்யுத்த வீரர்களை மதுரையை அரசாண்ட சந்திரசேகர பாண்டியன்அனுப்பிவைத்தான் எனவும் இவர்கள் காங்கேசன்துறையில் குடியேறினுர்களெனவும்வரலாறு கூறுகின்றது. திரு. முத்துத்தம்பி அவர்களின் ''யாழ்ப்பாண சரித்திரம்'' கூறும் காங்கேயன் என்னும் தளபதி இருந்த காலம் வீரோதயசிங்கை ஆரியனின் தந்தை குணபூஷண சிங்கை ஆரியனின் காலமாகும். மேலும் இந்தியாவில் வீரசைவம் உதயமானது கி.பி. 12-ம் நூற்றுண்டிலாகும். காங்கேயன்துறை குரக்கன் துறையாம் இருந்த காலத்தில் இலிங்கதாரிகள் வந்து குடியேறி வீரபத்திரர் கோவிலை ஸ்தாபித்தார்கள். என்பதைஏற்பதாயின் கி.பி. 14-ம், 15-ம் நூற்றுண்டிலும் காங்கேசன்துறை குரக்கன்துறையாகவே இருந்திருத்தல்வேண்டும்.

**கதிர்காமக்கந்தனும்**

**காங்கேசன்துறையும்**

மனிதன் காங்கேயன் வந்திறங்கிய காரணத்தால இலிங்கதாரிகள் வந்து இறங்கிய குரக்கன்துறை எனப் பெயர்பெற்றது எனவும், பின் கந்தவெற்பிலிருந்த கந்தக் கடவுளும் தேவிமார்களும் கப்பலேறிக் காங்கேசன்துறையில் வந்திறங்கித் தமக்கு ஓர் ஆலயம் அமைத்துத் தங்கிப் பின் கதிர்காமத்துக்குச்சென்று முத்துலிங்க சங்கமர் சமாதிமண்டபத்தில் எழுந்தருளினுர் என்றும். கும்பாபிஷேக மலரில் கூறப்பட்டுள்ளது ஒரு விதத்திலும் பொருந்தாது என்பதை வாசகர்களுக்கு நான் கூறவேண்டியதில்லை. மலரிற் கூறப்பட்டதை நம்புவதாயின் கதிர்காமக் கந்தன் கி. பி. 14-ம் நூற்றுண்டுக்குப்பின் கப்பலில் வந்து இறங்கிய மனிதனுகவும் முத்துலிங்கர் கதிர்காமக்கந்தனுக்கு முந்தியவராகவும் அல்லவா கருதவேண்டியிருக்கிறது.

டாகடர் எம். கொலிவ்ரன் எழுதிய ''ஒறியன்ரல்ஸ்'' என்னும் நூலிலும் ''கந்த உபத' என்னும் சிங்கள நூலிலும் ஏனைய நூல்களிலும் இன்று கதிர்காமத்தில் உள்ளஆலயம் கைமுனு மகாராசாவினுல் கட்டப்பட்ட ஆலயம் எனக்கூறப்பட்டுள்ளது. திரு பார்கர் எழுதிய ''பூர்வீக இலங்கை'' என்னும் நூலிலும் அநேக தமிழ் நூல்களிலும் விஜயன் வருகைக்கு முன்னரே கதிர்காமக் கோவில் இருந்ததாகக்கூறப்பட்டுள்ளன கதிர்காமத்தின் தொன்மையை அறியாதவர்களா சைவத் தமிழ் மக்கள். இவர்களுக்குகதிர்காமத்தை அண்மையில் உண்டானது எனக்காட்டுகிருர் கும்பாபிஷேக மலர் ஆசிரியர்.

இலிங்கதாரிகளின் பழமை கூற எழுந்தது கும்பாபிஷேக மலர். அதற்காக மீன்பிடித்துறையாம் குரக்கன் துறை பெருந்துறைமுகமாக்கப்பட்டது. கதிர்காமரால் ஸ்தாபிக்கப்பட்ட கோவில் இலிங்கதாரிகளால் ஸ்தாபிக்கப்பட்ட கோவிலாக்கப்பட்டது. இக்கோவிலின் தொன்மை கூறுமுகமாக கயாத்துறைக்கு முந்தியது குரக்கன்துறை எனக்கூறப்பட்டது.

கும்பாபிடேகமலரை வெளியிட்ட சபையின் செயலாளர் திரு. வ. குமாரசாமி தம்மால் வெளியிடப்பட்ட கும்பாபிடேக மலரையே ஆதாரமாகக் கொண்டு 8-12-69ல் வெளிவந்தகட்டுரையை எழுதிவிட்டார்.

இக் கும்பாபிடேகமலரை வெளியிட முயற்சித்த இரு இலிங்கதாரிகளினதும் முயற்சியால் 1952-ம் ஆண்டில் ''கீரிமலை வரலாறு'' என்னும் நூல் வெளிவந்தது அந்த நூலில் மாருதப்புரவீகவல்லியால் வரவழைக்கப்பட்ட காங்கேயப்பெருமான் திருவுரு வந்திறங்கிய காரணத்தால் கயாத்துறை காங்கேசன்துறையென மறுநாமம் கொண்டது எனக் கூறிய இவர்களே கும்பாபிடேக மலரில் நவவரலாறு ஒன்றை எழுதியிருப்பது விந்தை. 'கீரிமலை வரலாறு' என்னும் நூலும் இலிங்கதாரிகள் பற்றியும் வீரசைவம் பற்றியும் கூறும் நூல். அந்தநூலில் குரக்கன் துறையில் வந்து இறங்கிய இலிங்கதாரிகள் வரலாறும் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வீரபத்திரகுருசுவாமி கோவில் வரலாறும் கூறப்படாதது குறிப்பிடத்தக்கது.

முந்தையோர் வரைந்த வரலாற்று நூல்களைத் தம்மனப்போக்கையே தக்க ஆதாரமெனக்கொண்டு வரலாறு புனைபவர்கள் தள்ளிவைப்பதனுலேயே உண்மை வரலாறுகள் மறைகின்றன.

கி பி. 19ம்நூற்றுண்டின் இதுகிவரை வெளிவந்த பல வரலாற்று நூல்களையும் ஆராய்ந்து திரு. க. வேலுப்பிள்ளையவர்கள் ''யாழ்ப்பாண வைபவ கௌடுதி'' என்னும் நூலையும் திரு. டானியல் ஜோன் ''யாழ்ப்பாணச் சரித்திரத்தையும்'' வெளியிட்டுள்ளார்கள். நவ வரலாறு புனையும் ஆசிரியர்கள் இவ்விரு நூல்களிலும் கூறப்பட்டவைக்கு மாறான வரலாறு புனைவார்களாயின் தமது கூற்றுக்குத் தகுந்த [illegible] டும்

# இருதய நோய்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளும். ரத்த ஓட்டம் இப்படி தடைப்பட இருதயம் வழக்கத்திலும் வேகமாக அடித்து, நாடித்துடிப்பும் ரத்த அமுக்கமும் அதிகரிக்கும். 'அட்ரெனலின்' அதிகரிக்க அதிகரிக்க பெரிய ரத்தக் குழாய்களுக்கும் தடைகள் ஏற்படும். அப்பொழுது மார்பு வலி உண்டாகும். இப்படியே போய்க்கொண்டிருந்தால் திடீரென்று ஒரு நாள் இருதயம் வேலைசெய்ய முடியாமல் நின்றுவிடும். இருதயம்நின்றவுடனே ரத்த ஓட்டம் இல்லாமல் மூளை முதலான சகல அவயங்களுமே நின்று விடும்.

உணர்ச்சி வசப்படுவதைத் தவிர, மேலதிகமான கொழுப்பு, நிறை மிகுதி, தேகம் தாங்கிக்கொள்ள முடியாத கடினமான வேலைகளை செய்தல் முதலியனவும் ரத்தக் குழாய்களை அடைத்து இருதய நோய்க்கு அடிகோலும்.

## உடனடியாக கைச்சிகிச்சை

ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இருதயம் நின்ற அந்தக்கணத்திலேயே அவர் இறந்து விட்டார் என்று கைவிட்டு விடப்படாது. நீரில் மூழ்கியவர்களுக்கு முதலுதவி செய்வதுபோல இவருக்கும் கைச்சிகிச்சை அளித்து டாக்டர் வரும் வரையில் இருதயத்தை மீண்டும் துடிக்கச் செய்யலாம். அம்முறை வருமாறு:

1. நாடியை சோதிக்கவும் கையைவிட தொண்டையின் இரு பக்கத்திலுமுள்ள நாடியை சோதிப்பதுசுலபம் நாடித்துடிப்பு இல்லாவிட்டால்,

2 நோயாளியை உடனே வெறும் தரையில் அல்லது பலகைக் கட்டிலில் மல்லாத்திக் கிடத்தவும், சாய்வு நாற்காலியோ மெத்தை சோபாவோ உதவாது.

3, நாடிகூரையைநோக்கக் கூடியதாக தலையை பின்னுல், சரிக்கவும் தலை கவிழ்ந்திருந்தால் நோயாளி மூச்சுத் திணறிப் போவார்,

4. அவருக்கருகில் முழங்காலில் நின்று கொண்டு உங்கள் வலது கையை நன்ருக விரித்து அவருடைய நெஞ்செலும்பின் மீதுவைக்கவும்.

5. இடது கையை வலது கையின் மீது வைத்துக் கொண்டு நெஞ்செலும்பை உறுதியாக அமுக்கவும். சிறு குழந்தையானுல் ஒரு கை போதுமானது.

6 உடனே அமுக்கத்தை தளர்த்தி கைகளை தூக்கவும் கைகளை நெஞ்சைவிட்டு எடுக்காதபடி இப்படியே நிமிடத்துக்கு சுமார் 60 முதல் 80 தடவைகள் அமுக்

[15ம் பக்கம் பார்க்க]

# வாசற்படி...

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

பெறும் பாடல்கள் இலக்கியச் சுவையுடையனவாக விளங்குவதோடு இலக்கிய வரலாற்றிலும் இடம்பெற்றுள்ளன.

இறுதியில் வாசற்படியருகே இருக்கும் முறை மாப்பிள்ளைக்கு மணமகன் மோதிரம் முதலாய பரிசுகளைக் கொடுப்பான். கொடுத்த பின்னரே முறை மாப்பிள்ளை வாசற்படியினின்று அகலுவான். அதன் பின்னரே மணமகன் மணமகளிடம் செல்லுவான்.

இந்தவழக்கம் 'வாசற்படி மறியல்' என்ற பெயரில் இன்றும் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழும் பரதவர் என்னும் சாதியினரிடையேயுள்ளது.

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 3 காட்சிகள்
சந்திரபாபு-எம். ஆர் ராதா
நடித்த
கவலையில்லாத மனிதன்

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
காவல் காரன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
கணவன்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m
Poya Prepoya 4 Shows
Lee Marvin, Vera Miles
in
SERGEANT RYKER

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
வீரத்திருமகன்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி நான்கு காட்சிகள்
நாகேஷ், விஜயநிர்மலா
வீரப்பன், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சோப்பு, சீப்பு, கண்ணாடி
(சிறந்த நகைச்சுவைச் சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

4வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவீன நரி விருத்தம்

"கரவைக்கவி கந்தப்பனுர்"

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கங்கை கொண்டான் காவிரி ஆண்டான்
 கல்தலை கொண்டு வந்தான்
சிங்கத் தமிழன் என்று முழங்கிச்
 சீலர்கள் போல் நடித்து
பங்கம் செய்யும் பேர்களி னேடு
 பாங்குற உறவாடித்
தங்கள் சுகமே தலைக் கொண்டார்கள்
 தந்திர நரியல ரோ?

கல்லே தெய்வம் கடவுள் எங்கே
 கண்ணுற் கண்டவ ரார்?
தொல்லை தருமிச் சமயம் எதற்கு
 துகளாக் குவம் என்று
எல்லை இன்றிப் பேசித் திரிந்த
 எத்தனை பேர்க ளின்று
அல்லல் படும் தாழ்ந் தோருக்காக
 ஆலய நரியானுர்?

கோவிற் சொத்தில் குடும்பம் வளர்த்தே
 கொடும்பா விக ளானேர்
வாயிற் கதவைப் பூட்டியே வைத்து
 வம்புகள் செய்கின்ருர்
நாவாற் கேட்க நாவலனில்லை
 நல்லவர் தூங்குகிருர்
ஓயாப் பேச்சுப் பேசும் நரிகள்
 ஒவ்வொரு குரல் காட்டும்.

தமிழை வளர்க்கப் பண்டிதர் வந்தார்
 தமக்கே சொந்த மென்ருர்
உமியைக் கொண்டார் உள்ளதை விட்டார்
 உரிமைக்குப் பாடுபடார்
விழியெம் மொழியென் றன்னையின் பேரு
 வீரர் புறப்பட்டார்
களிகொள் கதைகள் நாவல்கள் கண்டார்
 கட்சிகள் பல கொண்டார்.

எழுத்தினை ஆளும் நரிகளின் செய்கை
 எண்ணிக் தொலை யாவே
குருத்திலே கிள்ளும் விமர்சன காரர்
 கொள்கைப் போர் வீரர்
விருப்பம் இருந்தும் வேண்டாம் புளிக்கும்
 வீணுய் எழுதி யென்ன
உருப்படி யாச்சு என்று கதைக்கும்
 ஊளை நரிகள் உண்டே.

## வேறு

பொதுநலத்திற் பாடுபடப் பலரிருக்கப்
 புறப்பட்டுக் கிராமசங்கத் தெரிவில் நின்று
நிதியதனிற் கண் வைத்துத் தலைவராகி
 நித்தமும் ஏமாற்றுநரி உண்டே ஊரில்
கதி யெதுவும் இல்லாமற் பல நோக்குள்ள
 கடைச்சங்கம் தனிற்பெரிய தலைவராகி
பதிவிருந்து காலம் பார்த் தடித்துக் கொள்ளும்
 பண்பில்லா நரிகளை நீர் காணீர் போலும்

அரசியல் சமயத்தில் அழகே போற்றும்
 அரும் எழுத்தில் தொண்டதனில் புகுந்தேயுள்ள
நரிமனிதர் புகழ்பெற்று ஊருக்குள்ளே
 நடமாடித் றமிழ்வாழ்வை அழித்தல் கண்டும்
பெருங் கவிதை படித்துவிட்டுக் கண்ணைமூடி
 பீடுபட இருப்பதனல் உலகுக்கென்ன?
வெறும் நரியை அடிப்பதனுற் பயன் ஒன்றில்லை.
 வீரமிகு தமிழ்ச்சாதி தோன்றல் வேண்டும்.

## வேறு

நாலும் தெரிந்த நரியனுர் கூறிய
 நல்ல உரை கேட்டே
சிலம் மிகுந்தவர் போலுரை செய்கிறீர்
 செய்கை பிழையலவோ
சாலங்கள் செய்து பிழையைச் சரியாக்கச்
 சான்றுபல சொன்னீர்
காலங்கள் முன்பிலும் இப்பிழைகள் பல
 கண்டதும் நம் கதையே.

எங்களின் முன்னேர்கள் எல்லோரும் சீலர்கள்
 என்பதும் இன்று தமிழ்த்
தங்க மனிதர்கள் இல் என்று கூறுனீர்
 சாற்றுவதும் பொய்யே
என்று நான் கூறி எரிவதை விட்டுவிட்
 டேங்கித் திரும்புகையில்
 நன்றென்று கூறியே குட்டியை விட்டுஅந்
நரியர் நடக்கலுற்ருர்.

நாலும் தெரிந்த அந்நரியார் கூற்றுகள்
 நன்மை தரும் உண்மை
சிலம் மிகுந்தவர் வாழ்ந்திடப் போலீகள்
 சென்றெங்கோ போயொழிய
நாலுமிரண்டுந் தெரிந்தவர் கூடியே
 நன்ருகச் சிந்தை செய்தால்
'சோலி'கள் போகும் சுகம்வரும் என்று நா
 துடித்தேன் கன போச்சே.

(முற்றும்)

## இருதயநோய்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

கித் தளர்த்தி, அமுக்கித் தளர்த்திக்கொண்டு வரவும் இது சாதாரணமாக இருதயம் விரிவதையும் ஒடுங்குவதையும் ஒத்திருக்கும்.

7. வைத்தியஉதவிகிடைக்கும் வரை இப்படி செய்து கொண்டே இருக்கவும்.

இப்படிச் செய்வதன் பயனுகப் பலருக்கு நாடித்துடிப்பும் சுவாச இழுப்பும் மறுபடியும் ஏற்பட்டிருக்கின்றன. மாரடைப்பு ஏற்பட்ட மூன்று நிமிடங்களுக்குள் இந்த கைச்சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு மேல் ரத்த ஓட்டம் நின்று விட்லால் மூளைக்கு சேதமேற்படும். நோயாளி பிழைத்து விட்ட போதிலும் மூளை பாதிக்கப்பட்டிருக்கும்.

மாரடைப்பு ஏற்படும் வரை காத்திராமல், ஒருவர் ஒழுங்கான சாப்பாடு, நல்ல தேகப்பியாசம், போதிய ஓய்வு, நிதானமான வேலை, மன அடக்கம் ஆகியவைகளை பேணிக்கொண்டால் இருதய நோயிலிருந்து தம்மைத்தாமே விடுவித்துக் கொள்ளலாம்.

## குதிரை..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அசோக சக்கரவர்த்தியின் குருவும் முற்றுந்துறந்த முனிவருமான் உபகுப்தரின்கதை தான் அப்பொழுது ஏனோ என் நினைவுக்கு வந்தது.

உடலில் அழகின் பொலிவும் யௌவனத்தின் துடிப்பும் உணர்ச்சியின் வேகமும் இருந்த காலத்தில் தன் வீட்டுக்கு வரும்படி வருந்தி அழைத்த தாசி வாசவதத்தையிடம் பல காலத்தின் பின் அவள் குஷ்டநோயுற்று அங்கங்களெல்லாம் அழுகி நகரத்துக்கு வெகுதூரத்துக்கப்பால் சுடுகாட்டுப்புழுதியில் வேதனை பொறுக்க மாட்டாமல்கிடந்து புரண்ட ஒரு தினத்தில் உபகுப்தர் போகிருர்.

''அரசர்களும் பிரபுக்களும் என்னுடன் அழகுக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது, அக் காலத்தில் எல்லாம் வராமல் பேய்களும், நரிகளும், கழுகுகளும், காகங்களும் என் உடலைப்பற்றி இழுத்துத் தின்னும் இக்காலத்திலா தாங்கள் வரவேண்டும் சுவாமி?'' என வருத்தப்படுகிருள் வாசவதத்தை.

''இதில் என்னம்மா ஆச்சரியம்? அவர்கள் வரவேண்டிய காலத்தில் அவர்கள் வந்தார்கள். நான் வர வேண்டிய காலத்தில் நான் வந்திருக்கிறேன்'' என்று உபகுப்தர் பதிலளித்து விட்டு மிக்க பரிவோடும், அன்போடும் அவளைத் தூக்கிக்கொண்டு பாடலிபுரத்திலுள்ள பௌத்த விகாரத்தை நோக்கிச் செல்கிருர்.

0 0 0

## நடைப்பயிற்சி

'ஆபிரிக்க இளைஞன் காயீரா இரண்டாயிரத்து ஐநூறுமைல் நடந்தானே படிப்பதற்கு'

—நவராத்திரிவிழாவில் ஒரு பிரசங்கியார்

இரண்டாயிரத்தை நூறு மைல் காயீரா பள்ளிக்கூடத்தைத்தேடி நடந்துசென்ற தூரமா அல்லது பள்ளிக்கூடத்துக்கும் வசிப்பிடத்திற்குமாகத் தினமும் நடந்த தூரமா?

இரண்டாவதானல்—

ஆபிரிக்காவிற்குப் போவானேன். யாழ்ப்பாண நாட்டில் ஓர்இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாகப் பள்ளிக்கூடம் போய்ப் படித்த மாணவர்கள் தினமும் நடந்த தூரத்தை ஆகக் குறைவாகக் கணக்கிட்டாலும் அவர்கள் பள்ளிசென்று படித்த முழுநாட்களிலும் பத்தாயிரம் மைல் தொடக்கம் இருபதாயிரம் மைல் வரை நடந்திருப்பார்களே. அவ்வளவுதூரம் நடந்து படித்தவர்களை எல்லாக் கிராமங்களிலும் பார்க்கலாம், பெரும்பகுதியும் பென்ஷன் ஓய்வு எடுத்தவர்களாக. இவர்களில் சிலர் இன்னமும் தங்கள் கால்களுக்கு ஓய்வு அளிக்காமல் நடந்துகொண்டேயிருக்கிருர்கள்.

## சுன்னுகம் பட்டணசபை சோலைவரி

1969-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்திற்குரிய சோலைவரியை வரி அறவிடுபவரிடம் அல்லது பட்டணசபை அலுவலகத்தில் 12-1-70ம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தத் தவறின் கூடுதலாக 10 வீதம் (பத்துவீதம்) விருந்துப்பணமும் வரிப் பணத்துடன் சேர்த்து அறவிடப்படும் என்பதை சுன்னுகம் பட்டணசபை வரியிப்போருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை,
சுன்னுகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னுகம்,
26-12-69. 1896

## நாகபாம்பும்...

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

குஞ்சுகள முட்டையிலிருந்து வெளிவரும்பொழுதே விஷமுடையதாக இருக்கும்.

**நாகராஜா**

நாகங்களில் மிகவும் உயர்ந்த சாதியானது. 15 அடி முதல் 20 அடிவரை நீளமுடையதாகவும் பெரிய படத்தைக் கொண்டதாகவும் உள்ள நாகராஜா என்னும் சர்ப்பமாகும். இது இலங்கையில் இல்லை. ஆபிரிக்கக் காடுகளில், மலைப்பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படும். இது மற்றப் பாம்புவகைகளையே உண்டு சீவிக்கும். நாகங்கள் மற்ற இனப் பாம்புகளை உண்பதை எனது அனுபவவாயிலாகவே கண்டிருக்கின்றேன்.

**நாகமும் தெய்வத்தன்மையும்**

நாகபாம்பைப்பற்றிய கதைகள் இதிகாசங்களிலும் புராணங்களிலும் ஈடுபாடு உடையவைகளாக இருப்பதை நாம் காண்கிருேம். சிவபெருமானின் திரு ஆபரணமாகவும், திருமாலின் பஞ்சணையாகவும், முருகனின் மயிலின் காலடியிலும் நாகங்கள் சம்பந்தப்பட்டிருப்பதைக் காண்கிருேம். இந்துக்கள் இதைச் கொல்லத் துணியமாட்டார்கள். கொன்ருல் நாக தோஷம் பிடித்துக்கொள்ளும் என்ற நம்பிக்கைதான் அநேகமாக இதற்குக் காரணமாகும். கோவில்களில் நாக வணக்கம், நாகசாந்தி

[16-ம் பக்கம் பார்க்க]


## வரிவிளம்பரம்

ஈழத்தின் கேந்திரஸ்தானமாகிய வவுனியாவில் பிரபல பஸ்ராண்டின் முன்பாக பிடவை வியாபாரமும், சாய்ப்புச் சாமான்களும், பிடவை சலுசலாக் கோட்டா உட்பட கடை கொமிஷனுக்கோ அல்லது விலைக்கோ கொடுபடவிருக்கிறது. தேவையானேர் நேரடியாக உடன்தொடர்பு கொள்ளவும். லக்கிஸ்ரோர்ஸ், 151, பஜார்வீதி. வவுனியா. 1738

## தையற் கலை

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற தையற்கலை நிபுணர்களால்ஆண்களுக்கும்,பெண்களுக்குமானஎல்லா உடைகளையும் விஞ்ஞான முறையில் வெட்டுவதற்கும், தைப்பதற்கும் சிறந்த விளக்கப் படங்களுடன் தமிழில் தபால்மூலம்பயிற்சியளிக்கப் படுகிறது.

இலவச விபரங்களுக்கு: மனேஜர், The Modern Scientific School of tailoring and Dress Making, 49, Baseline Road, Colombo-8. 1739

## விற்பனைக்கு

E L 2131 போட் கொன்சல் கார் புத்தம் புதிய நிலையில் விற்பனைக்குண்டு. பெயின்ற், மெத்தை புதியவை. பற்றரி, ரயர் நல்ல நிலையில் உள்ளது. தொடர்பு கொள்க. ஏ. ஐயாத்துரை, உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு. 1735

காணி

நீராவியடி பிரவுண்ரேட் 1-ம் ஒழுங்கையில் 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு க. செல்வத்துரை, 118, அரசடிரேட், கந்தர்மடம். 1724

A. 40 கார் நம்பர் C. N. 4887. புதிய கடைச்சல் பட்டடைகள் (Lathes) நீளம் 6', 8', 10'. பழைய கடைச்சல் பட்டடைகள் நீளம் 4', 8'. விற்பனைக்கு உண்டு. நெல்லியடி இன்டஸ்றியல் வேக்ஸ், நெல்லியடி. 1726

## கல்வி

1-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை தரம் வாய்ந்த ஆசிரியையால் சகல பாடங்களும் 1-1-70ல் இருந்து கற்பிக்கப்படும். விபரங்கட்கு: 107, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1736

புதுமையான அமைப்பில் ஆக்கப்பட்ட
தங்க. வைர நகைகளுக்குப் புகழ்பெற்றது,
உத்தரவாதமுள்ள நகைகளைத் தருவது,
உங்கள் மனதுக்குப் பிரியமான நகைகளை
வழங்குவது




தெய்வா நகை மாளிகை

தொலைபேசி எண்: 512

இன்றைக்கே விஜயஞ்செய்யுங்கள்!
உங்கள் இதயங்கவர்ந்த நகைகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்!

தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்!

வெறும் புத்திபூர்வமான உழைப்பு உள்ளத்தின் திருப்திக்காகத்தான். அதற்கு ஊதியம் எதையும் எதிர்பார்க்கக்கூடாது. உணவுக்காக உழைக்க வேண்டுமென்ற விதியைப் பின்பற்றுவதன்மூலம் சமூகத்தில் அமைதியான புரட்சி ஏற்படும். உயிர் வாழ்வதற்குப் போராடுவதற்குப் பதிலாக பரஸ்பர சேவைக்காகப் போராடுவது மனிதனின் வெற்றியாகும்.

0 0 0

உலகம் முழுவதும் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. பணக்காரர்களைக் கண்டு ஏழைகள் பொருமைப்படுகிறுர்கள். எல்லோரும் தமது உணவுக்காக உழைத்தால் அந்தஸ்துகள் மறைந்து விடும்.

மில்க்வைற் நீல சோப்
50 மேலுறைகளை கொடுத்து ஒரு 1970-ம் ஆண்டு கலண்டரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.
கிளை:
மில்க் வைற் டிப்போ
83, ஜிந்துப்பிட்டிவீதி,
கொழும்பு-13.

# 'ஆங்கிலத்தில் அனுப்புவதால் சட்டத்தை மீறுகிறார்களாம்'

## அரசகரும மொழிச் சட்டத்தை முழுதாக அமுலாக்க உத்தரவு

கோட்டை, ஞாயிறு அரசகரும மொழிச் சட்டத்தை (சிங்களம் மட்டும்) முழுமையாக அமுல் நடத்துமாறும் இவ்விதம் செய்வதற்கான சகல நடவடிக்கையும் எடுக்குமாறும் எதிர்காலத்தில் இது சம்பந்தமாக எதுவித புகாரும் கிடைக்க இடம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் கல்விமா அதிகாரி திரு. டி. நி. தயாரத்ன கல்வி அமைச்சைச் சேர்ந்த சகல திணைக்கள தலைவர்களுக்கும் மாவட்ட அதிகாரிகளுக்கும் பகுதித் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் அறிவித்துள்ளார்.

கல்விமா அதிகாரி அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசகரும மொழிச்சட்டத்திற்கு முரணுக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள கடிதங்களிலேயே திணைக்களங்களுக்கிடையில் இப்போதும் தொடர்பு கொள்ளப்படுகின்றதென்றும் கல்வி அமைச்சின் பல மாவட்ட கல்வி திணைக்களங்கள், மாவட்டக் காரியாலயங்கள் ஆகியன இவ்விதமே நடந்து கொள்கின்றன என்பதனை அரசகரும மொழி திணைக்கள கமிஷனர் பல தடவைகளில் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் (கமிஷனர்) அனுப்பிவைத்துள்ள நிருபம் வருமாறு:-

23-9-63-ம் திகதிய அமைச்சரவையின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விபரத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த உத்தரவு திணைக்களங்களாலும் கார்ப்பரேஷன்களாலும் அமுல்நடத்தப்படவேண்டும்

ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பும் உத்தியோகஸ்தர்கள் அரசகரும மொழிக் கொள்கை சம்பந்தமாக அமைச்சரவை தெரிவித்துள்ள முக்கிய உத்தரவை மீறுகிறுர்கள்.

1-1-64-ம் வருடத்துக்குப் பின் திணைக்களங்களுக்கிடையிலான கடிதத் தொடர்புகள் கண்டிப்பாக அரசகரும மொழியிலேயே இருக்க வேண்டும். இதுவிஷயத்தில் திணைக்களங்களின் அதிகாரிகள், கார்ப்பரேஷன் அதிகாரிகள் ஆகியோர் முக்கிய பொறுப்பாளிகளாகவுள்ளனர்''.

ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 15-ந் திகதி [30-12-69]

## தமிழிசைச் செல்வம்

சென்னையிலே நடைபெற்ற தமிழிசைவிழாவிலே தலைமைவகித்த தமிழக அமைச்சரான மதியழகன் அவர்கள் தமிழிசை வளர்ச்சிக்காக சில யோசனைகளைக்கூறினுர்.

தேவாரம், திருப்புகழ், பிரபந்தம் போன்று எண்ணற்ற பாடல்கள் பக்தியைப்பற்றியே ஏராளமாக இருந்துவிட்டனவென்றும், தமிழிசை மேலும்செழித்தோங்க, தமிழில் பல துறைகளைப்பற்றியும் சாகித்திய கர்த்தாக்கள் பண்இசைக்க முன்வரவேண்டுமென்றும் அவர்கேட்டுக்கொண்டார்.

விழா மண்டபத்தில் முன்வரிசையில் உட்கார்ந்திருப்பவர்களுக்குமட்டும் சங்கீதம் என்றில்லாமல், ''மக்களிசையாக'' இருக்கவேண்டுமென்றும், பாமர மககளின் மனதையும் தொடும்படியாக இசை அமைதல் அவசியமென்றும் அமைச்சரவர்கள் சரியாக அறிவுறுத்தினுர்.

அமரகவி பாரதியார் தேசியம், சமூகம், இலக்கியம், தெய்வீகம் முதலிய பலவிதமான பாட்டுக்களைப் பாடி வைத்துள்ளார். மற்றும் பலபல கவிஞர்கள் இப்படியே பக்தியை வளர்ப்பதைவிட கணக்கற்ற தனிப்பாடல்கள் பாடியுள்ளனர். அதிலும் இன்றைய தமிழ் சினிமாப் பாட்டுக்களைப்பற்றிய 'டப்பா' சங்கீதமாகவே உள்ளன. பக்தியை வளர்ப்பது மிகமிகக்குறைவு.

என்றுலும் மற்றப் பாடல்கள் எல்லாம் சொற்ப காலம் பிரமாதப்பட்டுவிட்டு பின்னர் மறைந்துவிடுகின்றன. ''டிங்கிரி டிங்காலே'', ''ஏரு பூட்டிப் போவாயே'' போன்ற கணக்கற்ற சினிமாத் தமிழ்ப் பாடல்கள் வந்து தமிழ்ப் பொதுமக்களின் செவிப்புலனைச் சிறிது காலம் அதிகம் கவர்ந்தன. ஆனுல் பின்னர் அவை இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இப்போது அப்பாடல்களை மக்கள் விரும்பிக்கேட்பதில்லை.

ஆனுல் ஆயிரம் வருடங்களுக்கு முன்னுல் தமிழகத்திலே அருளாளர்கள் பாடிய ''தோடுடைய செவியன்'' மூதலிய தேவார, திருவாசகப் பாடல்களை இன்றும் தமிழ்ச் சிறுவர்களும் விரும்பிப் பாடுவதைக் கேட்கிறேம். திருவெம்பாவைப் பாடல்கள் தெருக்களிலும், வானொலியிலும் முழங்குகின்றன. ஏன்?

இசையின் மேலான நோக்கம் மனிதனின் மனதை நெகிழவைத்து, கல்லைப் பிசைந்து கனியாக்கி அவனைத் தெய்வமாக்குவதே. அவ்வித சக்தியுள்ள அருட்பாடல்களே நீடு வாழ்கின்றன. மற்றவை அற்பாயுளில் மறைகின்றன தன்னையே பிறருக்கு அர்பணிக்கச்செய்துவிடக்கூடிய அவ்வித மேலான தமிழிசைச் செல்வம் ஏராளமாக இருப்பது தமிழ் மக்கள் பெற்ற பெரும் பேறேயாகும்.

## வாரசாரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப் போகிறுர்கள்?

பல்கலைக்கழகம் என்றதும் வடக்கில் வேண்டும், கிழக்கில் வேண்டும், வடக்கிலும் கிழக்கிலும் வேண்டும் என்று பல குரல்கள் ஒலிக்குமென்பதும் இந்த வேடிக்கையைப் பார்த்து ஏதாவது கண்துடைப்புக்கு ஒரு வழி காணலாமென்பதும் கல்வி அமைச்சரின் நோக்கமாக இருக்கலாம். அவர் புத்திசாலி!

0 0 0

கொழும்பு நகரின் புதிய மேயராக திரு. வின்சென்ட் பெரேரா தெரிவு செய்யப்படுவார் என்பது இப்போது உறுதியாகிவிட்டது. 47 அங்கத்தவர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் 32 பேர் ஐக்கியதேசீயக்கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள்கூடி, திரு. வின்சென்ட் பெரேராவை மேயராகத் தெரிவு செய்வதென்று தீர்மானித்திருக்கின்றனர். பலவருடங்களுக்குப்பின் ஒரு தமிழரை கொழும்பு நகர மேயராகத் தெரிவுசெய்யும் வாய்ப்பிருப்பதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன. அடுத்த தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் ஒருதமிழரை தலைநகரின் மேயராக்கினுல் அதன்விளைவு எப்படியிருக்குமென்பதை ஐக்கிய தேசியக்கட்சியினர் அறியாமலில்லை. தேசீய ஐக்கியமும் தேசீய ஒருமைப்பாடும் வாக்குகளை இழந்தாலும், பதவிபோனுலும் நிலைநாட்டப்படவேண்டுமென்ற துணிச்சல் இங்கு யாருக்கு இருக்கிறது.

## மீட்புவேலைக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுககு அவசர அழைப்பு விடுத்துளளார்,

20 லட்சம்ரூபாவை வெள்ளத்தால் பாதிககப்பட்டவர்களுககு நிவாரண உதவியாக வழங்குவதற்கு சமூகசேவைகள அமைச்சு திறைசேரியிடம் அனுமதிகோரியுளளது

மட்டககளப்புவாவியில் நீர்மட்டம் 5 அடி அதிகரித்துளளது,

### புயல் அபாயம்

அடுத்த இருபத்திரண்டு மணி நேரத்துககு புயல் அபாயமும் இருககுமென அவதான நிலையம் எச்சரிககை விடுத்துள்ளது. மீனவர்களை கடலுககுப் போகவேண்டாமென எச்சரிககை செய்துள்ளது.

### நாகபாம்புமா

[15ம் பக்கத் தொடர்ச்சி]

நிகழ்வது, நாகங்கள் தெய்த்தன்மை உடையன என்பதை உணர்த்துகின்றது. நாகங்கள தெய்வீக வணக்கத்துக்கு உள்ளவை என்பதையும், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவை என்பதையும் எனது அனுபவ வாயிலாகக் கண்டிருக்கிறேன். நயினுதீவு நாகம்மாள் கோவிலில், நாகம் வழிபட்டதாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதைகளால் நாகத்துக்கும் தெய்வீக வழிபாட்டுக்கும் தொடர்பு உண்டென்பதை நாம் உணரக் கூடியதாகவே இருக்கின்றது.

விற்பனைக்கு

கார்:
E. N. 9000 தொடர்பிலக்கஏ 50 கேம்பிரிட்ஜ், றிம்சைஸ் 15 விற்பனைக்குண்டு, தொடர்புகொள்ளவும். 147. கண்டிறேட், யாழ்ப்பாணம். தொலைபேசி 280.
1625

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 630.930
பிறிப்போயா, போயா2-30 மணி
மனேகர், பி.எஸ்,சரோஜா
நடித்த
வண்ணக்கிளி

## மரண அறிவித்தல்

இணுவில் கந்தர் சிவசம்பு காலமாகிவிட்டார். சின்னத்தங்கத்தின் அள்புககணவரும், கனகசபாபதி (கொழும்பு சுங்க இலாகா), செல்லாபரணம், காலஞ்சென்ற கௌரியம்மா, பராசக்தி, சரஸ்வதி ஆகியோரின் தந்தையும், கார்த்திகேசு, காலஞ்சென்ற செல்லையா, குணபூஷணி, சோதிப்பெருமாள்(இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை ஆசிரியர்) ஆகியோரின் மாமனுரும் ஆவார். 30-12-69 (இன்று) காலை 10 மணிககு காரைககால் மயானத்தில் ஈமககிரிகைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுககொளளவும், தகவல்: கே. எஸ். ஆனந்தன் (பேரன்), கௌரிவாசா, இணுவில், 1467

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்கழி 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org